உ

# செந்தமிழ் மொழி வளம்.

புதியபதிப்பு

தொகுத்தவர்

பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை

To.

C. Rajagopalapillai Avl

Jameendar

அபிப்பிராயத்தின் பொருட்டு.

From.

V. S. Sambandhan

உ

# செந்தமிழ் மொழி வளம்

( தமிழைப் பிழையறப் பேசவும் எழுதவும் பயிற்றுவது )

467

**பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை**

தொகுத்தது.

*யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை ஆசிரியர் :*

**மு. கணபதிப்பிள்ளையால்**

யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

**புதியபதிப்பு,**

ஜய ௵ ஆனி ௴

(*Copy Right Reserved.*)

**1954**

[ *விலை ரூபா* 1–60.

உ

# நான்முகம்.

நந் தமிழ் மொழி தொன்மை யுடையது; தெய்வத் தன்மை யுடையது; பூரண இலக்கண வரம்பிற்கமைந்தது; முத்தமிழ்ச் சங்கத்தினரால் வளர்க்கப்பெற்றது; செய்யுணடையாகவும் வசனநடையாகவும் வழங்குவது; இன்னும் பலசிறப்புக்கள் பூண்டது.

தமிழ்மக்கள் இக்காலத்தில் அந்நிய மொழியையும் சீவனார்த்தமாகக் கற்கவேண்டிநேர்ந்ததால் அம் மொழிக்குரிய சில சொற்கள், இலக்கணங்கள், கொள்கைகள் இச் செந்தமிழ் மொழியோடு வந்து விரவ, காலந்தோறும் செந்தமிழ் மரபு குன்றத் தலைப்பட்டது. இக்காலத்திலே கற்றார் என்றிருப்போர் சிலர் தமிழ்மொழியைக் காலத்திற்கேற்றவாறு திருத்தவேண்டுமெனத் தலைப்பட்டு உள்ளதையுங் கெடுத்துவிட்டனர். நன்னூல் முதலிய தமிழ் இலக்கணநூல்கள் "கடினம்" என்ற காரணம் பற்றி இக்காலத்திற் பயிற்றப்படாது கைவிடப்பட்டன. இதனாலே தமிழ் வசன நடையும் பேச்சும் விபரீதமுறலாயின.

தமிழ் மொழியையாக, வேறெந்த மொழியையாக அந்த மொழிகளுக்குரிய இலக்கணங்களிற் பயிற்சியின்றிப் பேசவும் எழுதவும் புகின் அவை சிறப்படையா; இக்காரணம்பற்றிப்போலும் பள்ளிக்கூட மாணவர்களுக்குச் சிரமமின்றி இலக்கணம்பயிற்றும் நோக்கங் கொண்டு தமிழ்மொழியிற் சிற்றிலக்கணநூல்கள் சில இந்நாட்களில் வெளிவரலாயின.

இங்ஙனமாக, எனது மாணாக்கர்களாக இருந்தவர்களும், இப்பொழுது சிறந்த உபாத்தியாயர்களாக இருப்பவர்களுமாகிய அபிமானிகள் பலர், தமிழ் ஆங்கில

கலாசாலைகளிற் பயிலும் மாணவர்களுக்கேற்ற இலகுவான முறையில் ஒரு தமிழிலக்கண நூலைத் தொகுத்துத் தரும்படி கேட்டார்கள்; நீடித்தகாலந் தமிழ்ப் போதகாசிரியனாகவும், பத்திராசிரியனாகவுங் கடமையாற்றியதாற் பெற்ற எனது அனுபவத்தைக்கொண்டு இச்சிறுநூலை என் சிற்றறிவிற்கு எட்டியவாறு இயற்றலானேன். இது ஒரு பூரணமான தமிழ் இலக்கண நூலெனச் சொல்லத் துணிந்திலேன்; ஆயினும், தமிழ் பயிலும் மாணாக்கர்களுக்கும், ஏனைய தமிழ் மக்களுக்கும் தமிழ்மொழியை ஒருவாறு பிழையற எழுதுதற்கும், பேசுதற்கும் இச்சிறு நூல் சாதனமாகுமென்று எண்ணுகிறேன். இந்நூலை ஆதரிப்போர் இதன்கண் நீக்கவேண்டியன, சேர்க்க வேண்டியன, திருத்தவேண்டியன எவையும் புலப்படுமேல், அவற்றை எனக்குத் தெரிவிக்கின் நன்றியறிதலுடன் ஏற்று, அங்ஙனம் நீக்கியும், சேர்த்தும், திருத்தியும் வைப்பேன் என்பதை விநயத்துடன் தெரிவிக்கின்றேன்.

ம. வே. திருஞானசம்பந்தன்.

வண்ணார்பண்ணை
13-6-54

# விஷய அட்டவணை.

பக்கம்.


**முதல் அதிகாரம்** 1

தமிழ் எழுத்துக்கள், உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்துக்கள், ஆய்த எழுத்து, சுட்டெழுத்துக்கள், வினா எழுத்துக்கள், மாத்திரை, குற்றியலுகரம், சொல்லின் முதலில் வரும் எழுத்துக்கள், சொல்லின் இறுதியில் வரும் எழுத்துக்கள், எழுத்துக்களின் சாரியை, பரீக்ஷை வினா, எழுத்து (இனம் தொகை).

**இரண்டாம் அதிகாரம்** 7

சொல், சொல்லின் பாகுபாடு, பகுபத உறுப்பு, பகுதி, விகுதி, இடைநிலை, விகுதி காலங்காட்டல், சாரியை, சந்தி, விகாரம், பரீக்ஷைவினா.

**மூன்றும் அதிகாரம்** 14

புணர்ச்சி, மெய்க்குமுன் உயிர் புணர்தல், உயிர்முன் உயிர் புணர்தல், சுட்டுமுன்னும் வினாமுன்னும் நாற்கணமும் புணர்தல், குற்றுகரமுன்னுஞ் சில முற்றுகரமுன்னும் உயிரும் யகரமும் புணர்தல், உயிர்முன்னும் யரழமெய்முன்னும் வல்லினம் புணர்தல், உயிரீற்றின் முன்னும் யரழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் புணர்தல், குற்றியலுகரஈறு, மெல்லினம் மிகுதல், ணகர னகர ஈறு, லகர ளகர ஈறு, தகர நகரந் திரிதல், பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்று ண, ன, ல, ள, மகர ஈறு, வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறநடை, பரீக்ஷை வினாக்கள்.

**நான்காம் அதிகாரம்** 25

ழகர ளகர பேதம், ழகர ளகர பேதமின்றி ஒரே பொருளில் வருஞ் சொற்கள், பரீக்ஷை வினாக்கள்.

**ஐந்தாம் அதிகாரம்** 33

பெயரியல், ஆண்பால் பெண்பால் உதாரணங்கள், ஒன்றன் பாலில் ஆண்பெண்ணைக் குறிக்கும் சில சொற்கள், ஆண் பாலையும் பெண்பாலையும் குறிக்கும் பொதுச் சொற்கள், வேற்றுமை, வேற்றுமைமுடிபு, ஆகுபெயர், எதிர்ப்பொருள் கொண்ட சொற்கள், பரீக்ஷை வினா.

**ஆறும் அதிகாரம்** 42

வினைச்சொல், முற்றுவினை, தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று. முன்னிலை யேவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று, செய்யு மென்முற்று, பொது வினைக் குறிப்பு, பெயரெச்சம், வினையெச்சம், தெரிநிலைவினைப்

பக்கம்.

பகுப்பு, வினையாலணையும் பெயர், நில் என்னும் வினைச் சொல்லை ஐம்பால் மூவிடம் முக்காலங்கள் அமைய உடன்பாட்டுப் பொருளிற் கூறுதல், எதிர்மறைப் பொருளில், பரீக்ஷை வினா,

ஏழாம் அதிகாரம் 50

பெயராகவும் வினையாகவும் வெவ்வேறு பொருளில் வழங்கும் (சில) சொற்கள், பலபொருள் குறித்த ஒருசொல், ரகர லகரத்தை முதலாகவுடைய வடமொழிப் பதங்கள் தமிழில் வழங்கும் முறை, பரீக்ஷை வினா,

எட்டாம் அதிகாரம் 56

பிழையாக வழங்குஞ் சொற்களும் அவற்றின் திருத்தமும், இருவகையாகவும் வழங்குஞ்சொற்கள், பரீக்ஷை வினா.

ஒன்பதாம் அதிகாரம் 62

தொகைச் சொல்வர்க்கம், பரீக்ஷை வினா.

பத்தாம் அதிகாரம் 68

தன்வினை பிறவினைகள், இடைச்சொல், உரிச்சொல், செய்வினை செயப்பாட்டுவினைகள், செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக ஆக்குதல், செயப்பாட்டு வினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கிய மாக்குதல், தொகைநிலைத்தொடர், வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை, தொகாநிலைத்தொடர், பரீக்ஷை வினா.

பதினோராம் அதிகாரம் 75

போலி, வடசொற்கள் தமிழில் வழங்கும் முறை, ஒழிபு, பரீக்ஷை வினா, (பதம்சொல் விளக்கம்.)

பன்னிரண்டாம் அதிகாரம் 80

இணைச்சொற்கள் (பொருளுடன்), அடுக்குச் சொற்கள், பரீக்ஷை வினா.

பதின்மூன்றாம் அதிகாரம் 84

உவமை வாக்கியங்கள், பரீக்ஷை வினா.

பதின்நான்காம் அதிகாரம் 93

தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி (திரட்டு), பரீக்ஷை வினா

பதினைந்தாம் அதிகாரம் 109

சிலேடை வாக்கியங்கள், பரீக்ஷை வினா.

அநுபந்தம் I

சிறந்த வசனங்கள் சில.

# செந்தமிழ் மொழி வளம்

## தமிழ் (ஆரம்ப) இலக்கணம்

### முதல் அதிகாரம்

### தமிழ் எழுத்துக்கள்

**த**மிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் உயிரெழுத்து, மெய் யெழுத்து, உயிர்மெய்யெழுத்து, ஆய்த எழுத்து என நான்கு வகைப்படும்.

### உயிரெழுத்து

அ தொடக்கம் ஔ முடியவுள்ள பன்னிரண்டும் உயி ரெழுத்துக்களாகும். உயிரெழுத்துக்கள், குற்றெழுத்து (குறில்) நெட்டெழுத்து (நெடில்) என இரண்டு வகைப்படும். குற் றெழுத்துக்களாவன: அ, இ, உ, எ, ஒ; நெட்டெழுத்துக்க ளாவன: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ. குறுகிய ஓசையுடை யவை குற்றெழுத்துக்கள்; நெடிய ஓசையுடையவை நெட்டெழுத் துக்கள்.

### மெய்யெழுத்து

க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் இப் பதினெட்டும் மெய்யெழுத்தாகும்; இம் மெய் யெழுத்து வல்லெழுத்து (வல்லினம்), மெல்லெழுத்து (மெல்லி னம்), இடையெழுத்து (இடையினம்) என மூன்று இனமாகும். வல்லெழுத்துக்கள்: க், ச், ட், த், ப், ற் என்பன, மெல்லெழுத்துக் கள்: ங், ஞ், ண், ந், ம், ன் என்பன. இடையெழுத்துக்கள்: ய், ர், ல், வ், ழ், ள் என்பன.

உச்சரிக்கும்போது வலிய சத்தத்தோடு பிறப்பவை வல்லினம் என்றும், மெல்லிய சத்தத்தோடு பிறப்பவை மெல்லினம் என்றும், இடையான சத்தத்தோடு பிறப்பவை இடையினம் என்றும் சொல்லப்படும். மெய்யெழுத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் மேலே ஒவ்வொரு புள்ளியுண்டு.

## உயிர்மெய் எழுத்துக்கள்

உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் கூடிவரும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். க் மெய்யெழுத்து அ உயிரெழுத்து, க்+அ=க; இப்படியே க முதல் னௌ ஈருகவுள்ள எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்களாம்; பன்னிரண்டு உயிரெழுத்தும் பதினெட்டு மெய்யெழுத்துக்களோடு தனித்தனி கூடி வருவதால் (12 x 18) இருநூற்றுப் பதினாறு உயிர்மெய் எழுத்துக்கள் உண்டாகின்றன. இவ்வுயிர்மெய் எழுத்துக்கள் ஆறு இனமாகத் தொகுக்கப்படும்:-

| | |
|---|---|
| வல்லின உயிர்மெய்க் குறில் | (6 x 5 = 30) |
| மெல்லின உயிர்மெய்க் குறில் | (6 x 5 = 30) |
| இடையின உயிர்மெய்க் குறில் | (6 x 5 = 30) |
| | 90 |
| வல்லின உயிர்மெய் நெடில் | (6 x 7 = 42) |
| மெல்லின உயிர்மெய் நெடில் | (6 x 7 = 42) |
| இடையின உயிர்மெய் நெடில் | (6 x 7 = 42) |
| | 126 |

90 + 126 = 216 உயிர்மெய் யெழுத்துக்கள்.

## ஆய்த எழுத்து

மூன்று புள்ளி வடிவுடையதாய் வரும் இந்த ஃ எழுத்து ஆய்தம் எனவும், தனியெழுத்து எனவுஞ் சொல்லப்படும். இது குற்றெழுத்திற்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் இடையே வரும்; அஃது, எஃகு (உருக்கு). தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்களின் தொகை:

| | | |
|---|---|---|
| உயிரெழுத்து | ... | 12 |
| மெய்யெழுத்து | ... | 18 |
| உயிர்மெய்யெழுத்து | ... | 216 |
| ஆய்தம் | ... | 1 |
| | | 247 |

## சுட்டெழுத்துக்கள்

மேலே சொல்லப்பட்ட எழுத்துக்கள் சுட்டிக்காட்டும் பொருள்படச் சொற்களின் முதலிற் சேர்ந்து வரும்போது சுட்டெழுத்துக்கள் எனப்படும். அவை அ, இ, உ என்னும் மூன்றுமாம். இச் சுட்டுக்கள் அகச் சுட்டு, புறச் சுட்டு என இருவகைப்படும். அவன், இவன், உது என்னும் சொற்களில் அ, இ, உ என்னும் மூன்றும் முறையே அவ்வச் சொற்களோடு கலந்து வருவதால் அகச் சுட்டு எனப்படும்; அம் மனிதன், இப் பெண், உவ்வீடு என்பவற்றில் அ, இ, உ என்னுஞ் சுட்டுக்கள் மூன்றும் மனிதன், பெண், வீடு என்னும் சொற்களுக்குப் புறத்தே (முன்பு) நின்று சுட்டிக் காட்டுதலாற் புறச் சுட்டு ஆகும். அந்த, இந்த, உந்த, அங்கு, இங்கு, உங்கு என்பன சுட்டுப் பொருளில் வரும் சொற்களாகும்.

## வினு எழுத்துக்கள்

ஆ, எ, ஏ, ஓ என்னும் நான்கு உயிரெழுத்துக்களும் யா என்னும் உயிர்மெய் எழுத்தும் வினப் பொருளில் வரும்போது வினு எழுத்தாகும். இவற்றுள் எ, யா சொல்லின் முதலிலும், ஆ, ஓ சொல்லின் இறுதியிலும், ஏ சொல்லின் முதலிலும் இல்லையேல் ஈற்றிலும் வினப்பொருளில் வரும்.

எவன் ? } சொல்லின்
யார் ? } முதலில்

அவனு ? } சொல்லின்
அவனே ? } இறுதியில்

ஏது ? } சொல்லின்
ஏன் ? } முதலில்

இவன் உன் மகனே ? } சொல்லின்
இவள் உன் மகளே ? } இறுதியில்

## மாத்திரை

தமிழிலுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும் நேரம் மாத்திரையினால் அளவு செய்யப்படுகிறது. கண்ணிமைப் பொழுது அல்லது கைந்நொடிப் பொழுது ஒரு மாத்திரையாகும்.

உயிர் நெடிலுக்கும் உயிர்மெய் நெடிலுக்கும் தனித்தனி மாத்திரை இரண்டு; உயிர்க் குறிலுக்கும் உயிர்மெய்க் குறிலுக்கும் தனித்தனி மாத்திரை ஒன்று; மெய்யெழுத்து, ஆய்தம், குற்றியலுகரம் என்னுமிவைகளுக்குத் தனித்தனி மாத்திரை அரையாகும். உயிர்மெய் நெடிலுக்கும் குறிலுக்கும் அவற்றுடன் சேர்ந்த மெய்யெழுத்தின் மாத்திரை கெட, முறையே மாத்திரை இரண்டும் ஒன்றுமாகும். எழுத்துக்களின் மாத்திரை பாட்டுக்களில் வரும்போது நுட்பமாக அவதானிக்கப்படும்.

## குற்றியலுகரம்

தனிக் குற்றெழுத்தல்லாத மற்றை எழுத்துக்களுக்குப் பின்னே சொல்லினிறுதியிலே வல்லின மெய்யின்மேல் ஏறி நிற்கும் உகரம் குற்றியலுகரமாகும்; குறு இயல் உகரம் குற்றியலுகரம் என்றாயிற்று; ஒரு மாத்திரையினின்றுங் குறைந்து அரை மாத்திரையான உகரம் குற்றியலுகரமாகும். கு, சு, டு, து, பு, று என்னுமிவைகளே குற்றியலுகரமாய் வருவன; குற்றியலுகரம் ஈற்றயல் எழுத்தை நோக்கி ஆறு வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | நெடிற்றொடர் | ... | பாகு |
| 2. | வன்றொடர் | ... | கச்சு |
| 3. | மென்றொடர் | ... | வண்டு |
| 4. | இடைத்தொடர் | ... | மார்பு |
| 5. | உயிர்த்தொடர் | ... | வயிறு |
| 6. | ஆய்தத் தொடர் | ... | இஃது |

## சொல்லின் முதலில் வரும் எழுத்துக்கள்

மெய்யெழுத்துக்கள் ஆய்தம் உயிர்மெய் எழுத்துக்களுட் சில சொல்லின் முன் வரா; உயிரெழுத்துப் பன்னிரண்டும் சொல்லின்

முதலில் வரும் க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்களும் பன்னிரண்டு உயிரெழுத்துக்களோடுந் தனித்தனி சேர்ந்து சொல்லின் முன்வரும்; வ், ய், ஞ் என்னும் மூன்று மெய்களுள் வ் எட்டு உயிரோடும், ய் ஆறு உயிரோடும், ஞ் நான்கு உயிரோடும் சொல்லின்முன் வரும்; ரங்கன், ராமன், ராணி என எழுதுதல் பிழையாகும்; இவை முறையே அரங்கன், இராமன், இராணி என்றிருத்தல் வேண்டும்.

## சொல்லின் இறுதியில் வரும் எழுத்துக்கள்

உயிரெழுத்துக்களுள் எ ஒழிந்த பதினொரு எழுத்துக்களும், மெய்யெழுத்துக்களுள் ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொன்றுமாக இருபத்திரண்டு எழுத்துக்கள் சொல்லின் இறுதியில் (முடிவில்) வருவனவாகும்.

## எழுத்துக்களின் சாரியை

மெய்யெழுத்துக்கள் அகரச் சாரியையும், உயிர் நெட்டெழுத்துக்கள் காரச் சாரியையும், உயிர்க் குற்றெழுத்துக்களும், உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் கரம் காரம் என்னும் இரண்டு சாரியையும் பெற்று வழங்கும்.

## பரீக்ஷை வினா

1. தமிழ் மொழியிலுள்ள எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்?
2. மெய்யெழுத்துட் சிலவற்றை வல்லினம் என்றும், வேறு சிலவற்றை மெல்லினம் என்றும், இன்னும் சிலவற்றை இடையினம் என்றும் சொல்வதற்கு நியாயம் என்ன?
3. ஆய்த எழுத்து எது? அது எந்த இன எழுத்துக்களுக்கிடையில் வரும்?
4. தமிழ் நெடுங்கணக்கில் 247 எழுத்துக்கள் எப்படி வந்தன?
5. சுட்டெழுத்துக்களெவை? எத்தனை வகைப்படும்.
6. வினா எழுத்துக்களெவை? உதாரணங் காட்டி விளக்குக.
7. மாத்திரையாவது யாது? தனித்தனி அரை மாத்திரை உள்ள எழுத்துக்களெவை?
8. அறுவகைக் குற்றியலுகரங்களையும் உதாரணங் காட்டி விளக்குக.

# எழுத்து (இனம், தொகை)


முதல்–30
சார்பு–369
உயிர்–12
மெய்–18
குறில் 5
நெடில் 7
வலி 6
மெலி 6
இடை 6
உயிர்மெய் 216
முற்றாய்தம் 8
உயிரளபெடை 21
ஒற்றளபெடை 42
குற்றியலிகரம் 37
குற்றியலுகரம் 36
ஐகாரக் குறுக்கம் 3
ஔகாரக் குறுக்கம் 1
மகரக் குறுக்கம் 3
ஆய்தக் குறுக்கம் 2
நெடிற் றொடர்–7
ஆய்தத் தொடர்–1
உயிர்த் தொடர்–11
வன் றொடர்–6
மென் றொடர்–6
இடைத் தொடர்–5

## இரண்டாம் அதிகாரம்

## சொல்

ஓர் எழுத்தாலாயினும் இரண்டு முதலிய பல எழுத்துக்களாலாயினும் ஆக்கப்பெற்று ஒரு பொருளையேனும் பல பொருளையேனும் குறிப்பது சொல்லாகும்.

ஓரெழுத்தாலாகிய சொற்கள்: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, கா, கை, கோ, சா, தா, தீ, தை, நீ, நை, நோ, பா, பூ, பை, போ, மா, மை, வா, வீ, வை; இரண்டு முதலிய பல எழுத்தாலாகிய சொற்கள்: ஆனை, மரம், துருவன், விநாயகர், தடுமாற்றம் ஆதியன.

### சொல்லின் பாகுபாடு

சொல் பதம் என்றும் சொல்லப்படும். இப் பதம் பகாப் பதம், பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுக்கப்படாத இயல்புடையது பகாப்பதம்.

உ – ம்: நிலம், நீர் ... பெயர்ப் பகாப்பதம்.
நட, வா ... வினைப் பகாப்பதம்.
மற்று, ஏ ... இடைப் பகாப்பதம்.
உறு, நனி, ... உரிப் பகாப்பதம்.

பகுக்கப்படும் இயல்புடையது பகுபதம்.

உ – ம்: பொன்னன் ... பெயர்ப் பகுபதம்.
நடந்தான் ... தெரிநிலைவினைப் பகுபதம்.
பெரியன் ... குறிப்புவினைப் பகுபதம்.

### பகுபத உறுப்பு

பகுபதமானது பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்னும் ஆறு உறுப்புக்கள் உடையது; அவற்றுள் பகுதி விகுதி என்னும் இரண்டு உறுப்புக்களாயினும் வருதல் வேண்டும்.

உ – ம்: கூனி = கூன் (பகுதி) + இ (விகுதி).
உண்டான் = உண் (பகுதி) + ட் (இடைநிலை) + ஆன் விகுதி.
உண்டனன் = உண் (பகுதி) + ட் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி).
பிடித்தனன் = பிடி (பகுதி) + த் (சந்தி) + த் (இடைநிலை) + அன் (சாரியை) + அன் (விகுதி).
நடந்தனன் = நட (பகுதி) + த் (சந்தி) + த் (இடைநிலை) அன் (சாரியை) + அன் (விகுதி) + சந்தியால் வந்த தகரம் நகரமானது விகாரம்.

## பகுதி

பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களே பகுதியாகும்.

பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப் பெயர்களும் பெயர்ப் பகுபதங்களுக்கும் குறிப்புவினைப் பகுபதங்களுக்கும் பகுதிகளாகும்.

உ – ம்: பொன்னன், நிலத்தன், தையான், பல்லன், கரியன், நடையன். பெயர்ப் பகுபதங்களுக்குங் குறிப்பு வினை முற்றுப் பகுபதங்களுக்கும் உதாரணம் இவையே.

அவன், எவன், பிறன், எனப் பெயர்ப் பகுபதங்களுக்குச் சிறுபான்மை இடைச்சொற்களும் பகுதிகளாய் வரும். நட, வா, முதலிய வினைச்சொற்கள் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பகுதிகளாகும்.

உ – ம்: நட நடந்தான்; வா வந்தான்.

சித்திரம் சித்திரித்தான், போல் போன்முன், சால் சான்முன் எனத் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குச் சிறுபான்மை பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களும் பகுதிகளாய் வரும்.

நட, வா முதலிய தெரிநிலைவினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாகுமிடத்து, சில பகுதிகள் வி, பி, து, சு என்னும் விகுதிகள் பெற்றும், சில பகுதிகள் நடுவே உள்ள மெல்லொற்று வல்லொற்றாய்த் திரியப்பெற்றும், சில பகுதிகள் நடுவே ஒற்றிரட்டப்பெற்றும் வரும்.

உ-ம்: (1) செய், செய்வி, செய்வித்தான்.
நட, நடப்பி, நடப்பித்தான்.
நட, நடத்து, நடத்தினான்.
பாய், பாய்ச்சு, பாய்ச்சினான்.
(2) உறங்கு, உறக்கு, உறக்கினான்.
உருகு, உருக்கு, உருக்கினான்.

## விகுதி

பகுபதங்களின் இறுதியிலே நிற்கும் இடைப் பகாப்பதங்கள் விகுதிகளாகும். இவற்றுள் அன், ஆன், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், ர், து, அ, வை என்னும் பதினைந்தும் பிறவும் பெயர் விகுதிகளாகும்.

உ-ம்: குழையன், வானத்தான், பிறன், குழையள், வானத்தாள், பொன்னி, பிறள், குழையர், வானத்தார், தேவிமார், கோக்கள், பிறர், அது, குழையன, அவை.

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, மை, து என்னும் பதினேழும் பிறவும் தொழிற் பெயர் விகுதிகள் ஆகும்.

உ-ம்: நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, நடவாமை, பாய்த்து.

மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர், என்னும் பத்தும் பிறவும் பண்புப்பெயர் விகுதிகளாகும்.

உ-ம்: நன்மை, தொல்வல, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர்.

அன், ஆன், அள், ஆள், அர், ஆர், து, று, அ, ஆ, ஏன், அம், ஏம், ஓம், ஐ, ஆய், ஈர், உம், மின், ஏல், க என்னும் இருபத்தொன்றும் பிறவுந் தெரிநிலைவினைமுற்று விகுதிகளாம்.

உ-ம்: நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடந்தது, போயிற்று, நடந்தன, நடவா, நடந்தேன், நடப்பம், நடப்பேம், நடப்போம், நடந்தனை, நடந்தாய், நடந்தீர், நடவும், நடமின், நடவேல், நடக்க.

இவ்விருபத்தொரு விகுதிகளுள், ஆ, உம், மின், ஏல், க என்னும் ஐந்து மொழிந்த பதினாறுங் குறிப்புவினைமுற்றுக்களுக்கும் விகுதிகளாம்.

உ-ம்: கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரிது, குழையிற்று, கரியன, கரியேன், கரியம், கரியேம், கரியோம், கரினை, கரியாய், கரியீர்.

அ, உம் என்னும் இரண்டுந் தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகளாம்.

உ-ம்: செய்த, செய்கின்ற, செய்யும்.

குறிப்புவினைப் பெயரெச்சத்துக்கு, இவைகளுள் அ ஒன்றே விகுதியாம்.

உ-ம்: கரிய.

உ, இ, ய், அ, கு, இன், ஆல், கால், மல், மே என்னும் பத்துந் தெரிநிலைவினையெச்ச விகுதிகளாம்.

உ-ம்: நடந்து, ஓடி, போய், உண்ண, உணற்கு, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்ணுமல், உண்ணுமே.

குறிப்புவினையெச்சத்துக்கு, இவ்விகுதிகளுள் அ, ஆல், கால், மல், மே என்பவைகளோடு து, றி என்பவைகளும் விகுதிகளாம்.

உ-ம்: மெல்ல, அல்லால், அல்லாக்கால், அல்லாமல், அல்லாமே, அல்லது, அன்றி.

இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும், வினைமுதற் பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப் பொருளையும் உணர்த்தும்.

உ-ம்: அலரி, பறவை, எச்சம்.
ஊருணி, தொடை, தேட்டம்.
மண்வெட்டி, பார்வை, நோக்கம்.

விடு, ஒழி விகுதிகள் துணிவுப்பொருளுணர்த்தும்.

உ-ம்: வந்துவிட்டான், கேட்டொழிந்தான்.

கொள் விகுதி தற்செயலுணர்த்தும்.

உ-ம்: அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள், செயப்பாட்டுவினைப் பொருளுணர்த்தும்.

உ-ம்: கட்டப்பட்டான். கட்டுண்டான்.

மை விகுதி தன்மைப்பொரு ளுணர்த்தும்.

உ-ம்: பொன்மை, ஆண்மை.

இரு, இடு என்பன, தமக்கென வேறு பொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

உ-ம்: எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

## இடைநிலை

பெயரிடைநிலை, வினையிடைநிலை என இடைநிலை இரண்டு வகைப்படும்.

பெயரிடைநிலைகள்: பெயர்ப் பகுபதத்திலே பகுதி விகுதிகளை வேறு பிரித்துப் பார்க்கும்போது, அவ்விரண்டுக்கும் இடை நிற்பவையெல்லாம் பெயரிடைநிலைகளாம்.

உ – ம்: அறிஞன் .... .... [ ஞ இடைநிலை ]
ஓதுவான் .... .... [ வ இடைநிலை ]
வலைச்சி .... .... [ ச இடைநிலை ]
வண்ணாத்தி .... .... [ த இடைநிலை ]

வினை இடைநிலைகள், இறந்தகால இடைநிலை, நிகழ்கால இடைநிலை, எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்.

இறந்தகால இடைநிலைகள்: இறந்தகால இடைநிலைகள் த், ட், ற், இன் என்னும் நான்குமாகும்.

உ – ம்: செய்தான், உண்டான், தின்றான், ஓடினான்.

நிகழ்கால இடைநிலைகள்: நிகழ்கால இடைநிலைகள் ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றுமாகும்.

உ – ம்: நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

எதிர்கால இடைநிலைகள்: எதிர்கால இடைநிலைகள் ப், வ் என்னும் இரண்டுமாகும்.

உ – ம்: நடப்பான், செய்வான்.

எதிர்மறை இடைநிலைகள்: இல், அல், ஆ என்னும் மூன்றுமாகும். இவற்றுள் ஆகார இடைநிலை, வருமெழுத்து மெய்யாயிற் கெடாதும், உயிராயிற் கெட்டும் எதிர்மறை இடைநிலைகள் வரும்.

உ – ம்: நடந்திலன், நடக்கின்றிலன்.
உண்ணலன்.
உண்ணாதான், உண்ணான்.

[ உண்ணாதான் என்பதிலே தகரமெய் எழுத்துப்பேறு ].

## விகுதி காலங் காட்டல்

மேற்சொல்லிய வினையிடைநிலைகளை ஏலாது விகுதியினாலே காலம் காட்டும் வினைகளும் சில உண்டு. அவை முன்னிலையேவல் வினைமுற்றுக்களும், வியங்கோள் வினைமுற்றும், செய்யுமென் வினை

முற்றும், செய்யுமென் வாய்பாட்டுப் பெயரெச்சமும், இகர யகர விற்றுச் செய்தென் வாய்பாட்டு வினையெச்சமும், செய, செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களுமாம்.

## சாரியை

அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஆம், அ, ஆ, உ, எ, ஐ, கு, து, ன் என்னும் பதினாறும் பிறவும் சாரியைகளாகும்.

உ-ம்: நடந்தனன், பசுவினைப், வளையல், பலவற்றை, பதிற்றுப்பத்து, அகத்தன், புளியங்காய், மண்ணாங்கட்டி, நடந்தது, இல்லாப் பொருள், உண்ணுவான், ஒன்றேகால், இரட்டைப்பிள்ளை, உண்குவான். செய்துகொண்டான், ஆன்.

## சந்தி

புணரியலிற் சொல்லப்படுவனவாகிய தோன்றல் முதலிய புணர்ச்சி விகாரம் மூன்றும் சந்திகளாகும்.

## விகாரம்

வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல், முதற்குறை, இடைக்குறை, கடைக்குறை என்னும் ஒன்பதும் செய்யுள் விகாரமாகும்.

## பரீக்ஷை வினா

1. ஓரெழுத்தாலாகிய சில சொற்கள் கூறுக.
2. பகுபதம் எத்தனை உறுப்புக்களினால் முடிவுபெறும்?
3. நடந்தனன் என்ற சொல்லுக்குப் பகுபதம் முதலியன எழுதுக?
4. தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பகுதிகள் எவை?
5. தொழிற்பெயர் விகுதிகளெவை?
6. இடைநிலை எத்தனை வகைப்படும்?
7. விகாரங்களாவன எவை?
8. எதிர்மறை இடைநிலைகள் எவை?

# மூன்றாமதிகாரம்

## புணர்ச்சி

நிலைமொழியும், வருமொழியும் ஒன்றுபடச் சேர்தல் புணர்ச்சி எனப்படும். வேற்றுமைப் புணர்ச்சி, அல்வழிப் புணர்ச்சி எனப் புணர்ச்சி இருவகைப்படும்.

ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறு உருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சியாகும்.

உ–ம்:

| வேற்றுமைத் தொகை | | வேற்றுமை விரி |
|---|---|---|
| நீர் குடித்தான் | [ ஐ ] | நீரைக் குடித்தான் |
| கல்லெறிந்தான் | [ ஆல் ] | கல்லாலெறிந்தான் |
| கொற்றன் மகன் | [ கு ] | கொற்றனுக்கு மகன் |
| மலைவீழருவி | [ இன் ] | மலையின் வீழருவி |
| சாத்தன் கை | [ அது ] | சாத்தனது கை |
| மலைநெல் | [ கண் ] | மலையின்கணெல் |

வேற்றுமை அல்லாத வழியிற் புணர்வது அல்வழிப் புணர்ச்சியாகும். அது பதினான்கு வகைப்படும்.

உ–ம்:

| | | |
|---|---|---|
| கொல்யானை | ... ... | வினைத்தொகை |
| கருங்குதிரை | ... ... | பண்புத்தொகை |
| சாரைப்பாம்பு | ... ... | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| மதிமுகம் | .... ... | உவமைத் தொகை |
| இராப்பகல் | .... .... | உம்மைத் தொகை |
| பொற்றொடி | .... .... | அன்மொழித் தொகை |
| சாத்தன்வந்தான் | ... ... | எழுவாய்த் தொடர் |
| சாத்தாவா | ... .... | விளித் தொடர் |
| வந்தான் சாத்தன் | .... ... | தெரிநிலை வினைமுற்றுத் தொடர் |
| பொன்னனிவன் | .... .... | குறிப்பு வினைமுற்றுத் தொடர் |
| வந்த சாத்தன் | ... .... | பெயரெச்சத் தொடர் |
| வந்து போனான் | .... .... | வினையெச்சத் தொடர் |

| | | |
|---|---|---|
| மற்றென்று | .... .... | இடைச்சொற் றொடர் |
| நனிபேதை | .... .... | உரிச்சொற் றொடர் |
| பாம்பு பாம்பு | .... .... | அடுக்குத் தொடர் |

சொற்கள் இயல்பாகவும் விகாரமாகவும் புணரும். நிலை மொழியும் வருமொழியும் எவ்வகையான விகாரமுமின்றிப் புணர் தல் இயல்புப் புணர்ச்சியாகும்.

உ-ம்: பொன்மலை, ஒளிமணி.

விகாரப் புணர்ச்சியாவது, நிலைமொழியேனும், வருமொழி யேனும், இவ்விரு மொழியுமேனும், தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றையாயினும் பலவற்றை யாயினும் பெற்றுப் புணர்வதாம்.

| | | |
|---|---|---|
| உ-ம்: வாழைப்பழம் | .... | தோன்றல் |
| மட்குடம் | .... | திரிதல் |
| மரவேர் | .... | கெடுதல் |
| நிலப்பனை | .... | கெடுதல், தோன்றல் |
| பனங்காய் | .... | கெடுதல், தோன்றல், திரிதல் |

## மெய்க்குமுன் உயிர் புணர்தல்

மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் வந்த உயிர் அந்த மெய் யின்மேல் ஏறும்.

உ-ம்: ஆண் + அழகு—ஆணழகு.

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின்முன் உயிர் வந்தால் அந்த மெய் இரட்டிக்கும்.

உ-ம்: கல் + எறிந்தான்—கல்லெறிந்தான்.

## உயிர்முன் உயிர் புணர்தல்

இ, ஈ, ஐ என்னும் மூன்றுயிரீற்றின் முன்னும் உயிர் வந் தால், இடையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம்: மணி + அழகு—மணியழகு.

தீ + எரியும்—தீயெரியும்.

பனை + ஓலை—பனையோலை.

எகாரவுயிரீற்றின் முன் உயிர் வந்தால் இடையில் யகரமாயினும் வகரமாயினும் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம்: அவனே + அழகன்—அவனேயழகன்.

சே + எறி—சேவேறி.

அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஒள என்னும் எழுயிரீற்றின் முன்னும் உயிர் வந்தால், இடையில் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ-ம்: பல + அணி—பலவணி.

பலா + இலை—பலாவிலை.

திரு + அடி—திருவடி.

பூ + அரும்பு—பூவரும்பு.

நொ + அழகா—நொவ்வழகா.

கோ + அழகு—கோவழகு.

கௌ + அழகு—கௌவழகு.

## சுட்டுமுன்னும் வினமுன்னும் நாற்கணமும் புணர்தல்

மூன்று சுட்டு முன்னும் எகர வின முன்னும் நாற்கணமும் யகரமொழிந்த மெய்களும் வந்தால், வந்தவெழுத்து மிகும்; யகரமும், உயிரும் வந்தால், இடையில் வகரந் தோன்றும்.

| | |
|---|---|
| உ-ம்: அக்காலம் | எக்காலம் |
| உம்மலை | எம்மலை |
| இவ்வழி | எவ்வழி |
| அவ்யானை | எவ்யானை |
| அவ்வுயிர் | எவ்வுயிர் |

## குற்றுகரமுன்னுஞ் சில முற்றுகரமுன்னும் உயிரும் யகரமும் புணர்தல்

குற்றியலுகரம் உயிர் வரும்போது தான் ஏறிநின்ற மெய்யை விட்டுக் கெடும்; யகரம் வந்தால், இகரமாகத் திரியும். சில முற்றியலுகரமும் இவ்விரு விதியும் பெறும்.

உ—ம்: ஆடு அரிது—ஆடரிது.
ஆடு யாது—ஆடியாது.
கதவு அரிது—கதவரிது.
கதவு யாது—கதவியாது.

## உயிர்முன்னும் ய ர ழ மெய் முன்னும் வல்லினம் புணர்தல்

உயிரீற்றின் முன்னும் ய ர ழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் பெரும்பாலும் மிகும்.

உ—ம்: பலா காய்—பலாக்காய்
இந்த சத்தம்—இந்தச்சத்தம்
வாங்கி தருவேன்—வாங்கித்தருவேன்
சாரை பாம்பு—சாரைப்பாம்பு
போய் செல்வம்—போய்ச்செல்வம்
தேர் கால்—தேர்க்கால்
தமிழ் கல்வி—தமிழ்க்கல்வி

## உயிரீற்றின் முன்னும் ய ர ழ மெய்யீற்றின் முன்னும் வரும் வல்லினம் புணர்தல்

(1) உயிரீற்று வினைப் பெயருக்கும், அகரவீற்றுப் பெயரெச்சத்துக்கும், அகரவீற்றஃறிணைப் பன்மைப் பெயருக்கும், நீ என்னும் பொதுப் பெயருக்கும், அது, இது, உது என்னுஞ் சுட்டுப் பெயர்களுக்கும், எது என்னும் வினைப் பெயருக்கும், ஒரு, இரு, அறு, எழு என்னும் விகாரவெண்ணுப் பெயர்களுக்கும், மூன்றும் ஆறும் வேற்றுமை யுருபுகளுக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ-ம்: | அவனே கொடுத்தான்<br>நானே தந்தேன் | வினைப் பெயர் |
| | உண்ட குதிரை<br>கரிய சாத்தன் | பெயரெச்சம் |
| | பல குதிரை<br>சில தந்தான் | அஃறிணைப் பன்மைப் பெயர் |
| | நீ கண்டாய்<br>நீ போனாய் | பொதுப் பெயர் |
| | அது குறிது<br>இது தந்தான் | சுட்டுப் பெயர் |
| | எது பெரிது<br>எது பெற்றான் | வினைப் பெயர் |
| | ஒரு கை<br>இரு செவி<br>அறு குணம்<br>எழு புவி | விகாரவெண்ணுப்பெயர் |
| | சாத்தனொடு சென்றான் | மூன்றனுருபு |
| | எனது தலை | ஆறனுருபு |

(2) உயிரையும் ய, ர, ழ மெய்யையும் இறுதியாக உடைய விளிப்பெயருக்கும், உயர்திணைப்பெயர் பொதுப் பெயர்களுக்கும், வினைமுற்றுக்கும், வினைத்தொகைக்கும் முன்வரும் வல்லினம் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ-ம்: | சாத்தா கேள்<br>தம்பீ தா<br>நங்காய் பார்<br>பெரியீர் போமின்<br>குறும்பூழ் போ | விளிப்பெயர் |
| | நம்பி குறியன்<br>நம்பி கை<br>விடலை சிறியன்<br>சேய் பெரியன்<br>அவர் தலை | உயர்திணைப் பெயர் |

| | |
|---|---|
| சாத்தி குறியள்<br>சாத்தி குறிது<br>சாத்தி கால்<br>தாய் கொடியள்<br>தாய் கொடிது<br>தாய் கை | பொதுப்பெயர் |
| உண்டன குதிரைகள்<br>உண்ணு குதிரைகள்<br>வந்தனை சாத்தா<br>வந்தாய் பூதா<br>உண்டார் புலவர்<br>வாழ் பூதா | வினைமுற்று |
| விரிசுடர்<br>அடுகளிறு<br>வனைகலம்<br>செய்கடன்<br>குளிர்காற்று<br>வீழ்புனல் | வினைத்தொகை |

ழகரமெய் உயர்திணைப்பெயர் பொதுப் பெயர்களுக்கு ஈருகாது. ரகரமெய் பொதுப் பெயர்களுக்கு ஈருகாது.

(3) இகர ஐகாரங்களையும், ய, ர, ழ மெய்களையும் இறுதியாகவுடைய அஃறிணைப் பெயர்களுக்கு முன்வரும் வல்லினம் எழுவாய்த் தொடரிலும், உம்மைத் தொகையிலும் இயல்பாம்.

| | | |
|---|---|---|
| உ - ம்: | பருத்தி குறிது<br>யானை பெரிது<br>நாய் தீது<br>வேர் சிறிது<br>யாழ் பெரிது | எழுவாய் |
| | பரணி கார்த்திகை<br>யானை குதிரை<br>பேய் பூதம்<br>நீர் கனல்<br>இசை புகழ் | உம்மைத்தொகை |

(4) என்ன என்னும் வினாவுக்கும், வினையையடுத்த படி யென்னுஞ் சொல்லுக்கும், தனை என்னுஞ் சொல்லுக்கும் முன் வரும் வல்லினம் இயல்பாம்.

உ-ம்: என்ன செய்தி, வரும்படி சொன்னான், எத்தனை பணம்.

## குற்றியலுகர ஈறு

(1) வன்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் முன்னிலையேவல் வினைமுற்றுத் தொடரிலும் வினைத் தொகையி லும் இயல்பாம்.

உ-ம்: ஈட்டு கொற்றா, நாட்டு புகழ்.

(2) மென்றொடர்க் குற்றியலுகரத்தின் முன்வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்.

உ-ம்: குரங்கு கடிது, நடந்து சென்றான்.

(3) நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத் தொடர் என்னும் இந் நான்கு தொடர்க் குற்றியலுகரங்களின் முன்னும் வரும் வல்லினம் இருவழியிலும் இயல்பாம்.

உ-ம்:

| அல்வழி | வேற்றுமை |
|---|---|
| நாகு கடிது | நாகு கால் |
| எஃகு கொடிது | எஃகு கூர்மை |
| வரகு சிறிது | வரகு சோறு |
| தெள்கு பெரிது | தெள்கு பெருமை |

(4) டகர றகரவீற்று நெடிற்றொடர்க் குற்றியலுகர மொழி களிலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகர மொழிகளிலும், ஈற்றுகர மேறிய டகர றகர மெய்கள் நாற்கணமும் வரின் அவ்விரண்டு மெய்களும் பெரும்பாலும் வேற்றுமையிலும், அல்வழியிற் பண் புத் தொகையிலும் இரட்டித்து வரும்.

உ-ம்:

| வேற்றுமை | பண்புத்தொகை |
|---|---|
| மாடு + அடி—மாட்டடி | வரட்டாடு |
| ஆறு + பெருக்கு—ஆற்றுப்பெருக்கு | வெளிற்றுப்பனை |

எருத்துமாடு எனச் சிறுபான்மை பிற ஒற்று இரட்டுதலு முண்டு.

(5) வேற்றுமையிலும், அல்வழியிலே பண்புத்தொகையிலும், உவமைத் தொகையிலும், சில மென்றொடர்க் குற்றியலுகர மொழிகள் வன்றொடராய்த் திரிந்து வருதலும் உண்டு.

உ—ம்: இரும்பு + சட்டி — இரும்புச்சட்டி } வேற்றுமை
கன்று + ஆ — கற்று. }
என்பு + உடம்பு—எற்புடம்பு [பண்புத் தொகை]
இரும்பு + நெஞ்சம்—இருப்பு நெஞ்சம் [உவமைத் தொகை]

சில மென்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும் உண்டு.

உ—ம்: இன்று + நாள்—இற்றைநாள் [பண்புத் தொகை]
அன்று + கூலி—அற்றைக்கூலி [வேற்றுமை]

நேற்றைய தினம், நேற்றைக் கூலி என வன்றொடர் ஐகாரச் சாரியை பெறுதலும் உண்டு.

## மெல்லினம் மிகுதல்

தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த யகரத்தின் முன்னும், தனி ஐகாரத்தின் முன்னும் வரும் மெல்லினம் மிகும்.

உ—ம்: மெய் + ஞானம் — மெய்ஞ்ஞானம்
செய் + நன்றி — செய்ந்நன்றி
கை + மாறு — கைம்மாறு

## ணகர னகர ஈறு

வேற்றுமையில் ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவுந் திரியும்; அல்வழியில் இயல்பாம்.

உ—ம்:

வேற்றுமை

மண் + குடம் — மட்குடம்
பொன் + குடம் — பொற்குடம்

அல்வழி

மண் + பெரிது — மண்பெரிது
பொன் + சிறிது — பொன்சிறிது

தனிக் குற்றெழுத்தைச் சாராத ணகர னகரங்கள் வருமொழி முதலில் உள்ள நகரந் திரிந்தபின் கெடும்.

உ—ம்: வேற்றுமை

தூண் + நன்மை—தூணன்மை

பசும்பொன் + நன்மை—பசும்பொனன்மை

அல்வழி

தூண் + நன்று—தூணன்று

பசும்பொன் + நன்று—பசும்பொனன்று

## லகர ளகர ஈறு

வேற்றுமையில் லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்; அல்வழியில் இயல்பாம்.

உ—ம்: வேற்றுமை

கல் + சட்டி—கற்சட்டி

புள் + சிறை—புட்சிறை

அல்வழி

வேல் + கொடிது—வேல்கொடிது

வாள் + சிறிது—வாள்சிறிது

லகர ளகரங்களின் முன் மெல்லினம் வந்தால் இருவழியினும் லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவுந் திரியும்.

உ—ம். வேற்றுமை

கல் + நீட்சி—கன்னீட்சி

எள் + நெய்—எண்ணெய்

அல்வழி

கல் + மறைந்தது—கன்மறைந்தது

எள் + நிறைந்தது—எண்ணிறைந்தது

தனிக் குற்றெழுத்தைச் சாராத லகர ளகரங்கள், அல்வழியில் வந்த தகரந் திரிந்த பின்னும், இருவழியினும் வந்த னகரந் திரிந்தபின்னுங் கெடும்.

உ—ம்: அல்வழி

தோன்றல் + தீயன்—தோன்றறீயன்

வேள் + தீயன்—வேடீயன்

வேற்றுமை

தோன்றல் + நன்மை—தோன்றனன்மை
வேள் + நன்மை—வேணன்மை

அல்வழி

தோன்றல் + நல்லன்—தோன்றனல்லன்
வேள் + நல்லன்—வேணல்லன்

## தகர நகரந் திரிதல்

னகர லகரங்களின்முன் தகர நகரங்கள் வந்தால், தகரம் றகரமாகவும், நகரம் னகரமாகவும் திரியும்.

உ - ம்: பொன் + தீது—பொன்றீது
கல் + தீது—கற்றீது
பொன் + நன்மை—பொன்னன்மை
கல் + நன்மை—கன்னன்மை

ணகர ளகரங்களின்முன் தகர நகரங்கள் வரின், தகரம் டகரமாகவும், நகரம் ணகரமாகவும் திரியும்.

உ - ம்: மண் + தீது—மண்டீது
முள் + தீது—முட்டீது
கவண் + நெடிது—கவணெடிது
அருள் + நலம்—அருணலம்

## பொதுப்பெயர் உயர்திணைப்பெயர்கள் ஈற்று ண, ன, ல, ள.

பொதுப்பெயர் உயர்திணைப் பெயர்களின் ஈற்று ணகர னகர லகர ளகரங்களும், வல்லினம் வந்தால், வேற்றுமையிலே திரியாது இயல்பாம்.

| உ - ம்: பொதுப்பெயர் | உயர்திணைப்பெயர் |
|---|---|
| ஆண்கை | அவன் குணம் |
| சாத்தன்செவி | தோன்றல் செவி |
| தூங்கல் கை | அவள் கை |

## மகர ஈறு

(1) மகரத்தின்முன் வல்லினம் வந்தால் அல்வழியில், வருமெழுத்துக்கு இன எழுத்தாகத் திரியும்; வேற்றுமையில், மகரங் கெட வரும் வல்லினம் மிகும்.

உ-ம் அல்வழி

மரம் + குறிது—மரங்குறிது

வேற்றுமை

மரம் + கொம்பு—மரக்கொம்பு

(2) மெல்லினம் வந்தால் இருவழியிலும் கெடும்.

உ-ம்: மரம் + நீண்டது—மரநீண்டது

மரம் + நார்—மரநார்

(3) மகரம், உயிரும் இடையினமும் வந்தால் வேற்றுமையிலே கெடும்; அல்வழியிலே பெரும்பாலும் கெடாது நிற்கும்.

உ-ம்: வேற்றுமை

மரம் + அடி—மரவடி

மரம் + வேர்—மரவேர்

அல்வழி

மரம் + அரிது—மரமரிது

மரம் + வலிது—மரம்வலிது

தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மகரமெய் நாற்கணமும் வந்தால், இருவழியிலும் கெடாது நிற்கும்; க, ச, த வந்தால் இனமெல்லெழுத்தாகவும், ஞ, ந வந்தால் அந்தந்த எழுத்தாகவும் திரியும்.

உ-ம்: உம் + அருள்—உம்மருள்

உம் + பெருமை—உம்பெருமை

நம் + வளம்—நம்வளம்

நம் + குணம்—நங்குணம்

எம் + நூல்—எந்நூல்

## வேற்றுமைப் புணர்ச்சிக்குப் புறனடை

வேற்றுமைப் புணர்ச்சிகளுள் விகாரமாக வேண்டியவை, இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வருமொழி வினைச்சொல்லாயவிடத்து இயல்பாக வரும்.

உ-ம்: புளி தின்றான், பனை தறித்தான், பொய் சொன்னான், தமிழ் படித்தான், மண் கொணர்ந்தான், பொன் கொடுத்தான், நூல் கற்றான், அருள் பெற்றான்.

## பரீட்சை வினுக்கள்

1. மூன்று சுட்டு முன்னும் எகரவினுமுன்னும் நாற்கணமும் வந்தால் எப்படிப் புணரும் ?
2. ணகரத்தின் முன்னும் னகரத்தின் முன்னும் வல்லினம் வந்தால், எப்படிப் புணரும் ?
3. னகர லகரங்களின் முன் வருந் தகரங்கள் எவ்வாருகும் ?
4. மகரத்தின் முன் நாற்கணமும் வந்தால் எப்படிப் புணரும் ?
5. தனிக் குற்றெழுத்தைச் சார்ந்த மகரமெய் நாற்கணமும் வந்தால் இரு வழியிலும் எவ்வாருகும் ?
6. பின்வருஞ் சொற்களைப் புணர்த்தி எழுதுக:—

   (1) மண் + குடம்; (2) நிலம் + பனே; (3) பூ + அரும்பு; (4) கதவு + யாது; (5) மெய் + ஞானம்; (6) கை + மாறு; (7) பொன் + குடம்; (8) எள் + நெய்; (9) வேள் + நல்லன்; (10) கல் + முற்றம்.
7. பின்வரும் வாக்கியங்களைப் பிரித்து எழுதுக:—

   (1) மருத்தெண்ணெய். (2) வேற்றூர். (3) சிற்றன்னே. (4) எட்டுணே. (5) கற்ரு. (6) கார்மேகம். (7) புற்றரவு. (8) மேற்றிசை. (9) வேப்பங்காய். (10) குறுந்தாள்,

---

### நான்காம் அதிகாரம்

## ழகர ளகர பேதம்

இக் காலத்திலே கல்லாதவர்கள் மாத்திரமன்றிக் கற்றவர்களென்றிருப்பவரும் ழ வுக்கும் ள வுக்கும் இடையேயுள்ள பொருள் வேறுபாட்டை விளங்கிக்கொள்ளாமல், அவற்றைச் சொற்களில் மாறுபட உபயோகித்துப் பேசியும் எழுதியும் இடர்ப்படுகின்றனர்; ஆதலால் சிறு வயசிற்றுனே பிள்ளைகள் இந்த ழகர ளகர பேதங்களை இயன்றவரையில் உணர்ந்துகொண்டு பேசுதலும் எழுதுதலும் பெரும் நன்மையாகும்.

## ழ

அழகன்—அழகுடையவன், திருமால்

அழகு—சர்க்கரை, முறை, வனப்பு

அழம்—பிணம்

அழல்—அழுதல், நெருப்பு.

அழற்சி—எரிவு, பொறாமை.

எழகம்—ஆட்டுக்கடா.

காழகம்—ஆடை, கருமை.

மேழகம்—ஆட்டுக்கடா, கவசம்.

ஆழம்—ஆழ்ந்திருக்குமியல்பு.

ஈழம்—இலங்கை, கள், பொன்.

சோழம்—சோழநாடு,

தோழம்—(மாட்டுத்) தொழுவம்.

வேழம்—கரும்பு, மூங்கில், யானை.

ஆழல்—(நீரில்) ஆழ்தல், கறையான்

ஊழல்—நரகம்.

சேழல்—பன்றி

சாழல்—மகளிர் விளையாட்டிலொன்று.

இழத்தல்—இழவு, பொருள் முதலியவற்றை இழந்து போதல்.

சூழல்—ஆராய்தல், இடம், சூழ்ந்து நிற்றல்

நீழல்—ஒளி, நிழல்.

ஞாழல்—குங்கும மரம், கோங்கு.

மோழல்—பன்றி.

தோழன்—நண்பன், பாங்கன்.

அழி—அழித்தல், வைக்கோல்.

அழிதகன்—பெருமை கெட்டவன்

அழிதலை—தலையோடு.

## ள

அளம்—பன்றிமுள், பெண்கள் கூந்தல்.

அளக்கர்—உப்பளம், கடல், சேறு

அளகாபதி—குபேரன்.

அளகு—கார்த்திகை நாள், பறவைப் பேடு.

அளத்தி—பரதவப் பெண்.

கோளகம்—பட்டுச்சேலை, மண்டலிப்பாம்பு, மிளகு.

தாளகம்—பருத்தில் ஒரு சாதி.

காளம்—காளகம், எட்டிமரம், கருமை, சூலம், நஞ்சு, மேகம்.

கோளம்—திரட்சியான வடிவம்.

சோளம்—தானியங்களுள் ஓரினம்

தாளம்—வாத்தியங்களுள் ஒன்று.

நாளம்—உட்டுளை, தாமரைத்தாள்.

நீளம்—தூரம், நீட்சி.

மேளம்—வாத்தியத் தொகுதி.

வாளம்—சக்கரவாளகிரி, சக்கரவாகப் பறவை, வளைவு, வாட்படை.

இளமை—யௌவனம்.

இளவல்—தம்பி.

சூளல்—சாபமிடுதல்.

மீளல்—திரும்பி வருதல்.

நீளல் - ஓடுதல்.

மூளல்—தீ பற்றுதல்.

எளனம்—அவமதிப்பு.

கோளன்—கோள் மூட்டுபவன்.

தாளாளர் - முயற்சியுடையோர், வைசியர்.

ஆழி—கடல், சக்கரம், தேர்ச்சில், மோதிரம்.
இழி, இழிவு—இகழ்ச்சி.
உழி—இடம், எழனுருபு.
ஊழி—பூமி, யுகமுடிவு, விதி.
ஊழித்தீ—வடவைத்தீ.
எழிலி—மேகம்.
எழில்—அழகு, வலிமை.
எழினி—திரைச்சீலே.
ஒழி—தவிர், நீக்கிவிடு.
கழி—உப்பளம், ஊண், கடல், கயிறு, காம்பு, சிறுதடி, மிகுதி.
கழித்தல்—நீக்குதல்.
காழி—சீகாழி.
காழியர்—உப்பு வணிகர்.
கிழி—கிழிந்த துணி, கீழுடை, பணப்பை.
குழி—கிடங்கு, பள்ளம்.
கொழித்தல்—தெள்ளுதல்.
கோழி—கோழிப் பறவை.
சுழி—நீர்ச்சுழி முதலியன.
சுழிமுனே—நடுநாடி.
சூழி—உச்சி.
சூழிகை—கள்ளு.
செழிப்பு—செல்வம், செழுமை, வளர்ச்சி.
செழியன்—பாண்டியன்.
ஞாழி—வள்ளேக்கொடி.
தகழி—அகல், விளக்குத் தகழி.
தாழி—குடம், சாடி, பரணிநாள்.
தெழித்தல்—அதட்டுதல், சினத்தல், பேரொலி.
தொழில்—உத்தியோகம், வேலே.
வேளாளர்—கொடையாளர், காராளர்.
அளி—அன்பு, கள், குளிர்ச்சி, கொடை, தேன், வண்டு.
ஆளி—ஆளுவோன், ஒழுங்கு, சிங்கம், யாளி.
இளி, இளிவு—அவமதிப்பு, பல்லிளிப்பு.
உளி—இடம், தச்சனுளி.
உளிஞை—கோபுர வாசல், படை.
உளியம்—கரடி.
ஊளி—ஊளாமீன்.
எளிது—இலேசானது.
எளிமை—வறுமை, தாழ்வு.
எளியர்—ஈனர், வறியோர்.
ஒளி—அறிவு, மறைந்திருத்தல், கேட்டைநாள், சந்திரன், சுவாலே, சூரியன், நெருப்பு, பார்வைமிருகம், பிரகாசம், புகழ், விளக்கு, வெயில்.
ஒளிவட்டம்—கண்ணடி.
களி—இறுகிய பழச்சாறு, கட்குடிப்போன், மகிழ்ச்சி, மயக்கம்.
களிறு—யானே.
காளி—காளிதேவி, பத்திரகாளி.
கிளி—கிளிப்பறவை.
குளி—குளித்தல்.
குளிர்—குளிர்ச்சி, கூதல்.
கூளி—எருது, பேய்.
கோளி—அத்தி, ஆல், பூவாது காய்க்கும் மரங்கட்குப் பொதுப்பெயர்.

தோழி—பாங்கி.
நாழி—அம்புக்கூடு, ஒருபடி.
நாழிகை—இருபத்துநான்கு நிமி
ஷங் கொண்ட நேரம்.
நூழில்—ஒளித்தோடும் வழி, படர்
கொடி, யானை.
பழி—குற்றம், தீவினை, வசை,
வலிமை.
பாழி—விலங்கின் படுக்கை.
பிழி—கள்ளு, தேன்.
பிழிதல்—சாரம்வடித்தல்.
பீழித்தல்—வருந்துதல்.
பூழி—சேறு, புழுதி, விபூதி.
பூழியன்—பாண்டியன்.
பூழில்—அகிற்கட்டை, பூமி.
பொழிதல்—மிகச் சொரிதல்.
பொழிப்புரை - தொகுத்தெழுதிய
வுரை.
பொழில் - சோலை.
மூழி—அகப்பை, சோறு.
மேழி—கலப்பை.
மேழியார் - வேளாளர்.
மொழி - சொல், பாஷை.
வழி - இடம், ஏழாம்வேற்றுமை
யுருபு, மார்க்கம்.
வழிபாடு - வணக்கம்.
வாழி - வாழ்க.
விழி - கண்.
வீழி - ஒரு செடி, ஒரு சிவதலம்.
அழுகல் - அழுகுதல், பதனழிதல்.
அழுகை - அழுதல், புலம்புதல்.
அழுக்காறு - பொறாமை.

சளி—சிலேட்டுமம், மூக்குச்சளி.
சாளிகை — சாடி, பணப்பை,
வண்டு.
சுளி—புளியாரை.
சுளிகை - முருங்கை.
சுளித்தல் - கோபித்தல்.
சூளி—ஆண்களின் உரோமம்.
சூளிகை—நிலாமுற்றம், வீட்டின்
மேல் உலாவுதற்காகிய
இடம்.
செளிம்பு—களிம்பு.
ஞாளி—நாய்.
தளிமம் - அழகு, கட்டில், திண்
ணை, படுக்கை.
தளிர் - தழை.
தாளி—அனுஷநாள், ஒரு கொடி,
(கறி) தாளித்தல், பனை.
துளி - திவலை, மழைத்துளி.
துளிர் - தளிர்.
தூளி - புழுதி.
தெளி - ஒளி, விற்குதை,
தோளி - அவுரி.
நளி - குளிர்ச்சி.
நளினம் - தாமரை.
நளிர் - குளிர்.
நாளி - கள்ளு.
நாளிகேரம் - தென்னை,
நெளி - நெளிதல்.
பளிங்கு - படிகம்.
பளிதம் - கர்ப்பூரம்.
பாளிதம் - கற்கண்டு.
பிளி - களஞ்சி, கள்.

அழுச்கு—ஊத்தை.
அழுங்குதல்—வருந்துதல்.
அழுத்தல்—பதித்தல்.
அழுவம்—கடல், சேற்று நிலம்.
ஆழுதல்—ஆழல், தாழுதல்.
இழுக்கு—குற்றம்.
இழுத்தல்—(தேர் முதலியன) இழுத்தல், தாமதித்தல்.
உழுவை—புலி.
எழுதல்—எழுதுதல், எழும்புதல்.
எழு—ஒரு எண்.
ஒழுகுதல்—நடத்தல், நீர் ஒழுகுதல்.
ஒழுங்கை—ஒடுங்கிய வழி.
அழை—கூப்பிடு, அழைத்துவா.
இழை—ஆபரணம், நூற்கயிறு, பஞ்சிநூல்.
இழைத்தல்—அழுத்துதல், செய்தல், பாய் முதலியன இழைத்தல்.
உழை—சமீபம், இடம், உவர்மண், பூவிதழ், மான், வைகறைப் போது.
ஊழை—துளசிச்செடி.
ஏழை—அறியாமை, அறிவிலான், பெண்.
கழை—கரும்பு, புனர்பூசம், மூங்கில்.
கீழைத்திசை—கிழக்குத் திக்கு.
குழை—காடு, காது, குண்டலம், சங்கு, சேறு, தளிர், துளை.

நளிர்—குளிர்
நாளி—கள்ளு.
நாளிகேரம்—தென்னை.
நெளி—நெளிதல்.
பளிங்கு—படிகம்.
பளிதம்—கர்ப்பூரம்.
பாளிதம்—கற்கண்டு.
பிளி—களஞ்சி. கள்.
பிளிறல்—ஆரவாரித்தல், (யானை) சத்தமிடுதல்,
புளி—புளிப்பு, புளியமரம்.
புளிஞர்—வேடர்.
புளினம்—மணற்குன்று.
பொளிதல்—கல்முதலிய கொத்துதல்.
மாளிகை—அரசன் இல்லம்.
மிளிர்தல்—ஒளி செய்தல்.
மீளி—பெருமை, யமன்.
முளி—முள்ளி.
முளிதல்—காய்தல்.
யாளி—சிங்கம்.
வளி—காற்று.
வாளி—அம்பு, பெண்களின் காதணி, வட்டம்.
விளி—கூப்பிடு.
விளிதல்—சாதல்.
வெளி—ஆகாயம், வெற்றிடம்.
அளுங்குதல்—பயப்படுதல்.
ஆளுதல்—ஆளல், ஆட்சி.
கிளுவை—ஒரு மரம்.
கீளுதல்—கிழித்தல், தோண்டுதல்

குழைத்தல்—மண் முதலியன குழைத்தல், ஒன்ருகக் கலத்தல், வளைத்தல்.

கூழை—இறகு, பொன், மயிர்.

கோழை—அச்சம், கபம், தவறு.

தழை—இலை, தளிர்.

தாழை—கடற்கரைத்தாழை, கற்ருழை, அன்ன தாழை முதலியன, தென்னை.

நுழை—ஒடுங்கியவழி, துவாரம், யன்னல்,

நூழை—சிறுவாசல், துவாரம்.

பழைமை—தொன்மை.

பிழை—குற்றம், தவறு.

பீழை—துன்பம்.

புழை—உட்டுளை, துவாரம்.

பூழை—துவாரம்.

பேழை—பெட்டகம்.

மழை—முகில் பெய்யும் நீர், மாரி, மேகம்.

மாழை—அழகு, அறிவின்மை, இளமை, ஓலை, பொன், மாமரம்.

முழை—குகை.

மோழை—கஞ்சி.

வழை—சுரபுன்னை.

வாழை—கதலி.

விழைதல்—ஆசைப்படுதல், விரும்புதல்.

ஆழ்—அமிழ்ந்து.

ஊழ்—முறை, பழையவினை.

எழ்—எழு.

கொளுத்துதல்—பற்ற வைத்தல்.

சளுகம்—அட்டை.

சுளுக்கு—உளுக்கு.

சூளுறல்—சத்தியஞ் செய்தல்.

புளுகுதல்—மெய்யும் பொய்யும் கலந்து பேசுதல் என்பர்.

மாளுதல்—சாதல், அழிதல்.

மீளுதல்—திரும்புதல்.

மூளுதல்—பற்றுதல்.

வெளுத்தல்—(துணி முதலியன) வெளுத்தல்,வெள்ளையாக்கல்.

அளை—பொந்து,மலைக்குகை,தயிர், மோர், வெண்ணெய்.

அளைதல்—தீண்டுதல்,

இளை—இலக்குமி, காவல், பூமி, வாக்கு, வேலி.

இளைத்தல்—தளர்தல், மெலிதல்.

உளை—உரோமம், தலை.

உளைதல்—வருந்துதல்.

ஊளை—நரியிடுஞ் சத்தம்.

களை—அயர்ச்சி, புல்.

களைகண்—பற்றுக்கோடு.

காளை—இளமையுடையவன், எருது.

கிளை—சுற்றம், மூளி, தளிர், மரக்கிளை, மூங்கில்.

கோளை—எலி.

சாளை—ஓர்மீன்.

சுளை—பலாச்சுளை.

சூளை—சுண்ணம்புச் சூளை, வேசி.

காழ்—ஒளி, பருக்கைக் கல், பளிங்கு, வைரம்.
கீழ்—ஈனம், கிழங்கு, கீழ்மக்கள்.
கூழ்—சோறு, தயிர், பொன்.
கேழ்—ஒளி, நிறம்.
சூழ்—சுற்று.
தாழ்—தாழ்க்கோல், வணங்கு.
பாழ்—அழிவு.
மாழ்—வருந்து.
யாழ்—வீணை.
வாழ்—வாழுதி.
விழ்—விழு.

தளை—கயிறு, கால்விலங்கு, தொடர்பு, வயல்.
தளையன்—குயவன், சான்றோன்.
தளைதல்—கட்டுதல்.
திளைத்தல்—அநுபவித்தல், அழுந்துதல்.
துளை—துவாரம்.
நாளை—அடுத்தநாள்.
நுளை—ஈனம்.
நுளையர்—பரதவர்.
பாளை—கமுகு தென்னை பனை முதலியவற்றின் பாளை.
பீளை—கண்ணழுக்கு.
பூளை—இலவம்பஞ்சு, மலைக்கணவாய்.
முளை—அங்குரம், ஆப்பு, கதவு முளையாணி, மூங்கில்.
மூளை—தலையிலுள்ள மூளை.
வளை—கங்கணம், வளையல், சக்கரம், சங்கு, வீட்டுவளை.
வளைதடி—ஓர் ஆயுதம்.
வாளை—ஓர் மீன்.
விளை, விளைவு—நெல் முதலியன விளைதல்.
வேளை—காலம், சமயம்.
ஆள்—வேலையாள், ஆடவன், ஆளுதல்.
எள்—எள்ளு.
கள்—கள்ளு.
கேள்—உறவு, கேட்குதி, சிநேகம்.
கொள்—தானியத்திலொன்று, எற்றுக்கொள்ளுதல்.
கோள்—இடையூறு, கொலை, தீமை, கிரகம், வலிமை, கோட்பாடு.

சூள்—சபதம்.
தாள்—கால், நெல் முதலியவற்றின் தாள், நாளம்.
தூள்—புழுதி,
தேள்—ஒருவிஷஜெந்து.
தோள்—புயம்.
நாள்—தினம்.
மாள்—சா.
வாள்—வாட்படை.
வேள்—செவ்வேள், (முருகக் கடவுள்,) கருவேள், (மன்மதன்)

## ழகர ளகர பேதமின்றி ஒரே பொருளில் வருஞ் சொற்கள்

இழிவு, இளிவு—தாழ்வு, அவமானம்.
ஈழை, ஈளை—வாய்வோடு சம்பந்தப்பட்ட நோய்.
உழி, உளி—இடம், காலம்.
உழுந்து, உளுந்து—நவதானியங்களிலொன்று.
உழுவை, உளுவை—மீன் வகையிலொன்று.
குழறுதல், குளறுதல்—பெருஞ்சத்தமிடுதல்
குழிகை, குளிகை—உருட்டப்பட்ட மருந்து (மாத்திரை).
குழைச்சு, குளைச்சு—பொருத்து, சந்து.
பவழம், பவளம்—நவரத்தினங்களுள் ஒன்று.
வழும்பு, வளும்பு—நிணம்.

## பரீட்சை வினாக்கள்

பின்வருஞ் சொற்களின் பொருளைக் கூறுக:—

(1) அழகு, அளகு. (2) அழி, அளி. (3) ஒழி, ஒளி. (4) கழி, களி. (5) கோழி, கோளி. (6) ஞாழி, ஞாளி. (7) வழி, வளி. (8) வாழி, வாளி. (9) மாழுதல், மாளுதல். (10) கழை, களை. (11) தழை, தளை. (12) வழை, வளை. (13) வாழை, வாளை.

# ஐந்தாம் அதிகாரம்

## பெயரியல்

தமிழ்ச் சொற்கள் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச் சொல், உரிச்சொல் என நான்கு வகைப்படும். பெயர்ச் சொற்களுக்கு திணை, பால், எண், இடம், வேற்றுமை என்பன உண்டு.

**திணை:** உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும். மக்கள், தேவர், நரகர் உயர்திணை; மற்றை உயிருள்ளவும், அல்லவும் அஃறிணை. இந்திரன், மனிதன், பெண் முதலியன உயர்திணை. மாடு, பறவை, மரம், கல் முதலியன அஃறிணை.

பால்: ஆண்பால், பெண்பால், ஒன்றன்பால், பலர்பால், பலவின்பால்.

உ-ம்: (முறையே) அரசன், தாய், மரம், பெற்றோர், விலங்குகள்.

**எண்:** ஒருமை, பன்மை. ஒரு பொருளை மாத்திரம் குறிப்பது ஒருமை: ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை.

உ-ம்: (முறையே) மகன், மக்கள்.

**இடம்:** தன்மை, முன்னிலை, படர்க்கை என மூன்றாகும்.

**தன்மைப் பெயர்:** நான், யான் என்பவை தன்மையொருமைப் பெயர்கள். நாம், யாம், நாங்கள், யாங்கள் என்பவை தன்மைப் பன்மைப் பெயர்கள்.

**முன்னிலைப் பெயர்:** நீ என்பது முன்னிலையொருமைப் பெயர். நீர், நீங்கள், என்பவை முன்னிலைப் பன்மைப் பெயர்கள்.

**படர்க்கைப் பெயர்:** மேற்சொல்லப்பட்ட தன்மை முன்னிலைப் பெயர்களல்லாத மற்றை எல்லாப் பெயர்களுமாம்.

உ-ம்: அவன் — உயர்திணை ஆண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்.
அவள் — உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்.
அவர் — உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்.
அது — அஃறிணை யொன்றன்பாற் படர்க்கைப் பெயர்.
அவை — அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்.

## ஆண்பால், பெண்பால் உதாரணங்கள்

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| அப்பன் | அம்மை | குணவான் | குணவதி |
| அரசன் | அரசி | குமரன் | குமரி |
| அடியான் | அடியாள் | குமாரன் | குமாரி |
| அவன் | அவள் | குறவன் | குறத்தி |
| ஆசான் } ஆசிரியன் } | ஆசிரியை | குரவன் } குரு } | ‖ குரத்தி |
| ஆடவன் | ஆடவள் | கூனன் | கூனி |
| ஆயன் | ஆய்ச்சி | கையன் | கையள் (தீயவள்) |
| ஆண்டான் | ஆண்டாள் | | |
| இடையன் | இடைச்சி | சாத்தன் | சாத்தி |
| இந்திரன் | இந்திராணி (இந்திரை) | சிவன் | சிவை |
| | | சிறுவன் | சிறுமி |
| இராசா | இராணி | சீலன் | சீலி |
| ஈசன் } ஈசுவரன் } | ஈசுவரி | சீனன் | சீனத்தி |
| | | சீமான் | சீமாட்டி |
| உபாத்தியாயன் | உபாத்தியாயினி | செட்டி | செட்டிச்சி |
| உழவன் | உழத்தி | செல்வன் | செல்வி |
| ‖ எசமானன் | எசமாட்டி | செவிடன் | செவிடி |
| ஐயன் | ஐயை | சேவகன் | சேவகத்தி |
| ஒருவன் } ஒருத்தன் } | ஒருத்தி | தந்தை | தாய் |
| | | தம்பி | தங்கை |
| கசடன் | கசடி | தலைவன் | தலைவி |
| கணவன் | மனைவி | தனவான் | தனவதி |
| கண்ணன் | கண்ணி | தனயன் | தனயை |
| கரையான் | கரையாடிச்சி | தாசன் | தாசி |
| காதலன் | காதலி | தேவன் | தேவி |
| கிழவன் | கிழவி | தோழன் | தோழி |
| கிழவோன் | கிழத்தி | நம்பி | நங்கை |

குறிப்பு : ‖ எசமான், எசமானி எனக் கொள்வது பிழை.
குருத்தினி என்பது பிழை.

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| நல்லான் | நல்லாள் | புலையன் | புலைச்சி |
| நாயகன் | நாயகி | புருஷன் | மனைவி |
| நிபுணன் | நிபுணை | பெருமான் | பெருமாட்டி |
| நீலன் | நீலி | பேரன் | பேர்த்தி |
| பண்டிதன் | பண்டிதை | மணவாளன் | மணவாட்டி |
| பர்த்தா | பத்தினி | மருகன் | மருகி |
| பாணன் | \|\| விறலி | மருமகன் | மருமகள் |
| பாலன் | பாலிகை | மருத்துவன் | மருத்துவிச்சி |
| பாக்கியவான் | பாக்கியவதி | மாணாக்கன் | மாணாக்கி |
| பாதகன் | பாதகி | மாணவன் | மாணவி |
| | (பாதகத்தி) | மித்திரன் | மித்திரை |
| பாங்கன் | பாங்கி | மூதாதை | மூதாட்டி |
| பார்ப்பான் | பார்ப்பனி | மைத்துனன் | மைத்துனி |
| பிராமணன் | பிராமணத்தி | யுவன் | யுவதி |
| பிரான் | பிராட்டி | வலைஞன் | வலைச்சி |
| பிரியன் | பிரியை | வாலிபன் | வாலை |
| பின்னவன் } பின்னோன் } | பின்னை | விருத்தன் | விருத்தை |
| | | வேளாளன் | வேளாட்டி |
| பீட்டன் | பீட்டி | வேடன் | வேடிச்சி |
| புண்ணியவான் | புண்ணியவதி | வேட்டுவன் | வேட்டுவிச்சி |
| புத்திரன் | புத்திரி | வேலைக்காரன் | வேலைக்காரி |
| புதல்வன் | புதல்வி | வேலைக்காறன் | \|\| வேலைக்காறி |

## ஒன்றன்பாலில் ஆண், பெண்ணைக் குறிக்கும் சில சொற்கள்

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| (அரி) ஏறு | (அரிப்) பிணா | (எருமைக்)கடா | பசு |
| (புலி) ஏறு | (புலிப்) பிணா | களிறு | பிடி |
| எருது | பசு | கலைமான் | மறிமான் |
| (ஆட்டுக்) கடா | மறி | சேவல் | பெடை |

குறிப்பு : || பாணி எனக் கொள்வது பிழை.
காறன், காறி எனக் கொள்வது பிழையல்ல

## ஆண்பாலையும், பெண்பாலையும் குறிக்கும் பொதுச் சொற்கள்

அகதி, அறிவிலி, உரோகி, உலோபி, எதிரி, ஏழை, காமி, குழந்தை, சுயம்பாகி, அறிவாளி, நோயாளி; பிள்ளை, பாவி, புத்திசாலி, பேதை, வழக்காளி, வாதி, பிரதிவாதி, விவேகி.

குறிப்பு: சிலர் அநாதை என்னுஞ் சொல் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொதுவானது எனக் கொள்கின்றார்கள். அது ஆண்பாலைக் குறிக்கும்போது அநாதன் எனவும், பெண்பாலைக் குறிக்கும்போது அநாதப் பெண் எனவும், பலர்பாலைக் குறிக்கும்பொழுது அநாதர் எனவும் வரும். அநாதன் – நாதன் அற்றவன்.

## வேற்றுமை

தன்னையேற்ற பெயரினது பொருளை வேறுபடுத்துவது வேற்றுமையாகும்.

முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என எட்டு வகைப்படும்.

இவைகளுள், முதல் வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனவும், பெயர் வேற்றுமை எனவும் பெயர்பெறும்.

எழுவாய் வேற்றுமைக்கு உருபு திரிபில்லாத பெயராம். பொருள் வினைமுதலாம்.

உ – ம்: சாத்தன் வந்தான்.

இரண்டாம் வேற்றுமைக்கு உருபு ஐ என்பதாம்; பொருள் செயப்படுபொருளாம்.

உ – ம்: குடத்தை வனைந்தான்,

மூன்றாம் வேற்றுமைக்கு உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பவைகளாம். ஆல், ஆன் என்னும் உருபுகளுக்குப் பொருள் கருவியுங் கருத்தாவுமாம்; ஒடு, ஓடு என்னும் உருபுகளுக்குப் பொருள் உடனிகழ்ச்சிப் பொருளாம்.

உ-ம்: வாளால் வெட்டினான்.
சாத்தனால் வெட்டப்பட்டது.
மகனோடு தந்தை வந்தான்.

ஆறனுருபு நிற்றற்குரியவிடத்துக் கொண்டென்பதும், ஒடுருபு நிற்றற்குரியவிடத்து உடனென்பதுஞ் சொல்லுருபாக வரும்.

உ-ம்: வாள் கொண்டு வெட்டினான்.
தந்தையுடன் மைந்தன் வந்தான்.

நான்காம் வேற்றுமைக்கு உருபு குவ்வென்பதாம்; பொருள் கோடற் பொருளாம்.

உ-ம்: சாத்தற்குக் கொடுத்தான்.

ஐந்தாம் வேற்றுமைக்கு உருபு இன், இல் என்பவைகளாம்; பொருள் நீக்கப் பொருளும், எல்லைப் பொருளும், ஏதுப் பொருளுமாம்.

உ-ம்: ஊரினீங்கினான்.
சீர்காழியின் வடக்குச் சிதம்பரம்.
கல்வியிற் பெரியன் கச்சியப்பன்.

ஆறும் வேற்றுமைக்கு உருபு அது, உடைய என்பவைகளாம்; பொருள் சம்பந்தப் பொருளாம்.

உ-ம்: சாத்தனது தலை.
முருகனுடைய வேல்.

ஏழாம் வேற்றுமை உருபு இல், கண், உள், இடம் முதலியவைகளாம்; பொருள் இடப்பொருளாம்.

உ-ம்: ஊரிலிருந்தான்.
மணியின்கணொளி.

எட்டாம் வேற்றுமைக்கு உருபு படர்க்கைப் பெயரீற்றில் ஏ ஓ மிகுதலும், அவ்வீறு திரிதலும் கெடுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத் திரிதலுமாம்; பொருள் விளிப்பொருளாம். விளிப்பொருள் — அழைக்கப்படும் பொருள்.

உ – ம்: மகனே கேள் .... ஏ மிகுந்தது.
அப்பனே உன்னை .... ஓ மிகுந்தது.
பிள்ளாய் படி .... ஈறு திரிந்தது.
தோழ சொல்லாய் .... ஈறு கெட்டது,
தம்பி வா .... ஈறு இயல்பாயிற்று.
மக்காள் படியுங்கள் .... ஈற்றயலெழுத்துத் திரிந்தது.

ஐ முதலிய உருபேற்குமிடத்துத் தன்மைப் பெயர்கள் யான், நான் என்பவை என் எனவும், யாம், நாம், யாங்கள், நாங்கள், என்பவை எம், நம், எங்கள், நங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.

உ – ம்: என்னை, எம்மை, நம்மை, எங்களை, நங்களை.

மற்றை யுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

ஐ முதலிய உருபேற்கும்போது முன்னிலைப் பெயர்கள் நீ என்பது நின், உன், எனவும், நீர், நீங்கள் என்பவை நும், உம், நுங்கள், உங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.

உ – ம்: நின்னை, உன்னை, நும்மை, உம்மை, நுங்களை, உங்களை.

மற்றையுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

ஐ முதலிய உருபேற்குமிடத்துத் தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் தான் என்பது தன் எனவும், தாம், தாங்கள் என்பவை தம், தங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.

உ – ம்: தன்னை, தம்மை, தங்களை.

மற்றையுருபுகளோடும் இப்படியே ஒட்டுக.

## வேற்றுமை முடிபு

(1) எழுவாய் வேற்றுமை வினையையும் பெயரையும் வினை வையுங் கொண்டு முடியும்.

உ – ம்: சாத்தன் வந்தான்
சாத்தன் அவன்
சாத்தன் யாவன்?

(2) நான்காம் வேற்றுமையும் ஏழாம் வேற்றுமையும் வினையையும் பெயரையுங் கொண்டு முடியும்.

உ-ம்: சாத்தனுக்குக் கொடுத்தான்.
பிணிக்கு மருந்து.
அவையின் கணிருந்தான்.
மணியின்கணொளி.

(3) ஆறும் வேற்றுமையும் எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம் வேற்றுமையும் பெயரைக் கொண்டு முடியும்.

உ-ம்: சாத்தனது கை.
சீர்காளியின் வடக்கு.

(4) ஒழிந்த வேற்றுமைகள் வினையைக் கொண்டு முடியும்.

உ-ம்: குடத்தை வனைந்தான்.
வாளால் வெட்டினான்.
நோயினீங்கினான்.
கொற்றா வா.

தந்தை என்னுஞ் சொல் எட்டு வேற்றுமையினும் வருதல்.

உ-ம்: 1-ம் வேற்றுமை: "தந்தை என்பவர் மைந்தர் வாதை தவிர்ப்பதே கடன்"
2-ம் வேற்றுமை: தந்தையைக் கண்டேன்.
3-ம் வேற்றுமை: தந்தையாற் செய்யப்பட்ட உரை. தந்தையொடு கல்விபோம்.
4-ம் வேற்றுமை: "தந்தைக்குத் தந்தையிலான்."
5-ம் வேற்றுமை: தந்தையினின்றும் பிரிந்தான்.
6-ம் வேற்றுமை: தந்தையினது இல்லம்.
7-ம் வேற்றுமை: தந்தையின்கண் இரக்கம்.
8-ம் வேற்றுமை: தந்தாய்! தந்தையே!

## ஆகுபெயர்

ஒரு பொருளின் இயற்பெயரால் அப் பொருளோடு சம்பந்தமுடைய பிறிதொரு பொருளைத் தொன்றுதொட்டு வழங்கு

வது ஆகுபெயராம். அவ்வாகுபெயர் பதின்மூன்று வகைப்படும். அவையாவன :

(1) பொருளாகுபெயர். உ-ம்: தாமரைபோலுமுகம்.
(2) இடவாகுபெயர். உ-ம்: ஊரடங்கிற்று.
(3) காலவாகுபெயர். உ-ம்: காரறுத்தது.
(4) சினையாகுபெயர். உ-ம்: வெற்றிலை நட்டான்.
(5) குணவாகுபெயர். உ-ம்: வெள்ளை வந்தது.
(6) தொழிலாகுபெயர். உ-ம்: வற்றலுண்டான்.
(7) அளவையாகுபெயர். உ-ம்: காலாலே நடந்தான்.
(8) சொல்லாகுபெயர். உ-ம்: இதற்குரை சொல்லு.
(9) தானியாகுபெயர். உ-ம்: விளக்கு முறிந்தது.
(10) கருவியாகுபெயர். உ-ம்: திருவாசகம்.
(11) காரியவாகுபெயர். உ-ம்: இந்நூலலங்காரம்.
(12) கருத்தாவாகுபெயர். உ-ம்: திருவள்ளுவர் படித்தான்.
(13) உவமையாகுபெயர். உ-ம்: பாவை வந்தாள்.

## எதிர்ப்பொருள் கொண்ட சொற்கள்

I

அகம்—புறம்
அடி—முடி (நுனி)
அணு—மலை
அண்மை—சேய்மை
அழுகை—சிரிப்பு
அறம்—மறம்
அன்பு—வன்பு
ஆக்கம்—கேடு
ஆக்கல்—அழித்தல்
ஆதி—அந்தம்
ஆண்டான்—அடிமை
இசை—வசை
இம்மை—மறுமை
இறப்பு—எதிர்பு (பிறப்பு)
இல்லறம்—துறவறம்
இயற்கை—செயற்கை
இளமை—முதுமை
இலாபம்—நட்டம்
இன்பம்—துன்பம்
இன்சொல்—வன்சொல்
இணக்கம்—பிணக்கு
ஈதல்—ஏற்றல்
ஈரம்—உலர்வு
உபசாரம்—அபசாரம்
உபகாரம்—அபகாரம
உயர்வு—தாழ்வு
உயர்ச்சி—இழிவு
உருவம்—அருவம்

உறவு—பகை
ஊடல்—கூடல்
எளிது—அரிது
எரிதல்—அவிதல்
ஏற்றம்—இறக்கம்
ஏற்றுமதி—இறக்குமதி
ஐது—செறிவு
ஐயம்—துணிவு
ஒற்றுமை—வேற்றுமை
ஒற்றை—இரட்டை
ஒளி—இருள்
கட்டு—அவிழ்
கனவு—நனவு
காய்—கனி
காய்தல்—உவத்தல்
காலை—மாலை
கீழ்—மேல்
குணம்—குற்றம்
குறைவு—நிறைவு
குனி—நிமிர்
கூடுதல்—பிரிதல்
கொடுத்தல்—வாங்குதல்
சன்மார்க்கம்—துர்மார்க்கம்
சீதளம்—உஷ்ணம்
சீதேவி—மூதேவி
சுகம்—துக்கம்
சுருக்கம்—விரிவு
சுவர்க்கம்—நரகம்
செங்கோல்—கொடுங்கோல்
செல்வம்—வறுமை
ஞாபகம்—மறதி
தண்மை—வெம்மை
தமர்—பிறர்
தாமதம்—விரைவு
திண்மை—நொய்மை
திறு—மூடு (பூட்டு)
தீமை—நன்மை
தூலம்—சூக்குமம்
தூக்கம்—விழிப்பு
தூரம்—சமீபம்
தேவர்—நரகர்
தேடுதல்—தொலைத்தல்
தொகை—விரி
தொடக்கம்—முடிவு
தோன்றல்—மறைதல் (கெடுதல்)
பழி—புகழ்
பகை—நட்பு
பண்டிதர்—பாமரர்
பாலர்—விருத்தர்
புண்ணியம்—பாவம்
புதுமை—பழமை
பூரித்தல்—வாடுதல் (சோர்தல்)
போற்றுதல்—தூற்றுதல்
மருட்சி—தெருட்சி
முன்பு—பின்பு
முதுமை } —இளமை
மூப்பு }
மூடன்—விவேகி
மெய்—பொய்
மேடு—பள்ளம்
வரவு—செலவு
வளர்தல்—தேய்தல்
வன்மை—மென்மை
விருப்பு—வெறுப்பு
வெப்பம்—தட்பம்
வெற்றி—தோல்வி
வெந்நீர்—தண்ணீர்

II

அநுகூலம்—பிரதிகூலம்
ஆதி—அநாதி
ஆரோகணம்—அபரோகணம்
(ஏறுதல்)—(இறங்குதல்)
இதம்—அகிதம்
இலட்சணம்—அவலட்சணம்
இம்சை—அகிம்சை
காலம்—அகாலம்
கிரமம்—அக்கிரமம்
சத்தியம்—அசத்தியம்
சாத்தியம்—அசாத்தியம்
சிரணம்—அசிரணம்
சுமங்கலி—அமங்கலி
சுரர்—அசுரர்
ஞானம்—அஞ்ஞானம்
தர்க்கம்—குதர்க்கம்
நித்தியம்—அநித்தியம்
நியாயம்—அநியாயம்
நீதி—அநீதி
மங்கலம்—அமங்கலம்
மலம்—நிர்மலம்
மானம்—அவமானம்
மூலம்—நிர்மூலம்
யோக்கியம்—அயோக்கியம்
உருபி—அருபி

## பரீக்ஷை வினா

1. ஆகுபெயரென்பது யாது? அது எத்தனை வகைப்படும்? ஒவ்வொரு வகையையுங் கூறித் தனித்தனி உதாரணங் காட்டுக.

2. பின்வருஞ் சொற்களுக்கு எதிர்ச் சொற்கள் கூறுக:—

அன்பு, அழித்தல், மறுமை, ஒளி, பழி, பிணங்குதல், ஈரம், கூடல், ஒற்றுமை, வாங்குதல், அநுகூலம், அபரோகணம்.

# ஆறும் அதிகாரம்

## வினைச்சொல்

ஒரு பொருளினது தொழில் நிகழ்ச்சியைக் குறிக்குஞ் சொல் வினைச்சொல் எனப்படும்.

வினைச்சொற்கள் தெரிநிலைவினை, குறிப்புவினை என இரு வகைப்படும்.

காலத்தை வெளிப்படையாகக் காட்டும் வினை தெரிநிலை வினையாம்.

உ—ம்: சாத்தன் நடந்தான்.
சாத்தன் நடக்கிறான்.
சாத்தன் நடப்பான்,

காலத்தைக் குறிப்பாகக் காட்டும் வினை குறிப்புவினையாம்.

உ—ம்: சாத்தன் முன்பு நல்லவன்.
சாத்தன் இப்பொழுது நல்லவன்.
சாத்தன் இனி நல்லவன்.

தெரிநிலைவினை, குறிப்புவினை என்னும் இரண்டுந் தனித்தனி முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மும்மூன்று வகைப்படும். இவையெல்லாம் உடன்பாட்டிலும் எதிர்மறையிலும் வரும்.

## முற்றுவினை

பால்காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக் கொண்டு முடியும் வினை முற்றுவினையாம்.

உ—ம்: செய்தான் சாத்தன் .... தெரிநிலைவினைமுற்று.
நல்லன் சாத்தன் ... குறிப்புவினைமுற்று.

அன், ஆன் என்னும் விகுதிகளையுடைய வினைகள் உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உ—ம்: நடந்தனன், நடந்தான் ... தெரி.
சிறியன், சிறியான் ... குறி.

அள், ஆள் என்னும் விகுதிகளையுடைய வினைகள் உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உ—ம்: நடந்தனள், நடந்தாள் .... தெரி.
சிறியள், சிறியாள் .... குறி.

அர், ஆர் என்னும் விகுதிகளையுடைய வினைகள் உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்தனர், நடந்தார் .... தெரி.
சிறியர், சிறியார் .... குறி.

து, று என்னும் விகுதிகளையுடைய வினைகள் அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம்

உ-ம்: நடந்தது, போயிற்று. .... தெரி.
சிறியது, அற்று. ... குறி.

அ, ஆ என்னும் விகுதிகளையுடைய வினைகள் அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்களாம். இவற்றுள் ஆ எதிர் மறையிடத்து வரும்.

உ-ம்: நடந்தன, நடவா. .... தெரி.
சிறியன. .... குறி.

## தன்மை வினைமுற்று

என் என்னும் விகுதியையுடைய வினைகள் தன்மை யொருமை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்தேன். .... தெரி.
சிறியேன். .... குறி.

அம், எம், ஓம் என்னும் விகுதிகளையுடைய வினைகள் தன்மைப் பன்மை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்தனம், நடந்தேம், நடந்தோம் .... தெரி.
சிறியம், சிறியேம், சிறியோம் .... குறி.

## முன்னிலை வினைமுற்று

ஆய், ஐ என்னும் விகுதிகளையுடைய வினைகள் முன்னிலை யொருமை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்தாய், நடந்தனை .... தெரி.
சிறியாய், சிறியை. ... குறி.

ஈர் என்னும் விகுதியையுடைய வினைகள் முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்தீர் .... தெரி.
சிறியீர் .... குறி.

## எதிர்மறை வினைமுற்று

இல், அல், ஆ என்னும் எதிர்மறை யிடைநிலைகளைப் பெற்று வரும் வினைமுற்றுக்கள் எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுக்களாம்.

உ-ம்: நடந்திலன், நடக்கலன், நடவான்.

அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி வரும் வினைமுற்றுக்கள் எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுக்களாம்.

உ-ம்: அல்லன், இலன்.

## முன்னிலை யேவல் வினைமுற்று

ஆய், இ, ஏல் என்னும் விகுதிகளையுடைய வினைமுற்றுக்கள் முன்னிலை யேவலொருமை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: உண்ணாய், உண்ணுதி, உண்ணேல்.

உண், தின், பார் என ஆய் விகுதி குன்றியும் வரும். எதிர்மறை யேவலொருமை வழக்கத்திலே உண்ணாதே, உண்ணாதிரு எனவும் வரும்.

ஈர், உம், மின் என்னும் விகுதிகளையுடைய வினைகள் முன்னிலை யேவற் பன்மை வினைமுற்றுக்களாம்.

உ-ம்: உண்ணீர், உண்ணும். உண்மின்,

எதிர்மறை யேவற் பன்மை செய்யுளிலே உண்ணன்மின் எனவும், வழக்கத்திலே உண்ணாதேயுங்கள், உண்ணாதிருங்கள் எனவும் வரும்.

## வியங்கோள் வினைமுற்று

க, அ என்னும் விகுதிகளைப் பெற்று இருதிணை யைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் எதிர்காலங் காட்டி வரும் ஏவல் வினைமுற்றுக்கள் வியங்கோள் வினைமுற்றுக்களாம்.

உ-ம்: யான் வாழ்க, யாம் வாழ்க, நீ வாழ்க, நீர் வாழ்க, அவன் வாழ்க, அவள் வாழ்க, அவர் வாழ்க, அது வாழ்க, அவை வாழ்க, ஐயாவர.

## செய்யுமென் முற்று

செய்யுமென் வாய்பாட்டுப் படர்க்கை வினைமுற்று உயர்திணை யொருமைக்கும் அஃறிணை யொருமை பன்மைக்கும் பொதுவாய் வரும்.

உ – ம்: அவன் வரும், அவள் வரும், அது வரும், அவை வரும்.

## பொதுவினைக் குறிப்பு

(1) வேறு, இல்லை, உண்டு, யார் என்னும் நான்கு வினைக் குறிப்பு முற்றும் இருதிணை யைம்பான் மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும்.

உ – ம்: அவன் அவள் அவர்
அது அவை யான்
யாம் நீ நீர் } வேறு, இல்லை, உண்டு, யார்

(2) என், என்ன, என்னை என்னும் வினைவினைக் குறிப்பு முற்று அஃறிணை யொருமை பன்மைகளுக்குப் பொதுவாய் வரும்.

உ – ம்: அஃது
அவை } என், என்ன, என்னை.

## பெயரெச்சம்

பால் காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச் சொல்லாய்ப் பெயரைக்கொண்டு முடியும் வினை பெயரெச்சமாம்.

உ – ம்: உண்டசாத்தன் .... செய்த என்னும் வாய்பாட்டு இறந்த காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

உண்கின்ற சாத்தன் .... செய்கின்ற என்னும் வாய்பாட்டு நிகழ்காலத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

உண்ணுஞ் சாத்தன் .... செய்யும் என்னும் வாய்பாட்டு எதிர்காலத் தெரிநிலை வினைப் பெயரெச்சம்.

கரிய சாத்தன் .... குறிப்புவினைப் பெயரெச்சம்.

உண்ணாத சாத்தன் ... எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்.

இல்லாத பொருள் .... எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்யம்.

## வினையெச்சம்

பால்காட்டும் முற்றுவிகுதி பெறாத குறைச் சொல்லாய் வினைச்சொல்லைக் கொண்டு முடியும்வினை வினையெச்சமாம்.

செய்தென்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம், செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்குமுரிய வினையெச்சம், செயினென்னும் வாய்பாட் டெதிர்கால வினையெச்சம் என தெரிநிலை வினையெச்சம் மூவகைப்படும்.

உ, இ,ய் என்னும் விகுதிகளைப் பெற்றுத் தன்கருத்தாவின் வினையைக் கொண்டு முடியும் வினையெச்சங்கள் செய்தென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்களாம்.

உ – ம்: சாத்தனுண்டு வந்தான்.
சாத்தனோடி வந்தான்.
சாத்தன் போய்த் திரும்பினான்.

அகரவிகுதியைப் பெற்றுத் தன்கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையுங் கொண்டு முடியும் வினையெச்சங்கள் செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்குமுரிய வினையெச்சங்களாம்.

| | | | |
|---|---|---|---|
| உ – ம்: | மழை பெய்ய நெல் விளைந்தது | பிற. | இற. |
| | சாத்தனுண்ண வந்தான் | தன்க. | எதிர். |
| | சூரியனுதிக்க வந்தான் | பிற. | நிக. |

எதிர்காலச் செயவென் வினையெச்சம் உண்ணற்கு வந்தான், உண்ணும்படி வந்தான், உண்ணும்பொருட்டு வந்தான் எனவும் வரும்.

இன், ஆல், கால் முதலிய விகுதிகளைப் பெற்றுத் தன் கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையுங் கொண்டு முடியும் வினையெச்சங்கள் செயினென்னும் வாய்பாட்டு எதிர்கால வினையெச்சங்களாம்.

| | | |
|---|---|---|
| உ – ம்: | அவனுண்ணின் வருவான் | தன். |
| | அவனுண்ணிற் போவேன் | பிற. |
| | அவனுண்டால் வருவான் | தன். |
| | அவனுண்டாற் போவேன் | பிற. |
| | அவனுண்டக்கால் வருவான் | தன். |
| | அவனுண்டக்காற் போவேன் | பிற. |

எதிர்மறை ஆகாரவிடைநிலையோடு உ, மல், மே என்னும் விகுதிகளைப் பெற்று வரும் வினையெச்சங்கள் எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்களாம்.

உ – ம்: அவனுண்ணாது வந்தான்.
நான் விழாமற் காத்தான்.
நான் போகாமே தடுத்தான்.

பண்படியாகத் தோன்றி அ, றி, து, மல் முதலிய விகுதி களைப் பெற்றுவரும் வினையெச்சங்கள் குறிப்புவினையெச்சங்களாம்.

உ – ம்: மெல்லப் பேசினன்.
அருளின்றிச் சொன்னன்.
அறமல்ல தில்லை.
அறமல்லாம லில்லை.

## தெரிநிலைவினைப் பகுப்பு

இன்னும் தெரிநிலை வினைச் சொற்கள் செயப்படுபொருள் குன்றியவினை செயப்படுபொருள் குன்றுதவினை எனவும், தன்வினை பிறவினை எனவும் செய்வினை செயப்பாட்டுவினை எனவும் வெவ் வேறு வகையிற் பிரிவுபட்டு வழங்கும்.

| | | | |
|---|---|---|---|
| உ – ம்: | நடந்தான் | .... | செயப்படுபொருள் குன்றிய வினை. |
| | உண்டான் | ... | செயப்படுபொருள் குன்றுத வினை. |

நடந்தான்
உண்டான் } தன்வினை

நடப்பித்தான்
உண்பித்தான் } பிறவினை

அடித்தான் ... செய்வினை.

அடிக்கப்பட்டான் ... செயப்பாட்டுவினை.

## வினையாலணையும் பெயர்

பொருளினது தொழில் நிகழ்ச்சியை அறிவிக்கும் முற்று வினை, அப்பொருளுக்குப் பெயராய் வழங்கப்படும் போது, வேற்றுமை உருபேற்று வரும்.

உ-ம்: வந்தானை, வந்தானால் .... தெரிநிலைவினையாலணையும் பெயர்.
முன்பு பெரியனை, முன்பு பெரியனால் ... குறிப்புவினையாலணையும் பெயர்.

## நில் என்னும் வினைச்சொல்லை ஐம்பால் மூவிடம் முக்காலங்கள் அமைய உடன்பாட்டுப் பொருளிற் கூறுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| நின்றேன் | நின்றாய் | நின்றான் | (ள்) | நின்றது |
| நிற்கிறேன் | நிற்கிறாய் | நிற்கிறான் | (ள்) | நிற்கின்றது |
| நிற்பேன் | நிற்பாய் | நிற்பான் | (ள்) | நிற்கும் |
| நின்றேம் | நின்றீர் | நின்றார் | | நின்றன |
| நிற்கிறேம் | நிற்கின்றீர் | நிற்கின்றார் | | நிற்கின்றன |
| நிற்பேம் | நிற்பீர் | நிற்பார் | | நிற்கும் |

### எதிர்மறைப் பொருளில்:

| | | | | |
|---|---|---|---|---|
| நின்றிலேன் | நின்றிலை | நின்றிலன் | (ள்) | நின்றிலது |
| நிற்கின்றிலேன் | நிற்கின்றிலை | நின்கின்றிலன் | (ள்) | நிற்கின்றிலது |
| நில்லேன் | நில்லாய் | நில்லான் | (ள்) | நில்லாது |
| நின்றிலோம் | நின்றிலீர் | நின்றிலர் | | நின்றில |
| நிற்கின்றிலோம் | நிற்கின்றிலீர் | நிற்கின்றிலர் | | நிற்கின்றில |
| நில்லோம் | நில்லீர் | நில்லார் | | நில்லா |

## பரீக்ஷை வினா

1. தெரிநிலைவினைக்கும், குறிப்புவினைக்கு மிடையேயுள்ள பேதமென்ன?
2. முற்றுவினை, வினையெச்சம், ஏவல்வினை, வியங்கோள்வினை, தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, பெயரெச்சம், வினையெச்சம். வினையாலணையும்பெயர், உடன்பாட்டுவினை, எதிர்மறைவினை என்னுமிவை களை விளக்கி, ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு உதாரணம் கூறுக.
3. ஏவல்வினைக்கும் வியங்கோள்வினைக்கும் உள்ள பேதமென்ன?
4. நட, காண் என்னும் வினைச்சொற்களை ஐம்பால், மூவிடம், முக்காலங்கள் அமைய உடன்பாட்டுப் பொருளிலும், எதிர்மறைப் பொருளிலும் கூறுக.

ஏழாம் அதிகாரம்

# பெயராகவும், வினையாகவும் வெவ்வேறு பொருளில் வழங்கும் (சில) சொற்கள்

| | | | |
|---|---|---|---|
| அடி | கொறி | தெறி | பேதி (வித்தியாசப் படுதல்) |
| அரி | கோபி | தேர் | |
| ஆடு | சரி | தை | பொறி |
| இடி | சாடு | தொடர் | போதி |
| ஈ | சிதை | தோல் | மறி |
| உரை | சீவு(ஒருவகைப்புல்) | நடு | மாறு (பிரம்பு) |
| ஊர் | சுழி | நாடு | மிதி |
| எரி | சூழ் (கடலை) | நீட்டு | முடி |
| ஏறு | செப்பு | நுங்கு (உண்) | மூட்டு |
| ஒன்று | சே | நூறு (அழி) | மெழுகு |
| ஓடு | சொல் | நெரி(புடவைமடிப்பு) | மொய் |
| கல் | சோதி | நேர் (எதிர்) | வரி |
| காய் | தடி | நொடி | வாசி |
| கிழி | தாழ் | படி | விதை |
| கீறு | திரி | பார் | வீடு (சா) |
| குடி | தீட்டு | பிடி (பெண்யானை) | வேய் (மூங்கில்) |
| கூடு | துடி | புடை | வை |
| கேள் | தூக்கு | பெய் | |

# பல பொருள் குறித்த ஒரு சொல்

அகம்—உள்ளம், வீடு.

அங்கி—அக்கினிதேவன், கவசம்.

அடி—காலடி, பன்னிரண்டு அங்குலம், அடியென்னேவல்.

அணங்கு—அழகு, துன்பம், தேவப்பெண்.

அணி—அழகு, ஆபரணம் படைநிரை, அணிதல்.

அரி—அடர்பு, அரிசி, அரிப்பிடி, அரியென்னேவல், அழகு, ஆயுதப் பொது, ஈர்வாள், உட்டுளைப்பொருள், ஒளி, ஒருகண்டம், கடல், கட்டில், கண்வரி, கள், காற்று, கிரணம், கிளி, குதிரை, குரங்கு, குற்றம், கூர்மை, கொடுவேலி, சக்கரம், சத்துரு, சந்திரன், சிங்கம், சிங்கவிராசி, சிலம்பின்பருக்கைக் கல், சிலம்பு, சில்லு, சிவன், சூரியன், செம்மறியாட்டுக் கடா, சோலை, தவளை, தீ, தேர், தேவேந்திரன், நமன், நித்திரை, நிறம், நெருக்கம், நெல், நெற்கதிர், பகை, பச்சை, படுக்கை, பறை, பன்றி. பாம்பு, புகை, பொன், மரகதம், மரவயிரம், மழை, மழைத்தூவல், மாலை, மூங்கில், மென்மை, வண்டு, வரி, வலி, வில், விட்டுணு, வெற்றி.

ஆழி—கடல், கரைப்பொது, சக்கரம், தேருருளை, மோதிரம், யானைக்கை, நுனி, வட்டம், வண்டி.

கடி—அதிசயம், அரை, அச்சம், அழகு, இடுப்பு, இரப்போர் கலம், இன்பம், உக்கிரம், ஐயம், ஒழிக்கை, ஒளி, ஓசை, கடிக்கப்பட்ட தழும்பு, கடியென்னேவல், கரிப்பு, கலியாணம், களிப்பு, காலநுட்பம், காலம், காவல், கூர்மை, கைப் பற்றல், சிறப்பு, சிறுகொடி, சீக்கிரம், தொனி, நந்தன வனம், நிதம்பம், நீக்கல், பிசாசம், பிணம், புணர்வு, புது மணம், புதுமை, பொழுது, மிகுதி, வாசனை, விளக்கம்.

கரி—இருந்தை, கரியென்னேவல், கருமை, சாட்சி, திருட்டாந் தம், நஞ்சு, யானை, வைரம்.

களி—இறுகிய பழச்சாறு, களிப்பு, களிப்புள்ளவன், களியென்னேவல், கள், குரூரம், குழம்பு, சீதம், செருக்கு, செறிவு, பெருமை, மகிழ்ச்சி, மதம், மயக்கம், மாவாற் கிண்டிய களி, வெப்பு, வெறி.

களை—அயர்வு, அழகு, ஒளி, கசியபன் தாய், கர்த்தமன் மகள், களையென்னேவல், காந்தி, குற்றம், தாளப் பிரமாணம் பத்தினென்று, தேவகலை, புல், மரீசி மனைவி.

கா—அசைச்சொல் (வேளிவட்காண்டிகா), ஓரெழுத்து, காத்தல், காவடி, காவென்னேவல், சோலை, துலை, தோட்சுமை, பூந்தோட்டம், வருத்தம், வலி.

காரி—ஆவிரை, இந்திரன், ஐயனார், கடையெழுவள்ளலி லொருவன், கண்டங்கத்தரி, கரிக்குருவி, கருவை, களர்நிலம், கள், காக்கை, கிளி, சனி, தூணி என்னுமோரளவை, தொழில் செய்யுமிடம், நஞ்சு, வைரவர், வெண்காரம்.

கால்—அடிப்பக்கம், அளவு, இடம், இந்துப்பு, இரத்தக்கலப்பாமுறவு, இருநூற்றுநாற்பதிழை கொண்ட அகலம், இருள், எழனுருபு, ஒரு வினையெச்ச மிகுதி, (உ—ம்: கைதொழுதக்கால்) காலம், காலன், காற்பங்கு, காற்று, குறுந்தறி, கையூன்றுகோல், தூண், தேருருள், நாலிலொன்று, பஞ்சபூதியத்தொன்று, பாதம், பூந்தாள், பொழுது, மகன், மரக்கால், முளை, வலிமை, வளி, வாதம், வாய்க்கால்.

கோ—அம்பு, அரசன், ஆகாயம், ஆண்மகன், இடியேறு, இரக்கக்குறிப்பு, இலந்தை, உரோமம், எருது, ஓரெழுத்து, கண், கிரணம், கோவென்னேவல், சந்திரன், சூரியன், திசை, கோமேதயாகம், தேவலோகம், நீர், பசு, பசுப்பொது, பூமி, பொறிமலை, மாதா, மேன்மை, வச்சிராயுதம், வாணி, வெளிச்சம்.

கோடி—இருபது கொண்டது, இளமை, கொள்ளுதி, கோடியென்னேவல், சீலை, நூறுலட்சம், புதுச்சீலை, புதுமை, முடியுறுப்பு, முனை, மூலை, வாள்வினை, விற்குதை, வீட்டின் பின்பக்கம்.

கோடு—அரணிருக்கை, அறை, ஊதிடுகொம்பு, கூட்டம், கோடென்னேவல், சங்கு, சுழி, திரள், நத்தை, நீர்க்கரை, பக்கம், மரக்கொம்பு, மலையினுச்சி, வஞ்சனை, வட்டம், வரம்பு, வரி, வரிசூழ்ந்தவிடம், வளைவு, விலங்கின் கொம்பு.

கோள்—இடையூறு, காவட்டம்புல், கிரகம், குணம், கொலை, கொள்ளல், கோட்பாடு, தீமை, நட்சத்திரம், நாள், பழமொழி, புறங்கூறல், பொய், வலி.

சேய்—இளமை, குமரன், குழந்தை, சிவப்பு, செவ்வாய், தூரம், நீளம், மகன், மனை, மூங்கில்.

தா—அழிவு, ஓரெழுத்து, குற்றம், கேடு, கொடியன், தாண்டுதல், தாவென்னேவல், பகை, பாய்தல், பிரமன், வருத்தம், வலி, வியாழம்.

தூ—ஓரெழுத்து, சீ, சுத்தம், தசை, தூவென்னேவல், பகை, பற்றுக்கோடு, புள்ளிறகு, வெண்மை.

நேமி—கடல், சக்கரவாகப்புள், சக்கிரம், தேருருள், பூமி, மூங்கில், மோதிரம், வட்டம்.

பதி—அரசன், இடம், ஊர், ஒளி, கடவுள், குதிரை, குரு, கொழுநன், சிவபிரான், தலைவன், பட்டினம், பதித்தல், பதியென்னேவல், பதிவு, பூமி, மருதநிலத்தூர், மூத்தோன், வீடு, வேர்.

பரி—அசுபதி, அச்சுவினி, அடையாளம், அலங்காரம், அன்பு, உண்மை, உயர்ச்சி, உள்ளக்களிப்பு, கருமை, காழ்த்தல், குதிரை, சுமை, செல்வம், துக்கம், துன்பம், நெருக்கிடை, பங்கு, பரப்புதல், பரியென்னேவல், பருத்தி, பாதுகாத்தல், பெருமை, மிகுதி, முடிவு, வணக்கம், வருத்தம், வழி, விசாலம், விரிவு, விரைவு.

பாணி—இலைச்சாறு, ஊர், ஊர்சூழ் சோலை, ஓசை, கடைவீதி, கருப்பநீர் முதலியவற்றின் பாணி, கள், கரண்டகபாஷாணம்,

கா, காடு, காலம், கீதம், கூத்து, கை (இது கருமேந்திரிய மைந்தினு மொன்று), தாமதம், சொல், தயிரோதனம், சருக்கரைக் கரும்பு, நாடு, நீர், நெடுநேரம், படை, பல பண்டம், பழச்சாறு, பற்று, பாட்டு, பாணியென்னேவல், பூம்பந்தல், மலை, வாச்சியப்பொது, வாணிபன்.

புரி—அரசன், ஆசை, இராஜதானி, ஊர், கட்டுங்கயிறு, கோட்டை, சங்கு, சுரி, சுருள், பட்டினம், புரியென்னேவல், யாறு.

மன்—அசைச்சொல், (உ-ம்: அதுமற்கொண்கன்றேரே), ஆக்கம் (உ-ம்: நெடியன் மன்), இறந்தகால விடைநிலை (உ-ம்: என்மனர், ஒழியிசை (உ-ம்: கூறியதோர் வாண்மகன்), கழிவு (உ-ம்: சிறியகட்பெறினே யெமக்கீயு மன்னே), மிகுதி (உ-ம்: எந்தை யெமக்கருளுமன்), அரசன், நிலைபேறு, பெருமை.

மா—அசைச்சொல், அழகு, அழைத்தல், அளவு, அறிவு, ஆணி, இடித்தமா, இடை, இலக்குமி, ஓரசைச்சொல், ஓரெண், (அது இருபதிலொன்று) மாமரம், கட்டு, கறுப்பு, குதிரை, பன்றி, யானை, சரசுவதி, சீலை, செல்வம், தாய், துகள், நஞ்சுக்கொடி, நிறம், பிரபை, பெருமை, மேன்மை, வண்டு, வயல், வலிமை, விலங்கின்பொது, வெறுப்பு.

மான்—உருவம், ஒருமிருகம், குதிரை, பெண், சுறு, மகரராசி, விலங்கின்பொது.

மை—அஞ்சனம், இருள், எழுதும்மை, கருமை, குற்றம், செம்மறியாடு, நீர், மலடி, மலட்டெருமை, மேகம், மேடவிராசி, வெள்ளாடு.

வரி—அக்கினி, இசைப்பாட்டு, எழுத்து, கடல், குடியிறை, தேமல், நிறை, நீளம், நெல், வடிவு, வண்டு, வரியென்னேவல், வழி, விரலிறை.

வரை—அளவு, கரை, சிறுவரம்பு, மலை, மூங்கில், வரையென்னேவல், வரைவு, விரலிறை, விவாகம்.

வாரி—இசைக்குழல், கடல், கதவு, சரஸ்வதி, சீப்பு, தானியம், நீர், மடை, மதில், மிகுதி, யானைகட்டுங்கயிறு, யானைபடுகுழி, வழி, வாயில், வாரியென்னேவல், விளைவு, வெள்ளம்.

வீ—கருப்பந்தரித்தல், சாவு, சொல்லுதல், நீக்கம், பறவை, பூ, போதல், விரும்புதல், காற்று, பூட்டு.

வேள்—ஆசை, ஆண்மகன், உபகாரம், குமரன், மண், மன்மதன்.

வை—கூர்மை, புல், வைக்கோல், வையகம், வையென்னேவல்.

## ரகர, லகரத்தை முதலாகவுடைய வடமொழிப் பதங்கள் தமிழில் வழங்கும் முறை

| | |
|---|---|
| ரங்கன்—அரங்கன் | ருசி—உருசி |
| ரம்பை—அரம்பை | ருது—இருது |
| ரசம்—இரசம் | ருத்திரன்—உருத்திரன் |
| ரக்ஷி—இரட்சி | ரூபம்—உரூபம் |
| ரவி—இரவி | ரேகை—இரேகை |
| ரதி—இரதி | ரோகிணி—உரோகிணி |
| ரசாயனம்—இரசாயனம் | லக்குமி—இலக்குமி |
| ரகசியம்—இரகசியம் | லட்சணம்—இலட்சணம் (இலக்கணம்) |
| ராமர்—இராமர் | லயம்—இலயம் |
| ராட்டினம்—இராட்டினம் | லாபம்—இலாபம் |
| ராசன்—இராசன் | ரத்தினம்—இரத்தினம் |
| ராணி—இராணி | லிங்கம்—இலிங்கம் |
| ராட்சதன்—இராட்சதன் (இராக்கதன்) | லிகிதம்—இலிகிதம் |
| ராவணன்—இராவணன் | லோகம்—உலோகம் |
| ராத்திரி—இராத்திரி | லகு—இலகு |
| ருக்மணி—உருக்குமணி | லஞ்சம்—இலஞ்சம் |

குறிப்பு:— ஸ்ரீ என்னும் வடமொழி எழுத்து மொழி முதலில் வரும்போது, ஸ்ரீராமர், ஸ்ரீலக்குமணர் என இகர உயிர் சேராமல் எழுதலாம். லவணம் (உப்பு) போன்ற சில சொற்கள் இகர உயிர் இல்லாமலும் இக்காலத்து வழங்கும்.

## பரீக்ஷை வினு

1. பின்வருஞ் சொற்களைத் தனித்தனி பெயராகவும் வினையாகவும் உபயோகித்துச் சிறிய வாக்கியங்கள் எழுதுக:—

   அரி, உரை, ஏறு, ஓடு, திரி, பார், மிதி, வாசி, வேய், வை,

2. கடி என்னும் சொல்லை வெவ்வேறான ஐந்து பொருளில் அமைத்து வாக்கியங்கள் கூறுக,
3. பலபொருள்கள் குறிக்குஞ் சொற்களுள் மிகப் பல குறிக்கும் சொற்கள் எவை?
4. ரகர, லகரத்தை முதலாகவுடைய வடமொழிப் பதங்கள் தமிழில் எவ்வாறு வழங்கும்? ஆறு உதாரணங்கள் கூறுக.
5. ராவணன், ருக்மணி, ருத்திரன், ரூபம் என்னுஞ் சொற்களைத் திருந்தியெழுதுக.

---

## எட்டாம் அதிகாரம்

## பிழையாக வழங்குஞ் சொற்களும் அவற்றின் திருத்தமும்

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| அப்ப | அப்பொழுது | இத்தினை | இத்தனை (இத்துணை) |
| அப்போ | அப்போது | | |
| அதுகள் | அவைகள் | இளனி | இளநீர் |
| அவங்கள் | அவர்கள் | இறச்சி | இறைச்சி |
| அண்டாடு | அன்றாடு | ஈக்கு | ஈர்க்கு |
| அய்யர் | ஐயர் | ஈர்வலி | ஈர்கோலி |
| அரலி | அலரி | உணத்து | உலர்த்து |
| அவன்ரை | அவன்றன் | உடமை | உடைமை |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை | உன்றை | உன்றன் |
| ஆக்கள் | ஆட்கள் | ஊத்தல் | ஊற்றல் |
| இப்ப | இப்பொழுது | ஊத்துதல் | ஊற்றுதல் |
| இப்போ | இப்போது | எண்ணை | எண்ணெய் |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
| --- | --- | --- | --- |
| எலிமிச்சை | எலுமிச்சை | சீயாக்காய் | சிகைக்காய் |
| என்ரை | என்றன் | சுடுதண்ணீர் | சுடுநீர் (வெந்நீர்) |
| எப்பை | அகப்பை | சுவயீனம் | சுகவீனம் |
| ஒண்டு | ஒன்று | சுற்றவாளி | சுத்தவாளி |
| கட்டிடம் | கட்டடம் | சேதி | செய்தி |
| கண்முழித்தல் | கண்விழித்தல் | சோத்துப் | சோற்றுப் |
| கறடி | கரடி | பருக்கை | பருக்கை |
| கடக்கரை | கடற்கரை | தலகணி | தலையணை |
| கரக்கடை | | தவக்கை | தவளை |
| கண்டு | (பசுக்) கன்று | தாவாரம் | தாழ்வாரம் |
| கத்திரிக்கை | கத்தரிக்கோல் | திருவுதல் | துருவுதல் |
| கருவப்பிலை | கருவேப்பிலை | தின்மை | தீமை |
| காச்சல் | காய்ச்சல் | திவட்டி | தீவர்த்தி |
| கார்த்தல் | காத்தல் | தீவாளி | தீபாவளி |
| கிணத்தடி | கிணற்றடி | | தீபாவலி |
| கிராணம் | கிரகணம் | துடை | தொடை |
| குடும்பி | குடுமி | துறப்பு | திறப்பு |
| குடுத்தல் | கொடுத்தல் | தெத்துவாய் | தெற்றுவாய் |
| கும்புடுதல் | கும்பிடுதல் | தேள்வை | தேவை |
| கைமாறு | கைம்மாறு | தேனீர் | தேநீர் |
| கைமை | கைம்மை | தேத்தண்ணீர் | |
| கோர்வை | கோவை | நாத்தம் | நாற்றம் |
| சவுக்காரம் | சவர்க்காரம் | நாநூறு | நானூறு |
| சம்பாரித்தல் | சம்பாதித்தல் | நிறப்பு | நிரப்பு |
| சந்தணம் | சந்தனம் | நெத்தி | நெற்றி |
| சமயல் | சமையல் | நேத்து | நேற்று |
| சித்தப்பன் | சிற்றப்பன் | நொங்கு | நுங்கு |
| சிலது | சில | பண்டி | பன்றி |
| சிலவு | செலவு | பரியாரி | பரிகாரி |
| சிவர் | சுவர் | பலது | பல |
| சிகப்பு | சிவப்பு | பயத்தங்காய் | பயற்றங்காய் |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| பத்தை | பற்றை | மம்பெட்டி | மண்வெட்டி |
| பறண் | பரண் | மகிடம் | மகுடம் |
| பாவக்காய் | பாகற்காய் | மங்கையற்கரசி | மங்கையர்க்கரசி |
| பாச்சல் | பாய்ச்சல் | மாதாளை | மாதுளை |
| பிலா | பலா | மினைக்கேடு | வினைக்கேடு |
| பிசுக்கு | பீர்க்கு | முத்துதல் | முற்றுதல் |
| பிராந்து | பருந்து | முளகாய் | மிளகாய் |
| பிரையாணம் | பிரயாணம் | மிதுவடி | மிதியடி |
| | (பயணம்) | முதளை | முதலை |
| பீத்தல் | பீற்றல் | மூந்தாணை | முன்றானை |
| புடல் | புடோல் | முன்னூறு | முந்நூறு |
| புடுங்கு | பிடுங்கு | மூண்டு | மூன்று |
| புணையல் | பிணையல் | ரெத்தினம் | இரத்தினம் |
| புழுக்கை | பிழுக்கை | ரண்டு | இரண்டு |
| புட்டு | பிட்டு | வகுறு | வயிறு |
| புடவை<br>பிடவை | புடைவை | வாணீர்<br>வாய்வு | வாய்நீர்<br>வாயு |
| புக்கை | புற்கை | விதரம் | விரதம் |
| புண்ணாக்கு | பிண்ணாக்கு | (வீடு) மேய்தல் | வேய்தல் |
| புத்து | புற்று | வெங்கலம் | வெண்கலம் |
| பூர்த்தல் | பூத்தல் | வெத்திலை | வெற்றிலை |
| பொம்பிளை | பெண்பிள்ளை | வெண்ணை | வெண்ணெய் |
| பெரிசு | பெரிது | வெய்யில் | வெயில் |
| பொக்களம் | கொப்புளம் | வென்னீர் | வெந்நீர் |
| பொக்குள் | கொப்புழ் | வைக்கல் | வைக்கோல் |
| மதவு | மதகு | வேர்வை | வியர்வை |
| மறவணை | மணை வறை | | |

## இருவகையாகவும் வழங்குஞ் சொற்கள்

| | |
|---|---|
| அருமருந்தன்ன, | அருமந்த ; |
| உடம்பாடு, | உடன்பாடு ; |
| கடா, | கிடாய் ; |
| கோடரி, | கோடாலி ; |
| சேர் அங்கை, | சிறங்கை ; |
| வேண்டும், | வேணும் ; |
| வேலைக்காறன், | வேலைக்காரன் ; |

குறிப்பு:— (1) அன்னியன், சன்னியாசி, உபனியாசம், விணாயகர், அனியாயம், வெரின், (முதுகு) என எழுதுவது பிழையாகும். இச்சொற்களை அந்நியன், சந்நியாசி, உபநியாசம், விநாயகர், அநியாயம், வெரிந் என எழுதுவதே முறையாகும்.

(2) இக்காலத்திலே சிலர் நற்றாமரை, நற்றாள், விற்கை, என்னும் இத் தொடர்மொழிகளை நல்தாமரை, நல்தாள், வில்கை என எழுதத் தலைப்பட்டுக்கொண்டனர் ; இவர்கள் கற்றார் என்பதைக் கல்தார் எனவும், பெற்றார் என்பதைப் பெல்தார் எனவும் பிரிந்தெழுதத் தலைப்படுவர் போலும்.

(3) தோல் பை தோற்பை ; பல் பொடி பற்பொடி ; பால் பசு பாற்பசு ; புல் தரை புற்றரை என வருதலே தமிழ் இலக்கண மரபாகும். இப்படி வழங்குவதை, தமிழ் மரபறியாத சில விபரீத கொள்கையுடையார், தோல்பை, பல்பொடி, பால்ப்பசு, புல்த்தரை என மாறுபாடாக எழுதத் தலைப்பட்டுக்கொண்டனர் ; இவர்கள் செயல் தமிழ்மொழித் துரோகமாகும்.

(4) சிலர் கற்தூண், பொற்தட்டு, பொற்தாலி, நற்தானம் எனத் தவறாக எழுதுகிறார்கள் ; இவை கற்றூண், பொற்றட்டு, பொற்றாலி, நற்றானம் என்றே எழுதப்படல் வேண்டும் ; இவ் வாக்கியங்களை இலகுவாக விளங்கிக்கொள்ளும்படி புணர்த்தலின்றி யெழுதவேண்டுமேல் கல்லுத்தூண், பொன்தட்டம், பொன்தாலி, நல்லதானம் என எழுதுதலும் காலவகையினால் ஏற்றதாகும்.

(5) ஐயர் என்பது இயல்பான சொல்; அய்யர் என்பது போலி; செய்யுளிற் போலிச் சொற்களும் எதுகை முதலிய நோக்கி வழங்கப்படும்; ஆனால் வசனம் எழுதும்போது போலிச் சொல் வழங்கவொண்ணாது; சில போலிச் சொற்களை இங்கே எடுத்துக்காட்டுவோம்;

| போலி | இயல்பு |
|---|---|
| கயிலாயம் | கைலாயம் |
| தயிலம் | தைலம் |
| வயித்தியர் | வைத்தியர் |
| வயிரவர் | வைரவர் |
| வயிரம் | வைரம் |

வயித்திலிங்கம், வயித்தீசுரன் என எழுதுதல் பிழை; முறையே வைத்தியலிங்கம், வைத்தியேசுவரன் எனத் திருத்தி யெழுதுதல் வேண்டும்.

(6) சிலர் நின்றுகொண்டிருந்தான், நடந்துகொண்டிருந்தான், போய்க்கொண்டிருந்தான் எனப் பேசுகின்றார்கள், எழுதுகின்றார்கள். நின்றுகொண்டிருத்தலும், நடந்துகொண்டிருத்தலும், போய்க்கொண்டிருத்தலும் அசம்பாவிதமாகும். இவற்றை முறையே நிற்கலாயினான், நடக்கலாயினான், போகலாயினான் எனப் பேசுவதும் எழுதுவதும் சிறப்பாகும்.

(7) கவற்சி, கவர்ச்சி என்னும் இச்சொற்களை உபயோகிக்கும்போது சிலர் பொருள் பேதமுற எழுதுகின்றனர்; கவல் என்னும் வினையடியாகப் பிறந்தது கவற்சி; கவலை, துக்கம், சஞ்சலம் என்பது இதன் பொருள்.

கவர் என்னும் வினையடியாகப் பிறந்தது கவர்ச்சி; கவர்தல், அபகரித்தல், தன்னிடமிழுத்தல் என்பன பொருள்.

(8) மாண்டார் என்னும் வாக்கியமும் சிலரை மயங்க வைக்கும் இயல்புடையது.

**மாண்** என்னும் பண்படியாகப் பிறக்கும்போது இச்சொல் மாட்சிமை உடையவர், பெரியோர் என்னும் பொருள்பெறும்.

மாள் என்னும் வினையடியாகப்பிறக்கும்போது இச்சொல் இறந்தார், அழிந்தார் என்னும் பொருள் பெறும். இச்சொல் இரு பொருளிலும் முறையே வருதலைக் கம்பராமாயணம் மாரீசன் வதைப்படலத்தில் "மாண்டார் மாண்டார் நீயினி மாள்வார் தொழில் செய்ய, வேண்டா" என்பதால் அறியலாகும். (பெண்ணாசையாற் பெரியோரும் இறந்தார்கள்; இறப்பவர் செய்தற்குரிய இச்செயலை நீ செய்யவேண்டாம் என்பது பொருள்.)

(9) தாமரைக்கண்ணன் என்னுஞ்சொல் பிரமாவைக் குறிக்கும்போதும் தாமரைப்பூவிலே இருப்பவன் எனப்பொருள் படும். கண் ஏழாம் வேற்றுமை உருபு; திருமாலைக்குறிக்கும் போது செந்தாமரைப்பூவிதழ்போன்ற கண்களை உடையவன் என்றமையும்.

## பரீக்ஷை வினா

1. பின் வருஞ் சொற்களைத் திருத்திக் கூறுக: அரலி, ஆக்கள், இளனி உடமை, எண்ணை, எப்பை, ஒண்டு, கூறடி, துறப்பு, நாநூறு, நொங்கு, பத்தை, பாவக்காய், பிராந்து, புடுங்கு. பிடவை.
2. உடம்பாடு, உடன்பாடு என்பபோல் இருவகையாகவும் வழங்குஞ் சொற்கள் சில கூறுக.
3. பின் வருஞ் சொற்களைத் திருத்தி யெழுதுக: அன்னியன், உபனியாசம், அனியாயம், வினயகர், வெரின்.
4. கவற்சி, கவர்ச்சி, மாண்டார் என்னுஞ் சொற்களின் பொருள் வேறுபாட்டைக் காரணங் காட்டிக் கூறுக.
5. கமலக்கண்ணன் என்னுஞ் சொல் பிரமாவையும், விஷ்ணுவையுந் தனித்தனி குறிப்பதெவ்வாறு?

# ஒன்பதாம் அதிகாரம்

## தொகைச்சொல்வர்க்கம்

1

ஒருவன்
முதல்வன் } கடவுள்

2

இருமுதுகுரவர் — தாய், தந்தை.
இருபாலார் — ஆண், பெண்.
இருமை — இம்மை, மறுமை.
இருதிணை { உயர்திணை, அஃறிணை.
அகம், புறம்.
இருவகை இன்பம் — சிற்றின்பம், பேரின்பம்.
இரு எண் — ஒருமை, பன்மை.
இருவினை — நல்வினை, தீவினை.
இருநிதி — சங்கநிதி, பதுமநிதி.

3

முக்காலம் — இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.
முத்தமிழ் — இயல், இசை, நாடகம்.
முத்தீ — காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணாக்கினி.
முப்போது — காலை, உச்சி, மாலை.
மும்மலம் — ஆணவம், கன்மம், மாயை.
மும்மூர்த்தி — பிரமா, விஷ்ணு, உருத்திரன்.
மும்மை — இம்மை, மறுமை, அம்மை.
முப்பால் — அறம், பொருள், இன்பம்.
முப்பழம் — பலா, மா, வாழைப்பழங்கள்.
முந்நீர் — ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர்.
முச்சங்கம் — முதல், இடை, கடைச்சங்கங்கள்.
முச்சுடர் — சூரியன், சந்திரன், அக்கினி.
முப்பகை — காமம், வெகுளி, மயக்கம்.
மூவுலகு — சொர்க்கம், மத்தியம், பாதலம்.

மூவர் — அப்பர், சுந்தரர், சம்பந்தர்.
மூவேந்தர் — சேர, சோழ, பாண்டியர்
மூவிடம் — தன்மை, முன்னிலை, படர்க்கை.

## 4

நால்வர் — அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர்.
நால்முனிவர் — சனகர், சனந்தரர், சனாதரர், சனற்குமாரர்.
நான்கு உபாயம் — சாம, பேத, தான, தண்டம்,
நான்மறை — இருக்கு, யசுர், சாமம், அதர்வணம்.
நாற்குணம் — நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு.
நாற்பாதம் — சரியை, கிரியை, யோகம், ஞானம்.
நாற்குலம் — அந்தணர், அரசர், வணிகர், வேளாளர்.
நாற்றிக்கு — கிழக்கு, தெற்கு, வடக்கு, மேற்கு.
நாற்பயன் — அறம், பொருள், இன்பம், வீடு.
நாற்படை — தேர், யானை, குதிரை, காலாள்.
நானிலை — பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம்.
நானிலம் — முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல்.

## 5

ஐங்கணை — அசோகமலர், கருங்குவளை மலர், தாமரை மலர், மாமலர், முல்லைமலர். (இவை மன்மதன் பாணங்களென்ப).
ஐங்குரவர் — அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை, தமையன்.
ஐந்திலக்கணம் — எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
(பஞ்சலக்கணம்)
ஐந்திணை — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐவகை நிலங்கள்.
ஐந்தொழில் — படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.
(பஞ்சகிருத்தியம்)
ஐம்புலன் — சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்.
ஐம்பொறி — மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஐம்பூதம் — நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்.
(பஞ்சபூதம்)

ஐம்பெருங்குழு — அமைச்சர், புரோகிதர், சேனைத்தலைவர், தூதர், ஏவலர்.

ஐம்பெரும் பாதகம் — கொலை, களவு, கள், காமம், குருநிந்தை. (பஞ்சமாபாதகம்)

ஐம்பொன் — பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம். (பஞ்சலோகம்)

ஐம்படை — சங்கு, சக்கரம், தண்டாயுதம், வில், வாள் எனத் (பஞ்சாயுதம்) திருமாலுக்குரிய ஆயுதங்கள் ஐந்து. இவைகள் அமைக்கப்பட்ட ஒரு அணியைப் பொற்கயிற்றிற் கோத்து, ஐம்படைத்தாலி என்னும் பெயரோடு, குழந்தைகளுக்கு எவ்வகையான இடையூறும் நேராவண்ணம் பாதுகாப்பாக அணிவர்; நாராயணன் காவற்கடவுளாதலினல் இவ்வாறு செய்கின்றனர் போலும்.

ஐம்பெருங்காப்பியம் — சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமே (பஞ்சகாவியம்) கலை, வளையாபதி, குண்டலகேசி.

ஐவகைநிறம் — வெண்மை, கருமை, செம்மை, மஞ்சள், பசுமை. (பஞ்சவர்ணம்) (பச்சை)

ஐவகை அமிர்தம் — முப்பழம், தேன், சர்க்கரை என்பன கலந்த (பஞ்சாமிர்தம்) அபிடேக திரவியம்.

ஐந்தங்கம் — திதி, வாரம், நாள், யோகம், கரணம் என்னும் (பஞ்சாங்கம்) ஐந்து மமைந்த நூல்.

ஐவர் — தருமர், வீமன், அருச்சுனன், நகுலன், சகதேவன். (பஞ்சபாண்டவர்)

பஞ்சகன்னியர் — மேனை, சாவித்திரி, அருந்ததி, அநசூயை சுநீதி; இனி, அகலிகை, மண்டோதரி, சீதை, தாரை, திரௌபதி எனவுங்கூறுப.

பஞ்சகௌவியம் — கோசலம், கோமயம், பால், தயிர், நெய் என்னுமிவற்றை மந்திரசகிதமாகச் சேர்த்து ஆக்கப்பெற்ற சுத்திப்பொருள்.

பஞ்சவில்வம்—வில்வம், முட்கிளுவை, மாவிலிங்கை, விளா, பொன்னொச்சி. சிலர் நொச்சியை நீக்கி வன்னிப் பத்திரத்தைக் கொள்வர்.

ஐவகைச்சத்திகள் — பராசத்தி, ஆதிசத்தி, இச்சாசத்தி, ஞான
(பஞ்சசத்திகள்) சத்தி, கிரியாசத்தி.

ஐவகைச்சுத்தி — பூதசுத்தி, ஆன்மசுத்தி, திரவியசுத்தி, மந்திர
(பஞ்சசுத்தி) சுத்தி, இலிங்கசுத்தி.

ஐந்திலிங்கம் — இவை பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம்
(பஞ்சலிங்கம்) என்னும் பஞ்சபூதங்களுக்கும் முறையே இருப்பிடமான காஞ்சீபுரம், திருவானைக்கா, திருவண்ணமலை, திருக்காளத்தி, சிதம்பரம் என்னும் தலங்களிற் கோயில்கொண்ட மகாலிங்கங்களாம்.

## 6

அறுகுணம் — ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம்.

அறுசுவை — கைப்பு, இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு (உறைப்பு).

அறுவகைச் சமயம் — சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்தியம், கௌமாரம்.

## 7

எழுபிறப்பு — தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம்.

எழுமுனிவர் — அத்திரி, ஆங்கீரசன், கௌதமன், சமதக்கினி பரத்துவாசன், வசிட்டன், விசுவாமித்திரன்; இவை அகத்தியன்; ஆங்கீரசன், கௌதமன், காசிபன், புலத்தியன், மார்க்கண்டன், வசிட்டன் எனச் சிறிது பேதப்படுத்தியுங் கொள்வர்.

எழுஉலகம் — பூலோகம், புவர்லோகம், மகர்லோகம், ஜனலோகம், தபலோகம், சத்தியலோகம், வைகுந்தம்.

எழுகன்னியர் — அபிராமி, இந்திராணி, கௌமாரி, காளி,
(சப்தகன்னியர்) நாராயணி, மகேசுவரி, வராகி.

எழுதீர்த்தம் — கங்கை, யமுனை, சரசுவதி, நருமதை, காவிரி, கோதாவரி, குமரி.

எழுதலம் — அயோத்தி, மதுரை, மாயை, காசி, காஞ்சி, அவந்தி,
(சப்தபுரி) துவாரகை.

## 8

எட்டுத்திக்குப்பாலகர் — இந்திரன், அக்கினி, யமன், நிருதி,
(அட்டதிக்குப்பாலகர்) வருணன், வாயு, குபேரன், ஈசானன்.

எட்டுச்சித்திகள் — அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராத்தி,
(அட்டசித்தி) பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்.

எண்வகைமங்கலம் — இணைக்கயல், கண்ணாடி, சாமரம், கொடி,
(அட்டமங்கலம்) தோட்டி, நிறைகுடம், முரசு, விளக்கு.

எட்டுத்திக்குயானைகள் — ஐராவதம், புண்டரீகம், வாமனம், குமு
(அட்டதிக்குயானைகள்) தம், அஞ்சனம், புட்பகந்தம், சாருவ
போதம், சுப்பிரதீபம்.

எட்டுத்திக்குநாகங்கள் — அநந்தன், கார்க்கோடகன், குளிகன்,
(அட்டநாகம்) சங்கபாலன், தக்ஷன், பதுமன், மகா
பதுமன், வாசுகி.

எண்வகைமலர் — புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியா
(அட்டபுஷ்பம்) வர்த்தம், பாதிரி, நீலோற்பலம், அலரி, செந்
தாமரை. இவைக்கொப்பான எண்குணங்கள்:
கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை,
அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு.

எட்டுலக்குமிகள் — தநலட்சுமி, தானியலட்சுமி, தைரியலட்சுமி,
(அட்டலக்குமி) சௌரியலட்சுமி, வித்தியாலட்சுமி, விசய
லட்சுமி, கீர்த்திலட்சுமி, இராச்சியலட்சுமி.

எண்வகைச்செல்வம் — அடிமை, அரசாங்கம், சுற்றம், நெல்,
(அட்டஐசுவரியம்) பொன், புதல்வர், இரத்தினம், வாகனம்.

எட்டுவைரவர் — மகாவைரவர், உக்கிரவைரவர், சண்டாளவைர
(அட்டவைரவர்) வர், குரோதனவைரவர், உன்மத்தவைரவர்,
கபாலவைரவர், பீஷ்ணவைரவர், சாகரவைரவர்.

## 9

நவக்கிரகம் — சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன்,
வெள்ளி, சனி, ராகு, கேது.

நவதானியம் — உழுந்து, எள், கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு, பயறு.

நவரசம் — சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, இழிவு, அற்புதம், பயம், கோபம்.

நவரத்தினம் — கோமேதகம், நீலம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, புருடராகம், வைடூரியம், வைரம்.

## 10

பத்தழகு — நூலிற் காணப்படக்கூடிய பத்து அழகு: சுருங்கச் சொல்லல், விளங்கவைத்தல், நவின்றோர்க்கு இனிமை, நன்மொழி புணர்த்தல், ஓசை உடைமை, ஆழம் உடைமை, முறையின்வைப்பு, உலகம் மலையாமை, விழுமியது பயத்தல், விளங்கு உதாரணத்தது ஆகுதல்.

பத்துக்குற்றம் — நூலிற் காணப்படக் கூடிய பத்துக்குற்றங்கள்: குன்றக் கூறல், மிகைபடக் கூறல், கூறியது கூறல், மாறுகொளக் கூறல், வழூஉச் சொற் புணர்த்தல், மயங்கவைத்தல், வெற்றெனத் தொடுத்தல், மற்றொன்று விரித்தல், சென்றுதேய்ந்து இறுதல், நின்று பயனின்மை.

பத்துப்பாட்டு — திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்ற பத்துப் பாடல்கள் அடங்கிய சங்கநூற்றொகுதி.

## 18

பதினெண்கீழ்க்கணக்கு — நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவைநாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை யைம்பது, ஐந்திணைஎழுபது, திணை

மொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம் முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்ற பதினெட்டுச் சங்கநூல்கள்.

## பரீக்ஷை வினு

1. பின்வருவனவற்றை விரித்துக் கூறுக:—நானிலை, ஐங்கணை, ஐம்பெரும் பாதகம், ஐம்படை, அறுசுவை, எழுபிறப்பு, எட்டுச்சித்திகள், நவதானியம், நவரசம், பத்தழகு.

2. கீழ்க்குறிக்கப்படுவோர் யார் யார் என்பதை முறையே விரித்துக் கூறுக:—நால்வர், நான்முனிவர், ஐங்குரவர், எழுமுனிவர், ஏழுகன்னியர், எட்டுத்திக்குப்பாலகர், எட்டு வைரவர்.

---

## பத்தாம் அதிகாரம்

### தன்வினை பிறவினைகள்:

| தன்வினை | பிறவினை | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| அகல் | அகற்று | கட | கடப்பி |
| அடி | அடிப்பி | கடி | கடிப்பி |
| அருந்து | அருத்து | காண் | * காட்டு |
| அரி | அரிவி | கிட | கிடத்து |
| அழு | அழுவி | கீறு | கீறுவி |
| ஆடு | ஆட்டு | குடி | குடிப்பி |
| ஆறு | ஆற்று | கூடு | கூட்டு |
| ஆழ் | ஆழ்த்து | கெடு | கெடுப்பி |
| இடி | இடிப்பி | கேள் | கேட்பி |
| இரு | இருத்து | கொடு | கொடுப்பி |
| இணங்கு | இணக்கு | கொல் | கொல்லுவி |
| ஈட்டு | ஈட்டுவி | கோ | கோப்பி |
| உண் | ஊட்டு | | |
| உழை | உழைப்பி | | |

* இதற்குக் காண்பி எனப் பிறவினை கூறுதல் பிழை.

| தன்வினை | பிறவினை | தன்வினை | பிறவினை |
|---|---|---|---|
| உருகு | உருக்கு | சிரி | சிரிப்பி |
| ஊது | ஊதுவி | சுருங்கு | சுருக்கு |
| எடு | எடுப்பி | சுடு | சுடுவி |
| எழு | எழுப்பு | சூடு | சூட்டு |
| எறி | எறிவி | செய் | செய்வி |
| ஏறு | ஏற்று | செல் | செலுத்து |
| ஓடு | ஓட்டு | நோக்கு | நோக்குவி |
| சேர் | சேர்ப்பி | பயில் | பயிற்று |
| சொல்லு | சொல்லுவி | பார் | பார்ப்பி |
| சோதி | சோதிப்பி | பிடி | பிடிப்பி |
| தடு | தடுப்பி | புணர் | புணர்த்து |
| தா | தருவி | பூணு | பூட்டு |
| தீட்டு | தீட்டுவி | பெய் | பெய்வி |
| துடை | துடைப்பி | பேர் | பேர்ப்பி |
| தூங்கு | தூக்கு | போ | போக்கு |
| தெளி | தெளிவி | மகிழ் | மகிழ்வி |
| தேறு | தேற்று | மாறு | மாற்று |
| தை | தைப்பி | மீள் | மீட்பி |
| தொழு | தொழுவி | முடி | முடிப்பி |
| தோன்று | தோற்றுவி | மூள் | மூட்டு |
| நடு | நடுவி | வருந்து | வருத்து |
| நாடு | நாடுவி | வாடு | வாட்டு |
| நில் | நிறுத்து | விடு | விடுவி |
| நீங்கு | நீக்கு | வீழ் | வீழ்த்து |
| நுகர் | நுகர்வி | வெட்டு | வெட்டுவி |
| நெருங்கு | நெருக்கு | வேய் | வேய்வி |
| சிதை | சிதைப்பி | வை | வைப்பி |

## இடைச்சொல்

தனித்து வழங்குதலின்றிப் பெயரையும் வினையையும் அடுத்து வருஞ்சொல் இடைச்சொல்லாகும்.

வேற்றுமையுருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், போல் நேர் நிகர் முதலிய உவம உருபுகளும், சுட்டும், வினவும், பிற வழியினுலே தத்தமக்குரிய பொருளையறிவித்து வருவனவும் இடைச்சொற்களாம்.

ஏ, ஓ, உம், மற்று, என, என்று, இனி, முன், பின், கீழ், மேல், தோறும், ஐயோ முதலியவைகள் தத்தம்பொருளை அறிவித்து வரும் இடைச்சொற்களாம்.

ஏகார இடைச்சொல் இரண்டுபொருளைத் தரும். அவை யாவன :

(க) தேற்றம். உ-ம். உண்டே கடவுள்.
(உ) பிரிநிலை. உ-ம். அவனே யெடுத்தான்.

ஓகார இடைச்சொல் மூன்றுபொருளைத் தரும். அவை யாவன :

(க) ஐயம். உ-ம். குற்றியோ மகனோ.
(உ) எதிர்மறை. உ-ம். அவனோ கொண்டான்.
(ங) வினா. உ-ம். மாடோ வந்தது?

உம்மென்னும் இடைச்சொல் ஐந்துபொருளைத்தரும்; அவையாவன :

(க) எண். உ-ம். பொன்னும் வெள்ளியும்.
(உ) எச்சம். உ-ம். சாத்தனும் வந்தான்.
(ங) முற்று. உ-ம். எல்லாரும் வந்தார்.
(ச) சிறப்பு. உ-ம். வேடரும் மயங்கும் மலை.
(ரு) எதிர்மறை. உ-ம். விளையாட்டினும் பொய்பேசாதே.

## உரிச்சொல்

பண்பை யுணர்த்திப் பெயர் வினைகளுக்கு உரிமைபூண்டு நிற்குஞ்சொல் உரிச்சொல்லாகும். அவையாவன :

உறு, தவ, நனி.

உ-ம். நனி பேதை, நனி தின்றான்.

## செய்வினை, செயப்பாட்டுவினைகள்

| செய்வினை | செயப்பாட்டுவினைகள் |
|---|---|
| அகன்றேன் | அகற்றப்பட்டேன் |
| அடிக்கிறான் | அடிக்கப்படுகிறான் |
| ஆடுவாள் | ஆட்டப்படுவாள் |
| இடிக்கும் | இடிக்கப்படும் |
| இருந்தன | இருத்தப்பட்டன |
| கட்டினேன் | கட்டுண்டேன் |
| அள்ளினாள் | அள்ளுண்டாள் |

## செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டுவினை வாக்கியங்களாக ஆக்குதல்

கந்தன் படம் வரைந்தான்; இதனைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக்கும்போது, கந்தனாற் படம் வரையப்பட்டது என வரும். இங்ஙனமின்றி படம் கந்தனால் வரையப்பட்டது என சொற்களின் தானங்களை மாற்றுதல் சிறப்பின்றாம்.

(செ. வி.) உபாத்தியாயர் பாடம் படிப்பிக்கிறார்.
(செய. பா. வி.) உபாத்தியாயராற் பாடம் படிப்பிக்கப் படுகிறது.
(செ. வி.) நகர்காவலர் கள்வனைக்கண்டு பிடித்துக் கட்டி அடித்தார்கள்.

இதனைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக மாற்றும்போது, நகர்காவலராற் கள்வன் கண்டுபிடித்துக் கட்டி அடிக்கப்பட்டான் என எழுதுதல் அமையும். இங்ஙனமின்றி நகர் காவலராற் கள்வன் கண்டுபிடிக்கப்பட்டுக் கட்டப்பட்டு அடிக்கப் பட்டான் எனக் கூறுதல் சிறப்பின்றாம்.

## செயப்பாட்டுவினை வாக்கியத்தைச் செய்வினை வாக்கியமாக்குதல்

(செய. பா. வி.) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
(செ. வி.) கடவுள் நம்பினோரைக் கைவிடார்.

## தொகைநிலைத்தொடர்

ஒன்றோடொன்று பொருள்படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களினது கூட்டம் தொடர்மொழியாம்.

சொல்லோடுசொல் தொடருந்தொடர்ச்சி தொகைநிலைத் தொடர், தொகாநிலைத்தொடர் என இரண்டு வகைப்படும்.

வேற்றுமையுருபு முதலியன நடுவே தொக்குநிற்கத் தொடர்வது தொகைநிலைத் தொடராம்.

வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என தொகைநிலைத்தொடர் ஆறுவகைப்படும்.

## வேற்றுமைத்தொகை

ஐ முதலிய ஆறுவேற்றுமை யுருபும் நடுவே தொக்க தொடர்மொழி வேற்றுமைத் தொகையாம்.

உ-ம்: நிலங்கடந்தான் – இரண்டாம் வேற்றுமைத்தொகை.
கல்லெறிந்தான் – மூன்றாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன் மகன் – நான்காம் வேற்றுமைத்தொகை.
ஊர் நீங்கினான் – ஐந்தாம் வேற்றுமைத்தொகை.
சாத்தன் கை – ஆறாம் வேற்றுமைத்தொகை.
காட்டுப்புலி – ஏழாம் வேற்றுமைத்தொகை.

## வினைத்தொகை

காலங்காட்டும் இடைநிலையும் விகுதியுந் தொக்க பெயரெச்சத் தொடர் வினைத்தொகையாம்

நேற்றுக்கொல்யானை – இறந்தகால வினைத்தொகை.
இன்றுகொல்யானை – நிகழ்கால வினைத்தொகை.
நாளைக்கொல்யானை – எதிர்கால வினைத்தொகை.
இவை கொன்ற, கொல்கின்ற, கொல்லும் என விரியும்.

## பண்புத்தொகை

பண்புப்பெயருக்கும் பண்பிப்பெயருக்கும் நடுவே "ஆகிய" என்னும் பண்புருபு தொக்கதொடர் பண்புத்தொகையாம்.

உ-ம்: செந்தாமரை, இது செம்மையாகிய தாமரை என விரியும்.

ஒருபொருளுக்குரிய பொதுப்பெயருக்குஞ் சிறப்புப்பெயருக்கும் நடுவே 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்க தொடர் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாம்.

உ-ம்: சாரைப்பாம்பு. இது சாரையாகிய பாம்பு என விரியும்.

## உவமைத்தொகை

போல, முதலிய உவமையுருபு தொக்க தொடர் உவமைத் தொகையாம்.

உ-ம்: பவளவாய்; இது பவளம்போலும் வாயென விரியும்.

## உம்மைத்தொகை

இடையிலுங் கடையிலும் உம்மை தொக்கதொடர் உம்மைத் தொகையாம்.

உ-ம்: இராப்பகல்; இது இராவும் பகலும் என விரியும்.

## அன்மொழித்தொகை

வேற்றுமைத்தொகை முதலாகிய ஐவகைத் தொகைக்கும் புறத்தில் வேறுமொழி தொக்கதொடர் அன்மொழித்தொகையாம்.

(க) பூங்குழல்: இரண்டாம் வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவை யுடைய குழலினையுடையாள் என விரியும்.

(உ) தாழ்குழல்: வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினை யுடையாள் என விரியும்.

(ந) கருங்குழல்: பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

(ச) தேன்மொழி: உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலும் மொழியினையுடையாள் என விரியும்.

(ரு) உயிர்மெய்: உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிரும்மெய்யுங் கூடிப்பிறந்த எழுத்து என விரியும்.

## தொகாநிலைத்தொடர்

நடுவே வேற்றுமையுருபு முதலியன தொகாது நிற்கத் தொடர்வது தொகாநிலைத்தொடராம்.

எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத் தொகாநிலைத்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் எனத் தொகாநிலைத்தொடர் ஒன்பது வகைப்படும்.

உ-ம்: (க) சாத்தன் வந்தான் ... எழுவாய்த்தொடர்.
(உ) சாத்தா வா ... ... விளித்தொடர்.
(ங) குடத்தைவனைந்தான் ... வேற்றுமைத்தொகாநிலைத்தொடர்.
(ச) உண்டான் சாத்தன் ... வினைமுற்றுத்தொடர்.
(ரு) உண்டசாத்தன் ... பெயரெச்சத்தொடர்.
(சா) உண்டுவந்தான் ... வினையெச்சத்தொடர்.
(எ) மற்றொன்று .... இடைச்சொற்றொடர்.
(அ) கடிக்கமலம் ... உரிச்சொற்றொடர்.
(கூ) பாம்பு பாம்பு .... ... அடுக்குத்தொடர்.

## பரீக்ஷைவினா

1. அருந்து, இணங்கு, உருகு, ஏறு, ஓடு, நில், செல், பூணு, வை என்பனவற்றின் பிறவினைகளை முறையே எழுதுக.
2. இடைச்சொல்லாவது யாது?
3. ஏகாரஇடைச்சொல்லும் உம் என்னும் இடைச்சொல்லும் என்ன என்ன பொருள்களில் வரும் என்பதை முறையே உதாரணங் காட்டி எழுதுக.
4. உரிச்சொல் என்றால் என்ன? அவை எத்தனை? உதாரணத்தால் விளக்குக.
5. பின்வரும் செய்வினைகளுக்கு ஏற்ற செயப்பாட்டுவினைகள் கூறுக. அகன்றேன், ஆடுவாள், கட்டுகிறேன்.
6. கடவுள் நம்பினோரைக் கைவிடார், என்பதைச் செயப்பாட்டுவினை வாக்கியமாக்குக.
7. வேற்றுமைத்தொகை என்பதை விளக்கி உதாரணங்களுங் கூறுக.

8. செந்தாமரை, சாரைப்பாம்பு, பவளவாய், இராப்பகல் என்னும் இவைகள் எந்த எந்தத் தொகைக்குரியன ?
9. அன்மொழித்தொகை எத்தனைவகைப்படும் ?
10. தொகாநிலைத்தொடர் என்பதை விளக்குக. அது எத்தனை வகைப் படும் ?

---

## பதினோராம் அதிகாரம்

# போலி

சொல்லின் ஓரெழுத்து நிற்குமிடத்தில் அவ்வெழுத்துக்கு வேறோர் எழுத்து, அச் சொல்லின்பொருள் மாறுபடாமல் நிற்றலே போலியாகும். இப்போலி சொல்லில் முதல், இடை கடை என்னுமிடங்களில் வரும்.

| இயல்பு | போலி | இயல்பு | போலி |
|---|---|---|---|
| ஐந்து | அஞ்சு | அறம் | அறன் |
| ஐயர் | அய்யர் | கலம் | கலன் |
| ஔவை | அவ்வை | நிலம் | நிலன் |
| நண்டு | ஞெண்டு | குணம் | குணன் |
| நாயிறு | ஞாயிறு | மரம் | மரன் |
| நியாயம் | ஞாயம் | பந்தல் | பந்தர் |
| பித்தன் | பிச்சன் | சாம்பல் | சாம்பர் |
| வைத்த | வைச்ச | பக்கம் | பக்கல் |
| நேயம் | நேசம் | மதில் | மதிள் |
| கோவில் | கோயில் | மயல் | மையல் |

### வடசொற்கள் தமிழில் வழங்கும் முறை.

| வடசொல் | தமிழ்ச்சோல் | வடசொல் | தமிழ்ச்சோல் |
|---|---|---|---|
| ஜ :— | | ப்ரயோஜனம் | பிரயோசனம் |
| ஜநகன் | சனகன் | பூஜா | பூசை |
| பங்கஜம் | பங்கயம் | ராஜ்யம் | இராச்சியம் |
| ஜாதி | சாதி | ஜ்யோதி | சோதி |

| வடசொல் | தமிழ்ச்சொல் | வடசொல் | தமிழ்ச்சொல் |
|---|---|---|---|
| ஜ்ஞானம் | ஞானம் | பக்ஷணம் | பட்சணம் |
| ஷ :— | | பக்ஷி | பட்சி (பக்கி) |
| ஷண்முகம் | சண்முகம் | அக்ஷரம் | அக்கரம் |
| பொக்கிஷம் | பொக்கிசம் | க்ஷேமம் | சேமம் |
| பாஷை | பாடை | லக்ஷ்மி | இலக்குமி |
| ரிஷி | இருடி | தீக்ஷா | தீக்கை |
| கிருஷ்ணன் | கிருட்டிணன் | பிக்ஷா | பிச்சை |
| புஷ்பம் | புட்பம் | ஹ : | |
| கஷ்டம் | கட்டம் | ஹரி | அரி |
| ஸ :— | | ஹரிஜனம் | அரிசனம் |
| ஸபா | சபை | ஹனுமன் | அனுமன் |
| வாஸம் | வாசம் | ஹாரம் | ஆரம் |
| உத்ஸவம் | உற்சவம் | ஹிமம் | இமம் |
| தபஸ் | தபசு | ஹிதம் | இதம் |
| சரஸ்வதி | சரசுவதி | ஹிருதயம் | இருதயம் |
| ஸ்வாமி | சுவாமி, சாமி | ஹீனம் | ஈனம் |
| ஸ்நேஹம் | சிநேகம் | ஹேது | ஏது |
| ஸ்தானம் | தானம் | ஹோமம் | ஓமம் |
| ஸ்வதேசி | சுவதேசி | யந்திரம் | இயந்திரம், எந்திரம் |
| ஸ்வர்க்கம் | சுவர்க்கம், சொர்க்கம் | யூகி | ஊகி |
| புஸ்தகம் | புத்தகம் | தர்மம் | தருமம் |
| பஸ்மம் | பற்பம் | கர்ணன் | கன்னன் |
| ஸக்தி | சக்தி | அல்பம் | அற்பம் |
| ஸப்தம் | சத்தம் | த்ராவகம் | திராவகம் |
| க்ஷ :— | | புண்யம் | புண்ணியம் |
| க்ஷணம் | கணம் | வம்ஸம் | வமிசம் |

## ஒழிபு.

முற்றுத்தொடர்மொழி, எச்சத்தொடர்மொழி எனத் தொடர் மொழி இரண்டுவகைப்படும்.

எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருண் முதலியவைக ளோடு கூடாதாயினும் கூடியாயினும் முடிவுபெற்று நிற்குந் தொடர்மொழி முற்றுத்தொடர்மொழியாம். இதுவாக்கியமெனப் படும்.

உ-ம்: சாத்தன் வந்தான்.

சாத்தன் சோற்றை யுண்டான்.

முடிவுபெறாது முற்றுத் தொடர்மொழிக்கு உறுப்பாக வருந் தொடர்மொழி எச்சத்தொடர் மொழியாம்.

உ-ம்: யானைக்கொம்பு.

உண்ட சாத்தன்.

பயனிலை எழுவாயோடு திணை, பால், இடம் என்னும் மூன்றினையும் மாறுபடாது இசைந்து நிற்றல் வேண்டும்.

உ-ம்: நம்பி வந்தான்
நங்கை வந்தாள்
அந்தணர் வந்தார். } வழாநிலை.
நான் வந்தேன்
நீ வந்தாய்

நம்பி வந்தது ... திணைவழு.

நங்கை வந்தார் ... பால்வழு.

அவன் வந்தேன் ... இடவழு.

உயர்திணைப் படர்க்கை யெழுவாய் பலஅடுக்கிவந்தால் பலர்பாற்படர்க்கைப் பயனிலை கொண்டு முடியும். அஃறிணைப் படர்க்கை யெழுவாய் பல அடுக்கி வந்தாற் பலவின்பாற் படர்க்கைப் பயனிலை கொண்டு முடியும்.

உ-ம்: நம்பியும் நங்கையும் வந்தார்.

யானையுங் குதிரையும் வந்தன.

முன்னிலை யெழுவாயோடு படர்க்கையெழுவாய் அடுக்கி வரின், முன்னிலைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும்.

உ-ம்: நீயும்அவனும் போயினீர்.

தன்மை யெழுவாயோடு முன்னிலை யெழுவாயேனும், படர்க்கை யெழுவாயேனும், இவ்விரண்டு எழுவாயுமேனும், அடுக்கிவரின், தன்மைப் பன்மைப் பயனிலை கொண்டு முடியும்;

உ-ம்: யானும் நீயும் போயினோம்.

யானும் அவனும் போயினோம்.

யானும் நீயும்அவனும் போயினோம்.

ஒருவரை உயர்த்திச் சொல்லுமிடத்து, ஒருமைப்பால் பன்மைப்பாலாகவுஞ் சொல்லப்படும்.

உ-ம்: புலவனார் வந்தார்.

முக்காலத்தினும் இடையறாது நடக்கும் பொருளின் வினை நிகழ்காலத்தினாலே சொல்லப்படும்.

உ-ம்: மலை நிற்கின்றன.
கடவுளொருவர் இருக்கின்றார்.

எதிர்காலவினை விரைவுபற்றி நிகழ்காலவினையாகவேனும் இறந்தகால வினையாகவேனுஞ் சொல்லப்படும்.

உ-ம்: வருகிறேன், வருகிறேன்; இது சீக்கிரம் வருவேன் எனப் பொருள் படும்.
உண்டேன், உண்டேன்; இது சீக்கிரம் உண்பேன் எனப் பொருள்படும்.

எதிர்காலவினை மிகுதிபற்றியுந் தெளிவுபற்றியும் இறந்தகால வினையாகவுஞ் சொல்லப்படும்.

உ-ம்: (க) களவுசெய்யிற் கையறுக்கப்பட்டாய்.
(உ) அரசனேயெதிர்த்தாற் கெட்டாய்.

இத்தனையென்று தொகைப்பட்டு நிற்கும் பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும் முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து முற்றும்மை பெற்று வரும்.

உ-ம்: (க) தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்.
(உ) ஒளிமுன் இருள் எங்குமில்லை.

## பரீக்ஷவினா

1. போலியாவது யாது? நண்டு, ஞாயிறு, மயல் என்பவற்றிற்குரிய போலிச் சொற்களைக் கூறுக.
2. ப்ரயோஜனம், ராஜ்யம், பாஷை, பக்ஷி, அக்ஷரம், பஸ்மம், ஹோமம் என்னும் வடசொற்கள் தமிழில் வழங்கும் முறையை எழுதுக.
3. முற்றுத்தொடர்மொழி என்பதை விளக்கி உதாரணமும் கூறுக.
4. வழாநிலைத்தொடரென்றாலென்ன?
5. முன்னிலை எழுவாயோடு படர்க்கை எழுவாய் அடுக்கினாரின் அந்த வாக்கியம் எப்படியான பயனிலைகொண்டு முடியும்?
6. எதிர்காலவினை எக்காரணம்பற்றி நிகழ்காலவினையாகவேனும், இறந்தகால வினையாகவேனும் சொல்லப்படும்?

# பதம், சொல் விளக்கம்

## பதம்.




## சொல்.



## பன்னிரண்டாம் அதிகாரம்

## இணைச்சொற்கள் (பொருளுடன்.)

| | | |
|---|---|---|
| அகம்புறம் | — | உள்ளும்வெளியும் |
| அங்குமிங்கும் | — | இடையிடையே |
| அந்திசந்தி | — | மாலைகாலை |
| அடுக்கணி | — | தேவையான உபகரணங்கள் |
| அண்டபிண்டம் | — | உலகமும் உடம்பும் |
| அடிமுடி | — | காலுந்தலையும் |
| அடிக்கடி | — | பலமுறையும் |
| அருமைபெருமை | — | சீர்சிறப்பு |
| அறம்புறம் | — | தருமத்திற்குமாறாக |
| அரைகுறை | — | பூரணமாய் முடியாமை |
| அல்லோலகல்லோலம் | — | பெருஞ்சங்கடம் |
| ஆதி யந்தம் | — | தொடக்கமும்முடிவும் |
| ஆடிப்பாடி | — | சந்தோஷமாக |
| ஆடையாபரணம் | — | உடைஅணி |
| ஆய்ந்தோய்ந்து | — | ஆறுதலாய் விசாரித்து |
| ஆரத்தீர | — | முற்றாக |
| ஆறித்தேறி | — | ஆறுதலடைந்து தெளிந்து |
| இக பரம் | — | இம்மைமறுமை |
| இங்குமங்கும் | — | இடையிடையே |
| இளைத்துக்களைத்து | — | மெலிந்து அலுத்து |
| இல்லாதது பொல்லாதது | — | பொய்யும் தீமையும் |
| இன்பதுன்பம் | — | சுகமும் துக்கமும் |
| இன்னார் இனியார் | — | பகைவர் நண்பர் |
| ஈடுபாடு | — | கஷ்டம் |
| ஈன இரக்கம் | — | பழி தாட்சணியம் |
| உண்டுடுத்து | — | உணவருந்தி புடைவை யணிந்து |
| உருவுந்திருவும் | — | அழகும் பொருளும் |
| உள்ளும்புறமும் | — | அகத்தும் புறத்தும் |
| உள்ளொன்றுபுறம்பொன்று | — | வஞ்சனையாக |

உற்றாருறவினர் — இனசனத்தார்
உயர்வுதாழ்வு — ஏற்றம் இறக்கம்
உருவுந்திருவும் — அழகும் பொருளும்
ஊண்உடை — உண்டியும் உடையும்
ஊண் உறக்கம் — உணவும் நித்திரையும்
ஊரும் பேரும் — இருக்குமூரும் இடப்பட்ட பெயரும்
எடுக்கப்பிடிக்க — சொன்னதைச்செய்ய
எலும்புந்தோலும் — மிகமெலிவு
எச்சுப்பேச்சு — வாக்குச்சண்டை
ஏத்தியெடுத்து — பேணிப்பாராட்டி
ஏறக்குறைய — சற்றுக்கூடக்குறைய
ஏற்றம் இறக்கம் — உயர்வுதாழ்வு
ஐயந்திரிபு — சந்தேகவிபரீதம்
ஒட்டியுலர்ந்து — மெலிந்து தோல்வற்றி
ஒழிப்புமறைப்பு — இரகசியம்
ஒப்புயர்வு — சமம் மேம்பாடு
ஒன்றிரண்டு — மிகச்சில
ஓடியாடி — முயற்சிப்பட்டு
கங்குகரை — வரம்புஎல்லை
கட்டிச்சுருட்டி — சுருட்டிக்கட்டி ஒளித்து
கட்டையன் நெட்டையன் — குறுகியவன் நெடியவன்
கட்டிக்காத்து — பேணிப்பாதுகாத்து
கண்டதுண்டம் — பலதுண்டுகள்
கண்ணுங் கருத்தும் — அவதானமும் நோக்கமும்
கண்ணீருங் கம்பலையும் — அழுகையும் சோகமும்
கண்டுங் காணாமலும் — தெரிந்தும் தெரியாமலும்
கன்னங்கரிய — மிகக்கரிய
காய்கறி — கறிக்குரிய தாவரப்பொருள்
காய்கனி — காயும் பழமும்
காலநேரம் — ஏற்றகாலம்
காலுந் தலையும் — உடம்புமுழுவதும்

| | | |
|---|---|---|
| கால்மாடுதலைமாடு | — | கார்ப்பக்கந் தலைப்பக்கம் |
| கையும்மெய்யுமாய் | — | உடனுக்குடன் |
| குன்றுங்குழியும் | — | மேடும்பள்ளமும் |
| கொண்டுகொடுத்து | — | வாங்கிக்கொடுத்து |
| கோணிநாணி | — | ஒடுங்கி வெட்கப்பட்டு |
| சட்டதிட்டம் | — | பிரமாண ஒழுங்கு |
| சிற்சில | — | மிகச்சில |
| சின்னஞ்சிறிய | — | மிகச்சிறிய |
| சீர்சிறப்பு | — | பெருமை அழகு |
| சிரிப்புக்களிப்பு | — | நகைத்து ஆரவாரஞ்செய்து |
| சீராட்டிப் பாராட்டி | — | புகழ்ந்து பேணி |
| சுகதுக்கம் | — | இன்பதுன்பம் |
| சூதும்வாதும் | — | வஞ்சனையுங் குதர்க்கமும் |
| சோறுஞ் சீலையும் | — | உணவும் உடையும் |
| தட்டாமல் முட்டாமல் | — | ஒரு தடையுமில்லாமல் |
| தவிடுபொடி | — | நுண்ணிய துகள் |
| துணிமணி | — | உடை ஆபரணம் |
| தோட்டந் துரவு | — | புலமும் அதிலுள்ள நீர்நிலையும் |
| நரை திரை | — | மயிர்நரைத்தல் தோல்சுருங்குதல் |
| நன்மை தீமை | — | நல்லது தீயது |
| நாளுங் கோளும் | — | நல்லநாளுங் கிரகமும் |
| நாடுநகர் | — | தேசம் பட்டினம் |
| பழக்கவழக்கம் | — | பயிற்சியும் பழையகொள்கை |
| பாரதூரம் | — | மிகப்பெரியது |
| புல்பூடு | — | புல்லுஞ் சிறுசெடிகளும் |
| பேர்புகழ் | — | அதிககீர்த்தி |
| பொருள்பண்டம் | — | செல்வமும் பலபண்டங்களும் |
| போக்குவரத்து | — | போதலும் மீண்டுவருதலும் |
| போர்த்துமூடுதல் | — | இரகசியமாக வைத்திருத்தல் |
| முற்றமுடிய | — | தீர்க்கமாக |
| வணங்கித்துதித்து | — | கும்பிட்டு வாழ்த்தி |
| வாடிவதங்கி | — | உலர்ந்து |

| | | |
|---|---|---|
| வாழ்வு தாழ்வு | — | இன்பதுன்பம் |
| விதிவிலக்கு | — | முறையானது முறையற்றது |
| விருப்பு வெறுப்பு | — | உவத்தல்காய்தல் |
| வீரதீரம் | — | மிக்கவலிமை, துணிவு |
| வெற்றிதோல்வி | — | வெல்லுதலுந் தோல்வியடைதலும் |

குறிப்பு: இப்படியான இணைச்சொற்கள் இன்னும் பலவுள. வந்துழிக் கண்டுகொள்க.

## அடுக்குச்சொற்கள்

இச்சொற்களிற்பல அநுகரணவோசை எனப்படும் ஒலிக் குறிப்புக்களாகும்.

| | | | |
|---|---|---|---|
| அடஅட | குறுகுறு | சுறுசுறு | பரபர |
| கடகட | குடுகுடு | தகதக | பறபற |
| கணகண | குமுகுமு | தளதள | புறுபுறு |
| கணீர்கணீர் | கொலுகொலு | தழீய்ம்தழீய்ம் | பொறுபொறு |
| கலகல | கொழுகொழு | தனதன | மடமட |
| கடுகடு | கொறகொற | திடுதிடு | மளமள |
| கரகர | சடசட | துருதுரு | மினுமினு |
| கலீர்கலீர் | சரசர | நெருநெரு | முணுமுணு |
| கறகற | சலசல | நெறுநெறு | பொலுபொலு |
| கிடுகிடு | சளசள | பகபக | வழவழ |
| கிறுகிறு | சிடுசிடு | படபட | வழுவழு |
| கிணுகிணு | சிலுசிலு | பளபள | விறுவிறு |
| | | | வெடுவெடு |

## பரீசைஷவினு

1. கீழ்வரும் இணைச்சொற்களின் பொருள்களைக் கூறுக: அடுக்கணி, அறம்புறம், அல்லோலகல்லோலம், ஆதியந்தம், இன்னார்இனியார், ஊண்உடை, ஒப்புஉயர்வு, கங்குகரை.
2. பின்வரும் வாக்கியங்களை வைத்து ஏற்றவசனம் எழுதுக: கன்னங்கரிய, காலநேரம், நரைதிரை, வணங்கித்துதித்து.
3. கறகற, குடுகுடு, சடசட, படபட, வெடுவெடு என்னும் அடுக்குச் சொற்களை வைத்துச் சிறு வாக்கியங்கள் எழுதுக.

# பதின்மூன்றும் அதிகாரம்

## உவமை வாக்கியங்கள்

அகலாது அணுகாது தீக்காய்வார்போல்
அகழ்வாரைத்தாங்கு நிலம்போல்
அச்சில்லா வண்டிபோல்
அடியற்ற மரம்போல்
அடிக்கொம்பிலிருந்து நுனிக்கொம்பு தறிப்பதுபோல்
அடியிலிருந்து கரும்பு தின்றவாறு
அடிவயிற்றில் இடிவிழுந்ததுபோல்
அடிவயிற்றில் நெருப்பைக் கொட்டினாற்போல்
அடுங்காலை நீர் கொண்ட வெப்பம் போல்
அடுத்தது காட்டும் பளிங்கன்ன
அடைகாக்குங் கோழிபோல்
அதிகாரிவீட்டில் திருடிவிட்டுத் தலையாரிவீட்டில் அடைக்கலம் புகுந்தவாறு
அத்திமரம் பூத்தாற்போல்
அநுமார் இலங்கையை எரித்தவாறு
அம்பட்டன் குப்பையைக் கிளறியவாறு
அம்பேறுண்ட மயில்போல
அம்மிதுணையாக ஆற்றிலிறங்கியவாறு
அரங்கின்றி வட்டு ஆடியவாறு
அரிசியள்ளிய காகம்போல்
அருஞ்சுரத்தில் நிற்கும் மரம்போல
அரைப்படிப்புக்கொண்டு அம்பலம் ஏறியவாறு
அழகுக்கு அழகு செய்வதுபோல
அனலிடைப்பட்ட மெழுகுபோல
அறநெறியாலீட்டாத பொருள்போல
அற்ற குளத்து அறுநீர்ப்பறவைபோல்
அன்றிலும் பெடையும்போல
அன்னநடை நடக்கப்போய்த் தன்னடையுங்கெட்ட காக்கைபோல

ஆகாயத்திற் கோட்டை கட்டுவதுபோல
ஆகாயத்தைப்படல்கொண்டு மூடமுயன்றவாறு
ஆடி ஓய்ந்த பம்பரம்போல
ஆண்டிகள்கூடி மடங்கட்டியவாறு
ஆந்தை விழிப்பதுபோல
ஆப்பிழுக்கப்புறப்பட்ட குரங்குபோல
ஆமை ஐந் தடக்கியவாறு
ஆலம் வித்துப் போல்
ஆலம் விழுதுபோல்
ஆலையிலகப்பட்ட கரும்புபோல்
ஆறுஇடும் மேடும் மடுவும்போல்
ஆற்றிலிட்டுக் குளத்துள்ளே தேடியவாறு
ஆற்றங்கரையின் மரம்போல
ஆற்றிற்கரைத்த புளிபோல
ஆனைகட்டச்சங்கிலி தானேஎடுத்துக் கொடுத்தவாறு
ஆனைக்குப்பானை சரியென்றாற்போல்
ஆனைதன்தலையில் மண்ணைவாரி இட்டவாறு
ஆனையும் அறுகம்புல்லிலே தடக்கியவாறு
ஆனைவாயில் அகப்பட்ட கரும்புபோல
இடியொலிகேட்ட சர்ப்பம்போல்
இடியேறுண்ட மரம்போல
இணைபிரிந்த அன்றில்போல்
இரண்டு தோணியிற் கால்வைத்தவாறு
இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல
இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறு
இலவுகாத்த கிளிபோல
இலைமறை காய்போல
இனம் இனத்தைத் தேடியவாறு
இனம் பிரிந்த மான்போல்
ஈயார்தேட்டைத் தீயார் கவர்ந்தவாறு
உடலும் உயிரும்போல
உடுக்கை இழந்தவன் கைபோல

உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசுவார்போல
உப்பிருந்த பாண்டம்போல்
உமிக்குற்றிக் கையலுத்தவாறு
உருத்திராக்கப் பூனைபோல
உலக்கை தேய்ந்து உளிப்பிடி யானவாறு
உலைப்படு மெழுகுபோல
உள்ளங்கை நெல்லிக்கனிபோல
உள்ளீடற்றதாகிய பதர்போல
உறங்கி விழிப்பதுபோல
ஊஞ்சற்கயிறுபோல
ஊமைகண்ட கனவுபோல
ஊருணி நீர் நிறைந்தவாறு
எச்சிற் கல்லைக்கு இச்சைப்பட்ட நாய்போல
எட்டாப்பழத்திற்குக் கொட்டாவிவிட்டவாறு
எட்டிமரம் பழுத்தவாறு
எமனைக்கண்ட உயிர்போல
எரிகிற கொள்ளியை எறத்தள்ளியவாறு
எருமை முதுகுக்குப் படல் கட்டிவைத்தவாறு
எரியிலகப்பட்ட பஞ்சுபோல
எள்ளுக்காய் பிளந்தாற்போல
ஏதிலார் குற்றம்போல்
ஏருமடைக்கு நீர் பாய்ச்சியவாறு
ஒருதாய் வயிற்றிற் பிறந்த பிள்ளைகள்போல்
ஒரு நாட்கூத்துக்குத் தன் மீசையைச்சிரைத்தவன்போல்
ஒளியைக்கண்ட இருள்போல்
கடலைக்கையினல் நீந்திக் கரையேற முயன்றாற்போல்
கடற்கரை மணலை கணக்கிடமுயன்றவாறு
கடன்பட்டார் நெஞ்சம்போல்
கட்டுக்கடங்காக் காளைபோல
கண்ணாடி வீட்டில் வசிப்பவர்போல
கண்ணில்லாதான் கண்பெற்று இழந்தவாறு
கரடி புற்றிலே வாய்வைத்தாற்போல
கரதல ஆமலகம் போல

கருடனைக்கண்ட பாம்புபோல
கரும்பிருக்க இரும்பைக்கடித்தவாறு
கரும்புதின்னக் கைக்கூலி கேட்டவாறு
கலங்கரைத் தீபம்போல
கலியாணச்சந்தர்ப்பத்தில் தாலிகட்ட மறந்தவாறு
கல்லிலே நார் உரிப்பதுபோல
களைபறியா விளைநிலம்போல
கமரிலூற்றிய பால்போல
கனலி லகப்பட்ட மெழுகுபோல
கனியிருக்கக் காய் கவர்ந்தவாறு
கல்லின்மேலிட்ட கலம்போல
கன்றைப்பிரிந்து கதறும் பசுப்போல
காகம் உறவுகலந்துண்பதுபோல
காகம் இருக்கப் பனங்காய் விழுந்தவாறு
காட்டிலெறித்த நிலாப்போல
காட்டுத்தீ பற்றிப் பரவியவாறு
காதலன் வரக்கண்ட கற்புடைமனைவிபோல
காந்தம் இரும்பை இழுப்பதுபோல
காந்தனை இழந்த கனங்குழலாள்போல்
காம்பிலா மூழைபோல
கார்த்திகைப் பிறை கண்டாற்போல
காலத்திற் செய்த உதவிபோல
காலத்திற் பெய்த மழைபோல
காலுக்கிடவேண்டியதைத் தலைக்கிட்டாற்போல
காற்றுடன் நெருப்புச் சேர்ந்தாற்போல
கானலை நீரென்றெண்ணி கடுவெளி அலையும்மான்போல்
கிணறு தோண்டப் பூதம் புறப்பட்டவாறு
கிளியைப் வளர்த்துப் பூனையிடம் கொடுத்தவாறு
கீரிவாய்ப்பட்ட பாம்புபோல்
குங்குமஞ் சுமந்த கழுதைபோல
குடத்துள்வைத்த தீபம் போல
குடியிருக்கும் வீட்டிற் கொள்ளி சொருகினாற்போல்

குட்டியிட்ட நாய்போல
குப்பையிலிட்டாலுங் குன்றிமணி ஒளிகுன்றுதவாறு
கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டவாறு
குரங்கின்கையிற் கொள்ளி கொடுத்தவாறு
குரங்கின்கைப் பூமாலைபோல
குருடனுக்குக் குருடன் வழிகாட்டினாற்போல
குருடும் செவிடும் கூத்துப் பார்த்தாற்போல
குருத்திற் கரும்பு தின்றாற்போல
குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புபோல
குருவியின் தலையிற் பனங்காயைச் சுமத்தியவாறு
குழந்தையையுங் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டியவாறு
குழியில் விழ்ந்த யானைபோல
குளவிக் கூட்டிற் கல்லெறிந்தவாறு
குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசியவாறு
குன்று முட்டிய குருவிபோல
குன்றின்மே லிட்ட தீபம்போல
கொல்லன் உலைமுகத்து மெழுகுபோல
கொடுக்கிலாதானைப் பாரி என்று பாடியவாறு
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல
சருக்கரைப் பந்தரில் தேன்மாரி சொரிந்தவாறு
சாடிக்குமூடி வாய்த்தாற்போல
சித்திரப்பாவை போல
சிவபூசையிற் கரடி புகுந்தவாறு
சிறியகண்ணாடியிற் பெரியமலையைக் காண்பதுபோல
சிறியார் மணற்சோற்றிற் கல் ஆராய்வதுபோல
சிலையில் எழுத்துப்போல
சீதேவியுடன் மூதேவி பிறந்தாற்போல
சுடச்சுட ஒளிருஞ் செம்பொன்போல
சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாதவாறு
சுழல் காற்றி லகப்பட்ட துரும்புபோல
சூரியனைக்கண்ட இருள்போல
சூரியனைக்கண்ட தாமரைபோல
சூரியனைக்கண்ட பனிபோல

செவிடன் காதிற் சங்கூதியவாறு
சேற்றிலே தாமரை முளைத்ததுபோல்
தங்கக் கம்பி போல
தங்கத்தை உருக்கி ஊற்றியவாறு
தரித்திரனுக்குப் புதையல் அகப்பட்டவாறு
தழலில் அகப்பட்ட மெழுகதுபோல
தழலில் இட்ட தளிரதுபோல
தாமரையிலையில் நீர்போல
தாயைப்பிரிந்த சேயைப்போல
தாரகைமத்தியிற் சந்திரன்போல
தானேவரும் சிதேவியைக் காலால் உதைத்தவாறு
திங்களைக்கண்டு கடல் பொங்குவதுபோல
திரிசங்கு சுவர்க்கம் போல
திருடப்புகுந்தவனைத் தேள்கொட்டியவாறு
தீச்சுடரை நீர்பெய்து வளர்க்க முயன்றவாறு
துரும்பு பெருத்துத் தூணான வாறு
தூண்டாமணி விளக்குப்போல்
தூண்டிலில் அகப்பட்ட மீன்போல
தென்றல்முற்றிப் பெருங்காற்றானவாறு
தேடியபூடு காலிலே தடக்கியவாறு
தொட்டனைத்தூறும் மணற்கேணிபோல
நஞ்சு தலைக்கேறிய வாறு
நடுவூரிலே நல்லமரம் பழுத்தவாறு
நடுக்கடலிற் கலங் கவிழ்ந்தவாறு
நட்டாற்றிற் கைவிட்டவாறு
நட்டாற்றிலே கட்டையனையும் நெட்டயனையும் அறிதல்போல
நண்டைச்சுட்டு நரியைக் காவல்வைத்தவாறு
நரிவால் கொண்டு கடலாழம் பார்த்தவாறு
நல்லமரத்திற் புல்லுருவி பாய்ந்தவாறு
நன்னரிற் பூட்டிய சூத்திரப் பாவைபோல்
நாண் அறுந்த வில்லைப்போல்
நாய்வாலைச் சீர்படுத்த முயன்றவாறு
நாய்க்குத் தவி சிட்டவாறு

நாய் வெற்றெலும்பைக் கௌவிக் கடித்தவாறு
நாய்வாலைப்பற்றி நதிகடக்க முயன்றவாறு
நாராசத்தைக் காய்ச்சிக் காதிற் சொருகியவாறு
நிறைகுடம் நீர் தளம்பாதவாறு
நீரைப்பிரித்துப் பாலைப்பருகும் அன்னம்போல
நீர்க் குமிழி போல
நீர்க்குட் பாசிபோல்
நீர்மேல் எழுத்துப்போல்
நீறு பூத்த நெருப்புப் போல
நுணலுந் தன் வாயாற் கெடுதல்போல
நுனிக்கொம்பரிலிருந்து அடிக்கொம்பரைத் தறித்தவாறு
நுனியிற் கரும்பு தின்றவாறு
நூலில்லாமல் மாலை கோக்கமுயன்றவாறு
நெஞ்சு நோமென்று தலைதுணிப்பான் தன்னைவிபோல்
நெருப்பிடை நெய் சொரிந்தாற்போல
பசுத் தோல் போர்த்த புலி போல
பசுமட்கலத்துள் ஊற்றிய நீர்போல
பசித்தவன் பழங்கணக்குப் பார்த்தாற்போல
பசுவைக் கொன்று செருப்புத் தானங்கொடுத்தவாறு
பசுமரத் தாணிபோல
பயன்மரம் ஊர் நடுவிற் பழுத்தாற்போல
பருத்தி புடைவையாய்க் காய்த்தாற்போல
பருந்தின் வழி தொடரும் நிழல்போல
பலாக்காய்ப்பாலில் பற்றிய ஈபோல
பல்லுப் பிடுங்கப்பட்ட பாம்புபோல
பழம் நழுவிப் பாலில் விழுந்தவாறு
பழம் பழுத்ததைக்கண்டு வௌவால் வந்தவாறு
பழு மரத்தை நாடும் பறவையைப்போல
பள்ளத்தை நாடும் வெள்ளம் போல
பறைபடவாழா அசுணமாப்போல
பனியை நம்பி நெல் விதைத்தாற்போல
பனையால் விழுந்தவனை மா டேறி மிதித்தவாறு

பாகிற் படு கரிபோல்
பாம்பின் வாய்ப்பட்ட தேரைபோல
பாம்பின் கால் பாம்பறியும் என்றவாறு
பாம்பிற்குப் பால் வார்த்தவாறு
பாம்புண்டநீர் நஞ்சாதல்போல
பாம்பிற்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்கு போல
பாய்மரத்தில் அகப்பட்ட காகம்போல
பாலுடன் சேர்ந்த நீர்போல
பாலைக் காய்ச்சிப் பூனையைக் காவல் வைத்தவாறு
பால் நினைந்தூட்டும் தாய்போல
பாவிடை ஆடு குழல்போல்
பிஞ்சிலே பழுத்தாற் போல
பிரிந்தவர் கூடினாற் போல
பிள்ளைப் பெற்றவளைப்பார்த்து மலடி பெருமூச்சுவிட்டவாறு
பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தவாறு
பிரையிட்ட பால் போல்
புண்ணிலே புளிப் பட்டவாறு
புலியைக் கண்ட மான்போல
புற்றிலே ஈசல் புறப்பட்டவாறு
பூவாதே காய்க்கும் மரம்போல
பூவும் மணமும் போல
பூவுடன் சேர்ந்த நார்போல
பூனைவாய்ப்பட்ட கிள்ளைபோல
பெருங்காயம் இருந்த குடுக்கைபோல
பேய்க்கு வேப்பிலை போல
பொதி சுமக்கும் மாடுபோல
பொன் காத்த பூதம்போல
பொன்மலர் வாசனை உற்றாற் போல
போருக்கு முற்பட்டபின் ஆயுதம் தேடுவது போல்
மணியும் ஒளியும் போல
மண்ணின் குணம்போல
மதியில்லா வானம் போல

மதில்மே லேறிய பூனைபோல
மது வுண்ட குரங்கைப்போல
மத்தெறி தண் தயிர்போல
மலையும் மலையும் மோதினாற்போல
மலைமிசைத் தோன்றும் மதியம்போல
மலைமிசை ஏற்றிய விளக்குப்போல்
மீகாம னில்லா மரக்கலம் போல
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டவாறு
முதலை பிடித்தது போல
முயற் கொம்பு போல
மூழை (அகப்பை) சுவையறியாததுபோல
மொட்டைத் தலைச்சியை அளகவல்லிஎன்றாற்போல
மோப்பக் குழையும் அனிச்ச மலர்போல
யானைமுன் பூனைபோல
யானையுண்ட விளாங்கனிபோல
யானைமேற் போவோனைச் சுண்ணம்பு கேட்டவாறு
வலையிற் சிக்கிய மான்போல
வலையினின்றும் தப்பிய மீன்போல
வழுக்கி விழுவோனுக்கு ஊன்றுகோல் கிடைத்தவாறு
வளர்த்தகடா மார்பிலே தாக்கியவாறு
வளர் மதி போல
வாடும்பயிருக்கு மழைபெய்தாற்போல
வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் இழந்தவள் சிலமாக
வாழும்பிள்ளையைத் தாய் கெடுத்தவாறு
வாழைப்பழத்தில் ஊசி ஏறியவாறு
வானத்து மீனுக்குத் தூண்டி லிட்ட வகையதுபோல்
வானூர் மதியம் போல்
வித்துக்கு விட்ட சுரைக்காய்போல
விழலுக்கு இறைத்த நீர்போல
விழுகிறசுவரிலே கைவைத்தாற்போல
விளக்கில் மொய்க்கும் விட்டில்போல
விளக்கின்முன் இருள்போல
விளையாட்டு வினையாய் முடிந்தவாறு

வெங்கலக்கடையில் யானை புகுந்தவாறு
வெண்ணெய் திரண்டுவரும்போது தாழி உடைந்தவாறு
வெந்த புண்ணில் வேலெறிந்தவாறு
வெள்ளிடை மலைபோல்
வேடர் கையி லகப்பட்ட மான்போல்
வேலி பயிரை மேய்ந்தவாறு
வைக்கோற் படப்பைப் பழுதையைப் பாம்பென்று நினைத்தவாறு.

## பரீக்ஷை வினா

1. கீழ்வரும் உவமை வாக்கியங்களை ஏற்றவசனங்களெழுதித் தனித்தனி முடிக்குக :
அகழ்வாரைத் தாங்கு நிலம்போல்; ஆடி ஓய்ந்த பம்பரம்போல; உருத்திராக்கப் பூனைபோல்; கருடனைக்கண்டபாம்பு போல்; குடத்துள்வைத்த தீபம்போல்; குளிக்கப்போய் சேற்றைப் பூசியவாறு.
2. பின்வரும் உவமை வாக்கியங்கள் அமைந்த பாட்டுக்களை அறிந்தவரையில் எடுத்துக்காட்டுக :
அடுத்தது காட்டும் பளிங்கன்ன; அம்மிதுணையாக ஆற்றில் இறங்கியவாறு; ஆறுஇடும் மேடும் மடுவும்போல்; இருதலைக் கொள்ளியுள் எறும்புபோல; இரும்பைக்காந்தம் இழுக்கின்றவாறு; ஊருணி நீர் நிறைந்தவாறு; ஏதிலார் குற்றம்போல்; கனியிருப்பக் காய் கவர்ந்தவாறு; கொடுக்கிலாதானைப் பாரி என்று பாடியவாறு; சித்திரப் பாவைபோல்.
3. "ஆப்பிழுக்கப் புறப்பட்ட குரங்குபோல்" என்ற உவமை வாக்கியத்தில் அடங்கிய கதையை எழுதுக.

---

# பதினான்காம் அதிகாரம்
# தமிழ் நாட்டில் வழங்கும் பழமொழி
## (திரட்டு)

## அ

அகதிக்குத் தெய்வமேதுணை
அகத்தின் அழகு முகத்திற் றெரியும்
அகத்தி ஆயிரம் காய்த்தாலும் புறத்தியே புறத்தி
அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா
அஞ்சுபணத்துக் குதிரையும்வேணும் ஆறுகடக்கப்பாயவும் வேணும்

அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்
அடாத செய்பவர் படாத படுவர்
அடிநாக்கில் நஞ்சு நுனிநாக்கில் அமிர்தம்
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
அடியாத மாடு படியாது
அப்பனருமை மாண்டாற்றெரியும், உப்பினருமை ஒழிந்தாற்றெரியும்
அப்பாஎன்றால் உச்சி குளிருமா
அம்பட்டன் குப்பையைக்கிளறினால் அத்தனையும் மயிர்
அரசன் அன்றறுக்கும் தெய்வம் நின்றறுக்கும்
அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி
அரைக்காசுக்குப் போனமானம் ஆயிரங் கொடுத்தாலும் வராது
அவசாரிக்கு ஆணையில்லை; திருடனுக்குத் தெய்வமில்லை
அவனன்றி அணுவு மசையாது
அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்
அழுத பிள்ளை பால் குடிக்கும்
அளவுக்கு விஞ்சினால் அமிர்தமும் நஞ்சு
அறிவுடையவனை அரசனும் விரும்பும்
அறையில் ஆடியபின் அம்பலத்தில் ஆடவேண்டும்
அற்பரானவருக்குச் செல்வம் அல்லது பகை வேறுண்டோ
அற்பனுக்குச் செல்வம் வந்தால் அர்த்தராத்திரியிற் குடை பிடிப்பான்
அன்பிலாதவர்மீதிலே கொள்ளும் ஆசையும் ஒரு ஆசையோ

## ஆ

ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறுக்க வொண்ணாதா
ஆங்காலம்ஆகும் போங்காலம் போகும்
ஆசை வெட்க மறியாது
ஆத்திரகாரனுக்குப் புத்தி மத்திமம்
ஆபத்துக்குப் பாவமில்லை
ஆயிரங் காக்கைக்கு ஒருகல்
ஆருமற்றோர்க்குத் தெய்வந்துணை

ஆலும் வேலும் பல்லுக் குறுதி
ஆழமறியாமற் காலை யிடாதே
ஆறினசஞ்சி பழங்கஞ்சி
ஆறிலுஞ் சா நூறிலுஞ் சா
ஆனைக்கும் அடி வழுக்கும்
ஆனைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே

## இ

இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
இட்டுக் கெட்டார் எவருமில்லை
இந்தநடை வண்டி இடுப்பிலே கை எண்டி
இருந்தகால் மூதேவி நடந்தகால் சீதேவி
இருப்பது பொய் போவது மெய்.
இலங்கணம் பரம ஔடதம்
இல்லாதவன் சொற் செல்லாது
இளமையிற் கல்வி சிலையி லெழுத்து
இனம் இனத்தை நாடும்
இன்றைக்கிருந்தாரை நாளைக் கிருப்பரென்று எண்ணவோ திடமில்லை

## ஈ

ஈயார்தேட்டைத் தீயார் கொள்வர்
ஈயாதபுல்லர் இருந் தென்ன போ யென்ன.
ஈனரை அடுத்தால் மானங் கெடவரும்

## உ

உடல் உள்ளவரையிற் கடல் கொள்ளாக் கவலை
உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா.
உடைமை என்பது கல்வி உடைமை
உடையவன் பாராக் கருமம் ஒரு முழங் கட்டை
உடையவன் சொற்படி கமுகடி களைபறி
உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாமா
உதட்டிலே உறவும் உளத்திலே நஞ்சும்
உத்தமனை யிரு

உப்பிட்டவரை உள்ளளவும் நினை
உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா
உலகம் பல விதம்
உழுகிறமாடானால் உள்ளூரில் விலைப்படாதா
உளவில்லாமற் களவில்லை
உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்

## ஊ

ஊருக்கென்றொரு தேவடியாள் ஆருக்கென்று ஆடுவாள்
ஊரோடுகில் ஒக்க ஓடு, ஒருவன் ஓடுகிற் கேட்டோடு
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
ஊனைத்தின்று ஊனைப் பெருக்காமை முன்னினிதே

## எ

எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விட்டவாறு
எட்டிபழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன
எண்ணுமெழுத்தும் கண்ணெனத் தகும்
எண்ணித் துணிக கருமம்
எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம்
எய்தவ னிருக்க அம்பைநோகலாமா
எலிவளையானாலும் தனிவளைநல்லது
எறும்புந் தன்கையால் எண்சாண்
எறும்பூரக் கல்லுந் தேயும்

## ஏ

ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளொக்கும்
ஏறச் சொன்னால் எருதுக்குக்கோபம் இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்
ஏற்றமும் தாழ்வும் மாறிமாறி நிகழும்

## ஐ

ஐயம்இட்டுண்
ஐயம் புகினுஞ் செய்வன செய்

## ஒ

ஒருகைதட்டினால் ஓசை உண்டாகுமா
ஒரு நன்றி செய்தாரை உள்ளளவும் நினை
ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்

## ஓ

ஓரூருக்குப் பேச்சு ஓரூருக்கு ஏச்சு

## ஔ

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு

ஔவை சொல்லைச் செவ்விதிற் போற்றுக

## க

கடவுளை நம்பினோர் கைவிடப்படார்

கடல் வற்றிக் கருவாடு தின்ன இருந்த காக்கை குடல்வற்றிச் செத்ததாம்

கடன் கொண்டார் நெஞ்சம்போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்

கரும்பு கட்டோ டிருந்தால் எறும்பு தானே வரும்

கரும்பு இனிப்பென்று வேரோடு பிடுங்குவதா

கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்

கல்விக் கழகு கசடற மொழிதல்

கல்விஎன்னும் பயிருக்குக் கண்ணீர் என்னும் மழை வேண்டும்

கல்வி கரையில கற்பவர்நாள்சில

கற்றாரைக் கற்றாரே காமுறுவர்

கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு

கனவிற்கண்ட பணம் கைச்செலவிற் காகுமா

## கா

காக்கைக்குந் தன்குஞ்சு பொன் குஞ்சு

காணவே பனைக்கீழ் ஆப்பால் குடிக்கினுங் கள்ளே என்பர்

காய்த்த கொம்பு பணியும்

காய்த்த மரங் கல்லெறிபடும்

காலம் போம் வார்த்தைநிற்குங் கண்டாயே

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும்

## கி

கிட்டாதாயின் வெட்டென மற

## கீ

கீழோராயினுந் தாழ வுரை
கீரைக் கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்

## கு

குடியைக் கெடுக்கவந்த கோடரிக்காம்பு
குணத்தை மாற்றக் குருவாலும் முடியாது
குயவனுக்குப் பலநாள்வேலை தடியடிகாரனுக்கு ஒருநிமிஷவேலை
குருட்டுக் கண்ணுக்கும் நித்திரை யுண்டு
குரு வில்லா வித்தை பாழ்
குரைக்கிறநாய் கடியாது
குலங் குப்பையிலே பணம் பந்தியிலே
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
குற்றம் பார்க்கிற் சுற்ற மில்லை

## கூ

கூலிக்கு வேலி யடைக்கப்போய் எல்லைக்கு வழக்குப் பேசுவதா
கூழுக்கு மாசை மீசைக்கு மாசை

## கெ

கெடுகுடி சொற் கேளாது
கெடுவார் கேடு சூழ்வர்
கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும்

## கே

கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கேளுங் கிளையுங் கெட்டோர்க் கில்லை
கேள்விச் செவியன் குடியைக் கெடுத்தான்

## கை

கைக் கெட்டியது வாய்க் கெட்டவில்லை
கைப்பொருள்தன்னின் மெய்ப்பொருள் கல்வி

கையிலுள்ள ஒரு பறவை காட்டிலுள்ள நூறு பறவைக்குச் சரி
கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா

## கொ

கொடுத்தாற் குறைவருமோ அச்சுதானந்த கோவிந்தனே
கொடிக்குக் காய் பாரமா
கொல்ல தெருவில் ஊசி விற்கலாமா
கொன்றாரைக் கொல்லுங் கொலை

## கோ

கோடாலிதன்னுளே மரமது நுழைந்து தன் கோத்திரமெலாமழிக்கும்
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கோபஞ் சண்டாளம்
கோபம் பாவம்
கோவிலிற் பூனை தேவரை மதியாது.

## ச

சண்டைக்குப் பிந்து சபைக்கு முந்து
சத்திக் கழகு வந்தி செய்யாமை
சந்தியிற் பாண்டமென்பதை நாய் அறியுமா

## சா

சாட்சிக்காரன் காலில் விழுவதிலுஞ் சண்டைக்காரன் காலில் விழலாம்
சாண் ஏற முழஞ் சறுக்கும்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்

## சி

சிறியோர் செய்யுஞ் சிறுபிழை யெல்லாம் பெரியோராயிற் பொறுப்பதுகடனே
சிறுபிள்ளைவேளாண்மை வீடு வந்து சேராது
சிறுதுரும்பும் பல்லுக் குற்ற உதவும்
சிறு துளி பெரு வெள்ளம்

## சீ

சீரைத் தேடின் ஏரைத் தேடு
சீரியோர்க்கில்லை பூரிய ஒழுக்கம்

## சு

சுவாமி விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடான்
சுவர் இருந்தாற்றானே சித்திரந் தீட்டலாம்
சுற்றத்திற் கழகு சூழ விருத்தல்

## சூ

சூடுகண்டபூனை அடுப்பண்டை போகாது
சூதும் வாதும் வேதனை செய்யும்

## செ

செட்டி நட்டந் தட்டான்மேலே தட்டான் நட்டம் ஊரார்மேலே

செய்வன திருந்தச் செய்
செய்தவினையிருக்கத் தெய்வத்தை நொந்து ஆவதென்ன
செய்தார்க்குச் செய்வார் செத்தபிறகா
செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்

## சே

சேற்றிலே கல் விட்டெறியாதே சேம்புக்குப் புளிவிட்டாக்காதே

சேரிடம் அறிந்து சேர்

## சை

சையெனத் திரியேல்

## சொ

சொல்லம்பை வில்லம்பு வெல்லாது
சொல்வார் சொன்னாலும் கேட்பார்க்கு மதி என்ன
சொல்வதைச் சொல்லுங் கிளி
சொற் சோர்வு படேல்

## சோ

சோம்பித் திரியேல்

## த

தட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்
தந்தை தாய் பேண்
தந்தைசொன் மிக்க மந்திர மில்லை
தந்தை எவ்வழி மைந்தனும் அவ்வழி
தலையி லெழுத்தை அழிக்க முடியாது
தன் வினை தன்னைச் சுடும்
தன்னப்பம் தன்னைச்சுடும்; ஓட்டப்பம் வீட்டைச்சுடும்
தன்வீட்டு விளக்கென்று முத்தமிட வொண்ணாது

## தா

தாந்தாம் முன் செய்தவினை தாமே அநுபவிப்பர்
தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை
தாயோடு அறுசுவை போம்
தாயைப்போலப் பிள்ளை, நூலைப்போலச் சேலை
தாயும் பிள்ளையு மானாலும் வாயும் வயிறும் வேறு
தாரமுங் குருவுந் தலைவிதிப்படி யாம்
தானே கனியாத கனியைத் தடிகொண்டடித்தாற் கனியுமா
தான் கள்ளன் பிறரை நம்பான்
தான் சாக மருந் துண்பாரு முண்டா

## தி

திரு வேற உரு வேறும்
திரைகட லோடியுந் திரவியந் தேடு
தினைத்துணை நன்றி செய்யின் பனைத்துணையாக் கொள்வார் பெரியோர்

## தீ

தீ யில்லாமற் புகையாது
தீயாரைக் காண்பதுவுந் தீதே
தீராக்கோபம் போராய் முடியும்

## து

துணைப் போனாலும் பிணைப் போகாதே

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
துஷ்டரைக்கண்டால் தூர விலகு
துன்னுகிற மாடு பொதி சுமவாது

## தூ

தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தூரத்தி லுறவு ஆபத்திற் குதவாது

## தெ

தெய்வ மிகழேல்
தெய்வஞ் சீறிற் கைதவம் மாளும்

## தே

தேசத்தோ டொத்து வாழ்
தேடா தழிக்கிற் பாடாய் முடியும்
தேன் தொட்டார் நக்குவர்

## தொ

தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்

## தோ

தோழனேடும் ஏழைமை பேசேல்
தோட்டி முதல் தொண்டைமான் ஈருக

## ந

நக்குகிறநாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன
நகத்தாற் கிள்ளுவதற்குக் கோடரி என்
நன் மாட்டிற்கொருசூடு, நற்பெண்டாட்டிக் கொருவார்த்தை
நல்லவன் என்று பேர் பெறுவதற்கு நாட்செல்லும்
நல்லாரைக் காண்பதுவும் நன்றே
நல்லார் பொல்லாரை நடத்தையாற் காணலாம்

## நா

நா அசைய நா டசையும்
நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைத்தது
நாய்க்கு வேஷம் போட்டால் குரைக்கவேண்டும்

## நி

நித்தம் போனல் முற்றஞ் சலிக்கும்
நிழலின் அருமை வெயிலிலே தெரியும்

## நீ

நீலிக்குக் கண்ணீர் இமையிலே

நீரளவே ஆகுமாம் நீராம்பல்
நீ றில்லா நெற்றி பாழ்

## நு

நுண்ணிய கருமம் எண்ணித் துணிக
நுணலுந் தன் வாயாற் கெடும்

## நூ

நூல் பல கல்
நூலளவே யாகுமாம் நுண்ணறிவு

## நெ

நெய்க்குடமுடைந்தது நாய்க்கு வேட்டை
நெய்யில்லா உண்டி பாழ்
நெல்லை விதைத்தவன் நெல்லை அரிவான்
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சக மில்லை
நெல்லுக்கு இறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்குமாங்கே பொசியுமாம்
நெல்லுக்கு உமியுண்டு நீருக்கு நுரையுண்டு
பூவுக்குப் புல்லிதழுண்டு

## நே

நேர்பட ஒழுகு
நேரா நோன்பு சீராகாது

## நொ

நொய்ய வுரையேல்

## நோ

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
நோய்க் கிடங் கொடேல்
நோன்பென்பதுவே கொன்று தின்னமை

## ப

பச்சைமண்ணும் சுட்டமண்ணும் ஒட்டாது
பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்
பசித்தவனில் நம்பிக்கை வைக்கலாகாது
பசுவைக் கொன்று செருப்புத்தானம் கொடுக்கலாமா

பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்
பட்டறி கெட்டறி பத்தைஞ்சு இறுத் தறி
பட்டால் அறிவன் சண்டாளன்
பணமென்றாற் பிணமும் வாய்திறக்கும்
பணம் பந்தியிலே குணங் குப்பையிலே
பண்ணிய பாவத்தைப் பட்டுத் தொலைக்கவேண்டும்
பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும்
பதறாத கருமம் சிதறாது
பந்திக்கு முந்து படைக்குப் பிந்து
பலதுளி பெரு வெள்ளம்
பலநாளைத் திருடன் ஒருநாள் அகப்படுவான்
பழகப்பழகப் பாலுந் தெவிட்டும்
பழிப்பன பகரேல்
பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது
பனிபெய்து வேளாண்மை விளையுமா
பன்றி பல குட்டி ஆனை ஒரு கன்று

## பா

பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெண்கொடு
பாம்பொடு பழகேல்
பால் தொட்டுப் பால் கறக்கவேண்டும்
பாலோடாயினுங் கால மறிந்துண்
பாவியார் போகுமிடம் பள்ளமுந் திட்டியாம்
பானையில் இருந்தாற்றான் அகப்பையில் வரும்

## பி

பிச்சையிட்டுக் கெட்டவனும் இல்லை, பிள்ளைப்பெற்றுக் கெட்டவளுமில்லை
பிள்ளைவரங் கேட்கப்போனவிடத்துப் புருஷனைப் பறிகொடுத்தாளாம்
பிறன்மனை புகாமை அறமெனத்தகும்

## பு

புகைக்கினும் கார்அகில் பொல்லாங்கு கமழாது
புத்திமான் பலவான்
புதன்கிழமை புத்தி கூர்மை

## பூ

பூமி திருத்தி யுண்
பூவிற்றகாசு மணக்குமா; புலால் விற்ற காசு நாறுமா

## பெ

பெண்ணென்றால் பேயுமிரங்கும்
பெண்ணுக்குப் பொன் இட்டுப் பார்
சுவருக்கு மண்ணிட்டுப் பார்
பெண்டுகள் கூடிடிற் பெரிய சண்டையே
பெரியாரைத் துணைக் கொள்
பெற்ற மனம் பித்தும் பிள்ளை மனங் கல்லும்
பெற்றாரைப் பேணி வாழ்
பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளையின் அருமை

## பே

பேசாதிருந்தாற் பிழை ஒன்றும் நேராது
பேயோடு பழகினும் பிரிதல் அரிது
பேதமை யென்பது மாதர்க் கணிகலம்

## பொ

பொய் சொன்னவாய்க்குப் பொரிமாவுங் கிடையாது
பொல்லாங் கென்பவை எல்லாந் தவிர்
பொறுத்தார் அரசாள்வர் பொங்கினர் காடுறைவர்
பொன்னின் குடத்திற்குப் பொட்டிட வேண்டுமா
பொன்னின் கத்தியென்று வயிற்றிற் குத்தலாமா

## போ

போகாத இடந்தனிலே போகவேண்டாம்
போதனை எளிது சாதனை அரிது
போம்பொழு தருந்துணை புரிந்த புண்ணியம்
போம்போது அவளோடும் போம்
போன காய்ச்சலைப் புளியிட் டழைப்பதா
போனதை நினைந்து ஆவது என்ன
போன நாள் மீண்டு வரப் போவதில்லை

### ம

மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே
மதியாதார் முற்றம் மதித்தொருகாற் சென்று மிதியாமை கோடிபெறும்
மந்திரங் கால் மதி முக்கால்
மந்திரிக் கழகு வரும்பொரு ளுரைத்தல்
மக்களுடை அருமையைப் பெற்றோர்களே அறிவர் மலடிதான் அறிவதுண்டோ
மணமாலை அருமையைப் புனைபவர்களே அறிவர் மட்டிக்குரங்கறியுமோ
மழைக்கா லிருட்டானாலும் மந்தி கொம்பிழக்கப் பாயாது
மனங் கொண்டது மாளிகை
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்
மன்னுயிரைத் தன்னுயிர்போல் மதி

### மா

மாரி யல்லது காரிய மில்லை
மானம் அழிந்தபின் வாழாமை முன்னினிதே

### மி

மிகைபடச் சொல்லேல்
மின்னுக் கெல்லாம் பின்னுக்கு மழை
மின்னுவ தெல்லாம் செம்பொன் அல்ல

### மீ

மீகாம னில்லா மரக்கலம் ஓடாது
மீதூண் விரும்பேல்
மீன் குஞ்சுக்கு நீச்சுப் பழக்கவேண்டுமோ

### மு

முதற் கோணல் முற்றுங் கோணல்
முதுகின்மேற் புண்ணென்றால் வேலி நுழையப் பயம்
முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்
முள்ளாலே முள்ளை எடு
முன்னவனே முன் நின்றால் முடியாத பொருளுளதோ
முற்பகல் உபகாரன், பிற்பகல் பிச்சைக்காரன்

## மூ

மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்

## மெ

மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு

## மோ

மோன மென்பது ஞான வரம்பு

## ய

யதார்த்த வாதி வெகுசன விரோதி

## வ

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வல்லான் வகுத்ததே வாய்க்கால்
வளவனுயினும் அளவறிந் தளித்துண்

## வா

வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும்
வாழ்வும் தாழ்வும் ஒருவன் பங்கல்ல

## வி

விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றில் விழலாமா
விளையாட்டுக் காயினும் பொய் சொல்லாதே

## வெ

வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வெறுங்கை முழ மிடுமா

## வே

வேகிற வீட்டிற் பிடுங்குகிறது அறுதி
வேண்டாப் பெண்டிர் கைபட்டாற் குற்றம்
கால் பட்டாற் குற்றம்
வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை
வேலிக்கு ஓணான் சாட்சி
வேலைக் கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு
வேலையைப் பார்த்துக் கூலியைக் கொடு

## வை

வைகறைத் துயி லெழு

## பரீக்ஷைவினு

1. கீழ் வரும் பழமொழிகளை விளக்கி எழுதுக;

   அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா; அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி; ஆக்கப் பொறுத்தவர் ஆறப்பொறுக்க வொண்ணுதா; ஆலும் வேலும் பல்லுக் குறுதி; இலங்கணம் பரம ஔடதம்; ஈயார்தேட்டைத் தீயரர் கொள்வர்; உடையவன் சொற்படி கமுகடி களைபறி; உளவில்லாமற் களவில்லை; ஊரோடுகில் ஒக்க ஓடு, ஒருவன் ஓடுகிற் கேட்டோடு; எட்டிபழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன.

2. பின் வரும் பழமொழிகள் அமைந்த பாட்டுக்களை அறிந்த வரையில் எடுத்துக்காட்டுக:

   கற்ருரைக் கற்ருரே காமுறுவர்; காலம் போம் வார்த்தைநிற்குங் கண்டாயே; சாந்துணையுஞ் சஞ்சலமே தான்; செய்த வினையிருக்கத் தெய்வத்தை நொந்து ஆவதென்ன; சொல்லம்பை வில்லம்பு வெல்லாது.

3. கீழ்வரும் பழமொழிகளை வைத்து இவற்றிற்கேற்பச் சிறு வாக்கியங்கள் எழுதுக;

   அடாத செய்பவர் படாத படுவர்; ஆருமற்ருர்க்குத் தெய்வந்துணை; ஆனைக்கும் அடி வழுக்கும்.

4. "பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்" என்னும் பழமொழியில் பத்தும் எவை?

## பதினைந்தாம் அதிகாரம்
## சிலேடை வாக்கியங்கள்

அடிப்பார் { அடிப்பவர்
அடி + பார் — அடியிலுள்ள கல் நிலம்

அரிபடும் { அரியப்படும்
* அரி + படும் — சிங்கம் அகப்படும், சாகும்

ஆறுடி { ஆறு ஆடிமாதம்
ஆறு + ஆடி — தெருவழியே திரியவன்

இரும்படியும் { இருந்து படியும்
இரும்பு + அடியும் — இரும்பை அடியும்

இளவாலை { யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு ஊர்
இளமை + வாலை — அதிக இளமையோடு கூடியபெண்

எழுவாய் { எழுந்து விடு
(வாக்கியத்தின்) எழுவாய்

ஏதுவாகும் { என்னவாகும்
காரணமாகும்

ஐம்பால் { ஐந்து வகையாக முடிக்கப்படுங் கூந்தல்
ஆண்பால் முதலிய ஐந்து பால்கள்

கண்ணாடி { பளிங்கு
கள் + நாடி — கள் விரும்பி

கற்பார் { படிப்பவர்
கல் + பார் — கற்செறிந்த பாறை; கல்லைப் பார்

காமாரி { சிவன்
கா — சோலை; மாரி — மழை, மழைக்காலம்

கேடலணங்கு { மூதேவி
கெடல் — கெட்டுப் போதல்,
அணங்கு — பெண்

சேவ்வாய் { சிவந்த வாய்
செவ்வாய்க் கிழமை

தங்கை { இளைய சகோதரி
தம் + கை — தமதுகை

---

* அரி என்னுஞ் சொல்லுக்குப் பல பொருளுண்டென்பதை இந்நூலிலுள்ள பல பொருள் குறித்த ஒரு சொல் என்னும் பாகத்திற் காண்க.

தலைவிதிவசம் { தலைவிதி + வசம் — தலைவிதியின் படி
தலைவி + திவசம் — இறந்த மனைவிக்குச் செய்யும் திவசம்

தாமரை { தாமரைப்பூ, இலை
தாவும் + மரை — பாயும் மரைமான்

திருக்கை { வட்ட வடிவமான வாலுள்ள ஒரு மீன்
அழகியகை

நங்கை { பெண்களுட் சிறந்தவள்
நம் + கை — நம்முடைய கை

பலகை { மரப்பலகை
பல + கை — அநேக கை

புத்தியிலாதவன் { நல்ல அறிவு இல்லாதவன்
புத்தியில் + ஆதவன் — அறிவிலே சூரியனை ஒப்பவன்

மாதங்கம் { யானை
மாது + அங்கம் — பெண்ணினுடைய அங்கம்
மா + தங்கம் — சிறந்த பொன்

வேங்கை { வேகிறகை
புலி, ஒரு மரம்

## பரீக்ஷவினா

1. கீழ் வரும் வாக்கியங்களுக்குத் தனித்தனி இருவகைப் பொருளமைத்து ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உபயோகித்து எழுதி விளக்குக ;
இரும்படியும்; இளவாலை; ஐம்பால்; கெடலணங்கு; புத்தியிலாதவன்.
2. மாதங்கம், வேங்கை என்னுஞ் சொற்களுக்கு தனித்தனி மூன்று கருத்துக்களமைய வசனங்கள் எழுதி விளக்குக:
3. முதலிலிருந்து வாசித்தாலும், இறுதியிலிருந்து வாசித்தாலும் உருவமும், கருத்தும் மாறுபடாத மூன்று வாக்கியங்கள் எழுதுக:

அநுபந்தம்.

# சிறந்த வசனங்கள் சில.

ஸ்ரீலஸ்ரீ நாவலர்அவர்கள் எழுதியன:

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தி யின்பம் பெறும் பொருட்டேயாம். (2-ம் பாலபாடம்.)

அப்பொழுது மனைவியார் "நீர் எம்மைத் தீண்டுவீராகில் திருநீலகண்டம்" என்று ஆணையிட்டார். அதைக்கேட்ட நாயகர் ............... அம்மனைவியாரைத் தொடாமல் நீங்கி, "இவர் 'எம்மை' என்று பன்மையாகச் சொன்னதால் இவரை மாத்திரமன்றி மற்றைப்பெண்களையும் நான் மனசினால் நினைத்தலுஞ் செய்யேன்" என்று உறுதிகொண்டார். (பெரியபுராணவசனம்.)

செல்வ மில்லாதவர், வறுமைத் துன்ப மொன்றினுன் மாத்திரமா, அத் துன்பம் மூலமாகச் செல்வர் வீட்டு வாயிலை நோக்கிச் செல்லுதற் றுன்பமும், அவரைக்காணுதற் றுன்பமும், கண்டாலும் அவர் மறுத்தபோது உண்டாகுந் துன்பமும், மருநவிடத்தும் அவர் கொடுத்ததை வாங்குதற் றுன்பமும் அதனைக் கொண்டுவந்து போசனத்திற்கு வேண்டு மவைகளைக் கூட்டுதற் றுன்பமும் முதலிய பல துன்பங்களாலும் நாடோறும் வருந்துவர். (நான்காம் பாலபாடம்.)

............... ஓய்வு நாளிலே தமது வயல் உழுததைக் கேள்வியுற்றறிந்த பாதிரியார் தம்மைக் கண்டித்த பொழுது, "நான் உழவில்லை, என் வேலைக் காரன் உழுததைக் கண்டு 'ஓய்வு நாளிலே வேலை செய்கிறுயா' என்று கோபித்துக் கொண்டு, நான் அவன் சமீபத்திற் போக, அவன் தன்னை நான் அடிக்க வருகிறேன் என்று பயந்து கலப்பையை விட்டோட, நான் போய்க் கலப்பையைப் பிடிக்க, மாடுகளைத் தடுத்துக் கொள்ளும் வல்லமை எனக்குக் கிழப்பருவத்தினுல் இல்லையாக, மாடுகள் உழுத பழக்கத்தில் உழ, அதைக் கண்ட யாரோ நான் உழுதேன்" என்று ஐயருக்குச் சொல்லினர் என்று சொல்லித் தப்பிக் கொண்டார். (யாழ்ப்பாணச் சமயநிலை.)

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை:

எல்லாப் பொருளும் ஒடுங்குமிடத்திலேயே உற்பத்தியாம் என்னும் அவினு பாவத்தால், உலகமுஞ் சங்கார காரணனிடத்தே ஒடுங்குதலின் அவனிடத்தி னின்றும் உற்பத்தியாம்; அவனையொழியத் தோற்றுவிப்பான் வேறெருவன் இலனென்பார் "வீக்குமாறரனுமவை வீந்தநாண் மீளப் பூக்குமாமுதல்" என்றும், உலகமே உருவமாக யோனிகளுறுப்பாம் வடிவென்பார் "பொன் னடி என்றுங் கூறினர் ............... படைத்தல் காத்தல் அழித்தலென்னும் முத்தொழிலுஞ் செய்வான் ஒருவனே யென்பது இச்செய்யுளின் கருத்து. (பா. ஆதிபருவ உரை.)

வித்துவான் தாண்டவராய முதலியார்:

"............... பூனே "நான் கங்கா தீரத்தில் நித்திய ஸ்நானம் பண்ணிச் சாந்திராயணம் முதலிய விரதங்கள் அனுட்டித்துக்கொண்டிருக்கிறேன்; நீ மிகவும் தருமவானுயிருக்கிருயென்று பக்ஷிகளால் எப்போதுங் கேள்விப் படுகிறதினுலும், வயது முதிர்ந்த வித்துவானிடத்திலே தருமங் கேட்க வேண்டு மென்று சாஸ்திரம் இருக்கிறதினுலும் நான் உன்னிடத்திற்கு வந்தேன்; நீ தருமத்தை விட்டு என்னைக் கொல்லத் துணிந்தாய்; இப்படி இல்லறத்தாருடைய ஆசாரம் எங்கும் பார்த்ததில்லை; சத்துருவும் தன்வீட்டிற்கு வந்தாற் சாதுக்கள் அவனுக்குச் சன்மானம் பண்ணுவார்கள். மரம் தன்னை வெட்டுகிறவனுக்கும் நிழல் கொடுக்கவில்லையா?"

(பஞ்ச தந்திரம்.)

ஆசிரியர். ம. க. வேற்பிள்ளை:

"தும்பிமுகர் தம்பி" என்னும் பாடத்தைத் தும்பிமுகனெம்பி எனப் பாடந் தந்து, அதனுள் எம்பி என்பதற்குத் தம்பி எனப் பொருளுரைத்து அது அப்பொருள் பயந்ததற்கு "எம்பியு மனுசனு மிளையோன் பெயரே" என் னும் பிங்கலந்தைச் சூத்திரப் பிரமாணமுமொன்று காட்டிச் சாதிப்பாருமுளர். எனக்குத் தந்தை யென்னும் பொருளில் என் என்னுந் தன்மைச் சொல்லோடு தொடர்ந்து தானும் அத்தன்மையின்பாற்படும் தந்தை யென்னும் முறைப்பெயர் அத்தொடர்ச்சிக்கண் அந்நிலை மொழியோடு விகாரமேற்று எந்தை என மரூஉமொழியாய் வந்தாற்போல, எனக்குத் தம்பி என்னும் பொருளில் என் என்னுந் தன்மைச் சொல்லோடு தொடர்ந்து தானும் அத் தன்மையின் பாற்படுந் தம்பி என்னும் முறைப்பெயர் அத்தொடர்ச்சிக்கண் அந் நிலை மொழியோடு விகாரமேற்று எம்பி என மரூஉமொழியாய் வந்தமையான், அது அத் தன்மையிடப் பொருள் தருவதல்லது படர்க்கையிடப் பொருள் தாராமையானும், ஈண்டுத் தன்மையிடப்பொருள் கோடல் சிறிதும் பொருந் தாமையானும் "இயற்பெயர் முன்னர்த் தந்தை முறைவரின்" "ஆதனும் பூதனுங் கூறிய வியல்பொடு" என்னும் முதற்குறிப்புடைய தொல்காப்பியப் புள்ளிமயங்கியற் சூத்திர விதிபற்றி, "மொழிந்த பொருளோடொன்ற வவ்வயின் மொழியா ததனையும் முட்டின்று முடித்தல்" என்னும் தந்திர வுத்தியான் அத்தொடர் மரூஉமொழி என்பது அறியக் கிடத்தலானும், "நீபமலர் மாலைபுனையுந், தந்தைநம ஆறுமுக வாதிநம சோதிநம தற்பரமதா மெந்தைநம வென்றுமிளை யோய்நம குமாரநம வென்று தொழுதார்" என வரும் இவ்வோரே செய்யுளிற்றனே தந்தைக்கும் எந்தைக்கும் தம்முள் வேற்றுமை இனிது தெளியப்படுதல் போல, "எம்பிக்கும் மென்னன்னை தனக்கும் மிறுதிக்கோர், அம்புய்க்கும் போர்வில்லி தனக்கும் அயனிற்குந், தம்பிக்கும் நம்மாண்மை தவிர்ந்ததே சயநிற்கும்" என வரும் இவ்வொரே செய்யுளிற்றனே தம்பிக்கும் எம்பிக்கும் தம்முள் வேற்றுமை இனிது

தெளியப்படுதலானும், மற்றும் இலக்கியங்களுள்ளும் தம்பி என்னும் பொருளில் எம்பி என்னுஞ் சொற்பிரயோகம் யாண்டுங் காணப்படாமையானும், "எம்பியை யிங்குப்பெற்றே னென்னெனக் கரியதென்றான்" என்னுஞ் சீவகசிந்தாமணிச் செய்யுளில் 'எம்பி' என்பதற்கு என்றம்பி என்றே நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையானும், பிங்கலந்தையின் வழிநூலாகிய சூடாமணி நிகண்டுநூலுடையார், அப் பிங்கலர் இளையோற்குப் பரியாயப்பெயராக வைத்தோதிய எம்பி என்பதை அஃதப் பொருள்தராமை கண்டு, தமது சூடாமணி நிகண்டில் தம்பியின் பெயர்விகற்பங்கூறும்வழித் தாமும் எடுத்தோதாது தள்ளிவிட்டமையானும், திவாகரம்முதலிய ஏனை நிகண்டுகளினும் அவ்வாறே அப்பொருளில் அச்சொல்லை எடுத்தோதாமையானும், இவ்வாறே தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களோடும் பேரிலக்கியங்களோடும் மாறுபட்ட தொன்றியாது; அது கொள்ளற்பாலதன்றித் தள்ளற்பாலதொன்றாகலானும், இன்னோரன்ன பிறவாற்றானும் அவர் பாடம் பொருந்தாமைகாண்க.

(திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை.)

### திரு. சு. சிவபாதசுந்தரமவர்கள், B. A.:

"உலகத்திலே பிழைசெய்கிறவர்கள் பெரும்பாலும் தாங்கள் செய்வது பிழையென்று நன்றாக அறிந்துகொண்டுஞ் செய்கிறார்கள். பொய்சொல்வது குற்றம்என்பது பொய்யனுக்குத் தெரியும். சூதாடுவது குற்றமென்பதைச் சூதாடுபவன் அறிவான்; அப்படியே குடிவகைபருகும் வைத்தியனுக்குக் குடிவகை தீயதென்பது நன்றாகத்தெரியும்; தீயபழக்கங்களிலே மனிதருக்கு ஒரு விருப்பம் உண்டு. தீய பழக்கம் பழகினால் அதை விடுவது பிரயாசம்; ஆதலினாற்றான் அநேகர் தாங்கள்செய்வது குற்றமென்று அறிந்தும் குற்றத்தைச் செய்கிறார்கள்; குடிவகை உடம்புக்குமாத்திரம் நட்டமானதா? அது மூளையைப் பழுதாக்கி, எல்லாவிதமான துஷ்டச் செய்கைகளையுஞ் செய்ய ஏவிவிடும், ஆதலாற் குடிவகையைப் போலத் தீயபொருள் வேறொன்றும் இல்லை. குடிவகையில் ஒவ்வொருதுளியும் நஞ்சு. இதை நன்றாக உணர்ந்து கொள்".

(சைவபோதம் முதற் புத்தகம்.)

### திருவனந்தபுரம் மகாராசாகல்லூரித் தலைமைப் பண்டிதராய் விளங்கிய, புலோலி, வ. கணபதிப்பிள்ளையவர்கள்:

*சந்திரவர்ணனை.*

"சந்திரனுள்ளே இருக்கும் மறுவைச் சிலர் முயற் களங்கமென்றும், சிலர் சமுத்திரத்தின் சேறு என்றும், சிலர் சாரங்கமென்றும், சிலர் பூமியின்

சாயை என்றும், சிலர் இந்திரநீல ரத்தினத்தின் ஒளியென்றும் தந்தமது மனத்துக்கிசைந்தவாறு சொல்கின்றனர். இரவிலுள்ள அந்தகாரமெல்லாம் பருகப்பட்டு இச்சந்திரனது வயிற்றில் நின்றன எனவே எனக்குத் தோன்றுகின்றது".

"சந்திர விம்பமானது ஆகாசமாகிய கல்லிலே அரைத்துத்திரட்டிய பரிமளச் சந்தனத்திரட்சிபோலத் தோன்றுகின்றது; அதனுள்ளிருக்கும் களங்கம், அச் சந்தனத்திரட்சியினுள்ளே சேர்த்த கஸ்தூரிபோலத் தோன்றுகின்றது".

"ஆ! ஆ! பெண்ணே! இச் சந்திரன் ஆகாசமாகிய தடாகத்தில் அலர்ந்த வெண்டாமரை மலரோ? மன்மதபாணங்கள் தீட்டுஞ் சாணைக்கல்லோ? சந்தியாகாலமாகிய ஸ்திரீயின் பந்தோ? இது யாது என்று பார்" என வில்ஹணகவி ஆநந்தாதிசயத்தினாலே சந்திரனை வர்ணித்தனன்.

(வில்ஹணீயம்.)

## வித்துவான் வேதநாயகம்பிள்ளை:

"எண்சாணுடம்பிற்குஞ் சிரசே பிரதானமாயிருப்பது போல், மகளிருக்குச் சகல குணங்களிலும் கற்புநிலையே மேலான ஆபரணமாயிருக்கின்றது. கற்புநிலை தவறாதவளுக்கு முக அழகு இல்லையாயினும், கலியாண வீட்டுப் பூமாலை போல் அவள் யாவராலுங் கனம்பண்ணப் பெறுவாள். கற்புநிலை கெட்டவள் அதி சுந்தரியாயிருந்தாலும், சுடுகாட்டு மாலையைப் போல் யாவராலும் இகழப்படுவாள். உலகத்தில் ஒருவனுக்குத் தீங்கு செய்கிறவன் அவனுக்குமட்டுந் துரோகியாகிறான். அந்நிய புருஷனைச் சேருகிற பெண்ணெனிலோ பலபேருக்குத் துரோகஞ் செய்கிறாள். அவள் தன்னையுங் கெடுத்து அந்த அந்நிய புருஷனையுங் கெடுத்து அவனுடைய சொந்தப் பத்தினிக்கும் பெரிய துரோகியாகிறாள்; அவளுடைய துர்மார்க்கத்தால் அவளுடைய புருஷனுக்கும் அந்நிய புருஷனுடைய பத்தினிக்கும் உண்டாகின்ற சஞ்சலமும் பொறாமையும் அதிகமல்லவா? அன்றியும், "கோடரிக் காம்பு குலத்துக்கீனம்" என்பது போல, கற்புநிலை கெட்டவள், தன்னுடைய உற்றார் பெற்றார் முதலியவர்களுக்கும், தன்னுடைய புருஷன்வழிச் சுற்றத்தாருக்கும் மாறாத அவமானத்தையும், இழிவையும், நிந்தையையுந் தேடிவிடுகிறாள். இந்த அநியாயமான உலகமானது அவள் செய்த குற்றத்திற்காக அவளுடைய புருஷனையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்தி நிரபராதிகளான அவர்களையுந் தண்டிக்கின்றது. மற்றைக் குற்றங்களெல்லாம் சில காலத்தில் மறைந்து போகும்; வியபிசார தோஷமோ என்றால் உலகமுள்ளமட்டும் மறையாது; அந்த வியபிசாரி இறந்தாலும் அவளுடைய அபகீர்த்தி இறவாமல் என்றும் நிலைநிற்கும்".

(பெண் கல்வி.)

**நாவலர் கோட்டம், ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை:**

"தூய்மையாவது நமது மனம், வாக்கு, செயல், காயம் என்னும் நான்கினும் அநுசரிக்க வேண்டிய சூத்தியாம், மனவழுக்கு, வாக்கழுக்கு செயலழுக்கு, காயவழுக்கு இவையெல்லாம் பெரியோரால் அருவருக்கப் படுவன ஆதலால், அவற்றை நாம் தள்ளுவது ஆவசியகமாம். தள்ளுவதுமோ மிக எளிய காரியமாம்; எளியகாரியமாயிருந்தும் அவைகளைத் தள்ளா தொழுகுவது அறிவின்மையாமன்றோ! கண்ணுக்கினியதாய்ப் பொன்போற் பழுத்ததாயினும், நாசிக்கினியதாய் நறுமணங் கமழ்வதாயினும், நாவுக்கினியதாய் அமிர்தம்போலச் சுவைப்பதாயினும், மலத்தினருகே வீழ்ந்து கிடக்கும் ஒரு சிறந்த மாங்கனியை யார்தாம் விரும்புவர்". (இலகு போதம்.)

**இந் நூலாசிரியர் எழுதிய வசனங்களுட் சில:**

"அவர்கள் வழி நடக்கும்பொழுது பட்ட சங்கடத்தைச் சொல்ல முடியாது. மழையிருளில் அவர்களுக்குச் செல்லும் மார்க்கந் தெரியவில்லை; அரசன், தேவியையும் கைபிற்பிடித்துக்கொண்டு ஆற்றுள் இறங்கிக் காலால் வழிதடவி முன்னே சென்றான். மந்திரி சிறுவனைஎடுத்துத் தோண் மேல் வைத்துப் பின்னேசென்றான். செல்லும்போது சில இடங்களிற் கட்டை காலை இடற நீரில் வீழ்ந்து தோய்ந்து எழும்புவார்கள்; மரவேர் என்று நினைத்துப் பாம்பை மிதிப்பார்கள்; கல் என்று கருதி ஆமைமீது ஏறிநிற்க, ஆமை நகர, அவர்கள் நீரில் வீழ்ந்து எழும்புவார்கள். இவ்விதமாகப் படாத பாடெல்லாம்பட்டு மின்னல் வெளிச்சத்தைத் துணையாகக் கொண்டு வழி பிடித்து ஒருவாறு ஆற்றைத்தாண்டிக் கரையேறினர்".

(இலக்கியவாசகம் மூன்றும் புத்தகம்.)

"வறுமை தான் பிடித்தவனை இழிதொழிலிற் புகுத்திவிடும். வறியவனை அவனுடைய பெற்றாரும் மனைவி மக்களுங் குறை கூறுவர். சுற்றத்தவர் அவனை அவமதிப்பர். வறியவன் சொல்லு எவரிடத்துஞ் செல்லாது. அவன் உலகத்திலே நடைப்பிணமாவான். நினைத்த கருமத்தை முடிக்கும்ஆற்றல் அவன்மாட்டு இல்லையாகும். வறுமை ஒருவனை அடையின் மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம், உயர்ச்சி, தாளாண்மை முதலிய மேலான குணங்களெல்லாம் அவனைவிட்டகலும். வறுமை கல்விக்குப் பெரும் இடையூறுயுள்ளது. வறியவன் ஆசிரியனுக்குக் கொடுத்தற்கு வேதனம் இல்லாமையினலே கல்லாது விடுகின்றான். அன்றியும், கற்றற்கு வேண்டிய புத்தகம் முதலிய உபகரணங்களைப் பெறுதற்கும் அவனுக்குப் பொருள் வேண்டும். வறியவன் கற்கப்புகுந்தவிடத்தும் கவலை அவனுள்ளத்திற் குடிகொண்டிருத்தலின், கல்வி அவனுள்ளத்தில் நன்கு பதியாது. இனிக் கல்வியறிவுடையோரும் பொருளைவேண்டிச் செல்வரைப் பின்சென்று இரப்பர், இதுபற்றியே "கொடிது கொடிது வறுமைகொடிது" என்றார் பெரியோரும். (சபையார் ஐந்தாம் பாலபாடம்.)

"மன்னவன் மனங்கலங்கிப் பின்னரும் மகளை நோக்கி, இன்னுமொன் றெடுத்துரைப்பான்: "குழந்தாய், சாவித்திரி, இவ்வுலகத்திலே தாஞ்சாக மருந் துன்பார் யாருமுண்டா? ஓராண்டினுள்ளே கணவனையிழந்து கைம்மைநெறிபூண்டு கண்ணீருங் கம்பலையுமாய் நீ சஞ்சலமுற, நாம் அதனைக் கண்ணுற் பார்த்துக் கொண்டு உயிர் வாழ்வோமா? மகளே, யானும் உன் தாயாகிய மாளவி தேவியும் பிள்ளையில்லையென்று பெருந்துயருற்று அருந்தவங்கிடந்து உலக மாதாவாகிய சாவித்திரிதேவியை வேண்டினோம்; அத்தேவியின் திருவருளால் நீ வந்து உதித்தனை; கல்வியிற் கலைமகளையுங் கட்டழகிற் கமலையையும் நிகர்த்தனை; உனக்கு யாதுந் தீதுறின் யாங்கள் உயிர்தரியேம்; ஆதலாற் சத்தியவானது குறைதிசயங்களை நோக்காதே; நீயாக உனக்குத்துன்பத்தை ஆக்காதே; உன் வாழ்வை வீணே போக்காதே; எங்கள் மனமகிழ்ச்சியை நீக்காதே; இனி ஒருபோதுஞ் சத்தியவானை மணஞ்செய்ய மனங் கொள்ளாதே; முனிவர் மொழியைத் தள்ளாதே; எங்கள் வார்த்தையை எள்ளாதே; எதிரொன்றும் விள்ளாதே" என்று மனம் நொந்து கூறினான்.

(ஆறும் பாலபாடம்.)

"வண்ணமகள் கூறிய வார்த்தை யெல்லாம் தூர்த்தனாகிய கீசகன் செவியுட் புகுந்தில. அவன் "என்னுருயிர் நீங்கினாலும், உன்னை அணைந் தன்றி அப்புற மகலேன்" என்று சமீபத்திற் சென்றான், வேங்கைவரக்கண்ட மான்போல் விரதசாரணி மெய்நடுங்க, மனம்பதைப்ப, நாணந்தலைப்பட, வியர்வைசிந்த, கண்ணீர்சொரிய, கூந்தல்சோர, இடைதுவள, நா வுலர ஓடிச் சென்று, சுதேட்டினையை அடைந்து; "அரசன்மாதேவியே! யான் ஆடவரைப் பாராவிரதம் பூண்டவளென்பதையும், கந்தருவர் ஐவர் எனக்குக் காவலா யுள்ளனரென்பதையும் முந்தியே உமக்குக்கூறியுள்ளேன்; இங்ஙனமிருப்ப, உமது தம்பியாங்கீசகன் என்மீது தகாதகாதல் கொண்டு, என்னுடன் பேசத் தகாத சில வார்த்தைகள் பேசினான்; உமது பின்னவனை நற்புத்திபுகட்டித் தடுத்துவிடுதிர்; இல்லையேல், அவன் மாண்டொழிவது திண்ணம்" என்று முறையிட்டாள்".

(ஏழாம் பாலபாடம்.)

**இராவணன்:** அன்னமே, என் ஆருயிரே, அஞ்சாதே; நான் என் சிரசுகளில் விளங்கும் கிரீடத்திலுள்ள இரத்தினம்போல் உன்னை மதித்து நடப்பேன்; அரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை முதலாம் அப்சர ஸ்திரீகள் உன் குற்றேவல்செய்ய, திரிலோகங்களுக்கும், வணங்காமுடியோ னாகிய எனக்கும் உன்னையே தலைவியாக்கிவைக்கின்றேன்.

**சீதை:** (தன் கரங்களாற் செவிகளைப் பொத்திச் சீற்றத்தோடு கூடிய வளாய் இராவணனை நோக்கி) ஏ, படிற்றொழுக்கம்பூண்ட புன்மகனே, அந்தணர் தெய்வத்திற்குஇடும் அவிப்பாகத்தைத் தனக்கென்று இச்சித்த நாயைப்போல, காகுத்தன்தேவிமீதா காதல்கொண்டாய்? இதற்காகவா இக் கபடவேடம் பூண்டாய்? நீ என்னை இச்சித்தமையினால் எனக்கு நேரக்கூடிய

கேடு யாதுமில்லை. இனிமேல் நீ உயிர்சுமந்து திரிவது முடியாதகாரியம்; என் பிராணநாதர்பாணம் உன்னுயிரைக் கவர்ந்து செல்லுமுன் நீ உயிர்தப்ப வேண்டுமேல் இவ்விடத்தை விட்டு ஓடிப் பிழைக்குதி.

**இராவணன்:** மாதே, உன் கணவன்விடுங்கணை, மன்மதன் பரமேசுவரன் மீது செலுத்திய பூங்கணைபோல், என்திண்ணிய மார்பகத்துப்பட்டுப் பயன் படா தொழியுமென்று அறிந்து கொள்ளுதிர்; ஆதலின் பெண்ணாரமுதே, என் கண்ணார்மணியே, காதலியே, அந்தப்பஞ்சபாணனே கொஞ்சமேனும் இரக்க மின்றி என்னை வருத்துகின்றான். அவன் செய்யும் வஞ்சனைக்கு அஞ்சி உம்மைத் தஞ்சமென்று வந்தடைந்தேன்; காலந்தாழ்க்காதிர் (என்று சொல்லி இராவணன் சீதாபிராட்டியின் அடிகளில் வீழ்ந்து இரக்கின்றான்).

**சீதை:** (இடியேறுண்ட நாகம்போல நடுநடுங்கி உயிர் பதைபதைத்து) இளையபெருமாளே! அபயம்! அபயம்! (என்று பன்னசாலையினுள்ளே ஓடி ஒதுங்குகின்றாள். இராவணன் தரையோடு பன்னசாலையை அகழ்ந் தெடுத்து, அதற்குளிருந்து சீதை கதறக்கதறத் தேரின்மீது வைத்து வேகபாகத் தேரைச் செலுத்திச் செல்கின்றான்).

(எட்டாம் பாலபாடம்).

"என் ஆன்மநாயகரே! தேவரீர் திருவரையிலே கந்தைத்துணியைக் கட்டிக்கொண்டு திருத்தோளில் மண்வெட்டியையும் திருமுடியில் மண்சுமக்குங் கூடையையும் வைத்துக்கொண்டு, வைகைநதிக்கரையில் தனக்குரிய பாகத்தைத் தேவரீருக்குக் காட்டும்படி வந்தியம்மை முன்செல்ல, அவ்வம்மையின் பின் கூலியாளராகத் தேவரீர் சென்றபொழுது, அத்திருக் கோலத்தைப் பாவியேன் கண்ணாரப் பார்த்துக் கருத்தாரச் சிந்தித்துக் கையார வழிபடு தற்குப் பாக்கியம் பெற்றிலேனே."

(மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரம்).

"நேசரத்தினம் நீட்டிய மோதிரத்தைக் கோபாலன் வாங்கிக்கொள்ளும் படி தன் கையை நீட்டினான்; கோபாலன் கை நீட்டியது மோதிரத்தை வாங்கித் தன் விரலில்அணிந்து கொள்வதற்கல்ல; வாங்கி வைத்துக்கொண்டு சமாதானஞ் சொல்வதற்கேயாம்; மோதிரத்தை வாங்கும்படி கோபாலன் கையை நீட்டவே, நேசரத்தினம் அவனுடைய அணிவிரலில் அந்த மோதிரத்தை இட்டு விட்டுப் புன்னகை செய்தாள். அணிந்துகொள்வது கோபாலனுக்குப் பிரியமில்லை யாயினும், உடனே மோதிரத்தைக் கழற்றிவிட அவனுக்கு மனமிருந்ததாயினும், தன்னாற் காதலிக்கப்பட்ட ஒரு யௌவனமானபெண் ஆதரவோடு இட்ட மோதிரத்தைப் போடவேண்டாமென்று தடுக்கவும், இல்லையேற் போட்டபின்னர்க் கழற்றிவிடவும் கோபாலனாலல்ல, மனசார ஆடவர் எவராலும் முடியாதென்றே நினைத்தல் வேண்டும். கோபாலன் மோதிரத்தைப் பார்த்தபடியே, "நேசம், நீர் என் விரலில் மோதிரம் இட்டது சரியல்லவே" யென்றான். "இடவேண்டிய விரலுக்குத் தான் இட்டிருக்கின்றேன்; அல்லாமலும் பாருங்கள், மோதிரம் விரலுக்குச்

சரியாய் (அளவாய்) இருக்கிறது; இது தேவச்செயலல்லவா" என்று நேசரத்தினம் விநோதமாகக் கூறினாள்.

(உலகம்பலவிதக் கதை - 1.—கோபால — நேசரத்தினம்).

## சோகரசம்

"என் கண்ணே! சுப்பிரமணியா! ஏன் பேசுகின்றாயில்லை? அடா துரையே! உன்னைப் பெற்ற பாவியைத் தன்னந்தனியே இந்த அந்தரமான காட்டில் தவிக்கவிட்டுப் போகலாமென்று நினைக்கின்றாயே, உன் அப்பரும் என்னைக் கைவிட உன்னை நம்பியல்லவோ வந்தேன், ஐயோமகனே! உனக்காகத்தான் இந்த உடலை இதுவரையுஞ் சுமந்து திரிந்தேன், இல்லாவிட்டால் முந்தியே கண்டிவாவியில் என்கவலையை எல்லாம் அமிழ்த்திவிடுவேன். என் செல்வக்குமாரா! நீ கால் உளைகிறதென்று சொல்ல, நான் உன்னைத்தூக்க வர, வேண்டாம் அம்மா, நீங்கள் என்னைச் சுமக்கமாட்டீர்கள்; நீங்களும் களைத்துப்போனீர்கள், இந்த மரத்தின் கீழ் இருப்போம் என்றாயே; என் கண்ணினின்றும் ஒருதுளி கண்ணீர் வரக்கண்டால் நீ பொறுக்கமாட்டாயே, இப்போது நான் தன்னந்தனியேயிருந்து கலங்கித் தாரைதாரையாய்க் கண்ணீர் விடக் கண்டும் ஒன்றும் பேசாமற் கிடக்கின்றாயே, கண்மணீ! பெற்றவயிறு பற்றியெரிகுதடா, என் வயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டிவிட்டுப் போகாதே; ஐயோ, கதிரைமலையானே, இந்த ஏழையோடா வன்மஞ் சாதிக்கின்றாய், சூரபன்மன், சிங்கன், தாரகன் இவர்களல்லவா உனக்கு எதிரிகள். ஆருமில்லாப் பாவியாகிய என்னுடன் எதிரிபண்ணலாமா! சயந்தனைச் சிறை மீட்டு அவன் அன்னை தந்தையரிடம் ஒப்புவித்த கருணாகரா, என் பிள்ளையை உயிர் மீட்டு எனக்குத்தா, கண்ணே சுப்பிரமணியா, என்ன மெல்லமெல்ல என்னை விட்டுப் போகலாமென்று பார்க்கிறாய், உந்த எண்ணம் ஒருபோதும் முடியாது, நீ உண்டு மாண்ட பழம், இன்னமும் இங்கே கிடக்கின்றது. உன்னுடன் நானும் வருகின்றேன், வருகின்றேன்" என்று சொல்லி, பாம்பு கடித்துமாண்ட தன் மகனை மடியில் வைத்துப் புலம்பிய சந்திரவதிபோல், நேசமலர் வயிற்றி லடித்துப் புலம்பிப் பின்னர் தானும் உயிர்விட நினைத்துத் தன் பக்கத்திற் கிடந்த இரண்டு பழங்களைக் கையில் எடுத்தாள்.

## வீராவேசம்

"...............செல்பவளை பின்னரும் வஞ்சத்துறவி இடையிற்றடுத்து, "கண்ணே, நேசம், நான் உன்னை வேறொன்றுங்கேட்கவில்லை, எனக்கொரு முத்தம் தந்துவிட்டுப்போ" என்று இரந்துகொண்டு இராவண சந்நியாசிபோல் நின்றான்.

நேசமலருக்கு ஒருவாறு ஆறியசிற்றம் பின்னர்ப்பெருந்தீயென மூண்டது; அவள் அவனைப்பார்த்து 'ஏ, பசுத்தோல் போர்த்தபுலியே, நீ சற்று முன்னர் சொன்னவார்த்தைகளால் நீ மனம் மாறிவிட்டாய் என்று நினைத்தேன். பெண்ணாசைகொண்டவர்களைச் சுட்டாலும் அடங்கார் என்று உலகத்திலே

சொல்லக் கேட்டிருக்கிறேன், உன்னிடத்தில் அதை நேரிற் கண்டேன், இந்திரன், சந்திரன், இராவணன், கீசகன், சுந்தன், உபசுந்தன் என்னும் இவர்களைப்போல நீயும் நிற்கின்ருய், உன் உயிருக்கு முடிவுதேடவந்த யமனென்று என்னை நினைத்துக்கொள், விளக்குச் சுடரைப் பழமென்று நினைத்து வந்து அதில் விழ்ந்து மடியும் விட்டிலைப்போல் நீயும் வீணே நாசமாகப்போகாதே, என்மனம் எரிகின்றது; என் உடம்பு பதறுகின்றது, நா வுலருகின்றது; ஏ சண்டாளா, உன்னைப்போன்ற தூர்த்தருடைய எண்ணத்திற்கு நான் உடன் படுபவளாயிருந்தால் யாழ்ப்பாணம் விட்டு இந்தக்கோலத்துடன் தன்னந் தனியே இங்குவந்திருக்கமாட்டேன். அநியாயமாய் மாண்டுபோகாதே, ஓடிப்போ'' என்று சொல்ல, அந்தவேடதாரி "என்னடி, அதிகம் பேசுகிருய், என் உயிர் போனலும் உன்னைத் தப்பிப்போகவிடுவேனே'' என்று சொல்லிக்கொண்டு, சிறிதுங்கூசாமல் நேசமலரைக்கிட்டி அவள் கரத்தை இறுகப்பிடித்து இழுத்தான்; "ஐயோ! முருகா! கதிர்காமத்தையா! கதிரமலையானே! என்மானம் போனது, நான் மாண்டேன். குழந்தாய் சுப்பிரமணியா, எழுந்திரடா.........'' என்று ஓலமிடவும் கொடியவன் மணல்மீது அவளை இழுத்துச் சென்ருன்.

"அடா மூர்க்கா, துஷ்டா, இவளைத்தனித்தவள் என்ருநினைத்தாய்? அடா இது எந்த இடம் என்பதை மறந்துவிட்டாயா'' என்ற வார்த்தைகள் சொல்லி முடிவதற்கிடையில், நேசமலரைப்பிடித்துள்ள அந்த வஞ்சகன் கையில் திரிதண்டினுல் ஒரு அடி விழுந்தது, அடிபட்டமாத்திரத்தே வேடதாரி நேசமலர் கரத்தைவிட்டுத் திரும்பிப்பார்ப்பதற்கிடையில், அவன் தலையிலும் ஒரு அடி விழ அவன் அடியின் உறைப்புப் பொறுக்கமாட்டாதவனுய் ஏதோ சொல்லிக்கொண்டு கங்கையில் இறங்கி ஓடினுன், அடித்தவரும் அவனைத் தொடர்ந்து கொண்டு ஓடினுர்; நேசமலர் அறிவுசோர்ந்து மணலின்மீது கிடந்தாள், இந்த அரவத்தாற் சுப்பிரமணியன் நித்திரைவிட்டெழுந்து ஒன்றும் புலப்படாமலிருந்து தியங்கினுன். தாயும் மணல்மீது படுத்திருப்பதைக்கண்டு, சமீபத்திலேபோய், "அம்மா, அம்மா,'' என்று அவளை எழுப்பினுன்.

(உலகம் பலவிதக்கதை - 2 — காசிநாதன் - நேசமலர்).

இதனைக் கேட்ட இராமன், "அம்மா, இது மெத்தவும் பரிதாபமான சரித்திரம்; ஆனல் அம்மா, ஒன்று கேட்கிறேன்; செட்டிதான் செத்துப் போனுனே; பின்பு அந்த வேளாளர் எழுபதுபேரும் ஏன் அநியாயமாக உயிர்விட்டார்கள்; செட்டி உயிரோடு இருந்தாலல்லவோ இவர்கள் அவனுக்குச் சொன்ன சொல்லைக் காப்பாற்றி நடக்கவேண்டும்; அவன் செத்த பின் இவர்கள் தங்கள்பாட்டிற்போகலாமே; சரகச்சொல்லிப் பின்பு இவர்களைக் கேட்பதார்'' என்ருன். நேசமணி புன்னகைசெய்து, "அப்படியல்ல, ராமன், வேளாளரின் மகத்துவத்தை நீ அறியாய்; வேளாளன் வயலிலே ஏர்பூட்டா விட்டால் சூரியனும் தேர்பூட்டமாட்டான் என்று கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பரே சொல்லியிருக்கின்ருர், அவர்கள் சத்தியத்தின் பொருட்டுத் தம்

முயிரைத் துரும்பாக மதித்துவிட்டனர்" என்று நேசமணி சொல்ல, ராமன், "அப்படியானால், இந்தக் காலத்திலுள்ள வேளாளரிடத்தில் இப்படிக் குணங்களைக் காணவில்லையே; இவர்களை ஒரு பொய் சொல்லும்படிகேட்டால் பத்துப்பொய் ஒரு நிமிஷத்திற்கிடையிற் சொல்லுவார்களே" என்றான். "ராமன், இவைகளெல்லாம் காலவித்தியாசமாகும்; இக்காலத்து வேளாளர் தங்கள் சாதிக்குரிய தொழிலை விடுத்துப் பலவகையான அடிமைத்தொழிலைப் பார்க்கத் தலைப்பட்டு விட்டமையினால் தங்கள் மகத்துவமுங் குறையப் பெற்றார்கள்; இதுதான் உண்மை" என்று நேசமணி சொல்லி முடித்தாள்.

(உலகம் பலவிதக்கதை - 3 — துரைரத்தினம் நேசமணி).

செந்தமிழ் மொழி வளம் முற்றிற்று.

உ

யாழ்ப்பாணம்

# ஸ்ரீ காந்தா அச்சகம்.

## எங்கள் அச்சகப் புத்தகசாலையில்,

இலக்கண இலக்கியங்கள், புராண இதிகாசங்கள், சமயநூல், நீதிநூல் முதலியவற்றோடு, பள்ளிக்கூட மாணவர்களுக்குரிய தமிழ் ஆங்கில பாடப் புத்தகங்கள், கொப்பிகள், கற்பலகை, பேனு, பென்சில் முதலி எல்லா உபகரணங்களும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

## அச்சிடுதற்குரிய உபகரணங்கள் :

அச்சிடுதற்காகிய 'கிளேஸ்' காகிதம், 'றவ்' காகிதம், பலநிற காகிதம், 'பாய்ங்பேப்பர்', கலிக்கோ, மாபிள், மை வகை முதலி வைகளும் சகாய விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## அச்சுவேலைகள்

இவ்வச்சகத்திற் சகலவிதமான புத்தகங்களும், சஞ்சிகைகளும், பெரிய சிறிய விளம்பரங்களும், விவாக விஞ்ஞாபனம் உபசாரணைப் பத்திரங்கள் முதலிய பல சில்லறை வேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்த முறையிலே தவணைதப்பாமற் செய்து கொடுக்கப்படும், எங்கள் வேலைத் திறமையை ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்,

*விலாசம் :*

**மனேஜர்,**

ஸ்ரீ காந்தா அச்சகம், 213, K. K. S. ரோட், யாழ்ப்பாணம்.